# கற்பக ஒளி

**வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்**

1972 45வது ஆண்டு 2017

நிறைவு மலர்




**வெளியீடு: (2018)**

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பக ஒளி



## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்

1972

# 45வது ஆண்டு நிறைவு மலர்

2017

வெளியீடு:-

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர் விபரம்

- மலர்ப் பெயர் : கற்பக ஒளி
- தொகுப்பு : மலர்க் குழு
- பதிப்புரிமை : வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி. (வ-து), மானிப்பாய்.
- பதிப்பாண்டு : 2018
- தொகுப்பாளர்கள் : திரு சு.சிவலிங்கம் (கல்வி அலுவலர்), கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.
  திரு க.முருகானந்தன் (காசாளர்), (வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி)
- அச்சுப் பதிப்பு : வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பதிப்பகம், யாழ்ப்பாணம்.
- வெளியீடு : வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி (வ-து) மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்!

ஈழத் திருநாட்டின் வடபுலத்தின்
பனை, தென்னை வள கூட்டுறவுச்
சங்கங்கள் காலத்தின் தேவைகருதி
1972ம் ஆண்டு தோற்றம் பெற்றவையே!
இந்த நாற்பத்தைந்தாண்டு கால
நிறைவில் சங்கங்கள் சாதனைகள்,
வெற்றிகள் என வீறுநடை போடுவதற்கு
காரணகர்த்தாக்களாக இருந்து தங்களின்
கடின உழைப்பினால் உருவாக்கிய
பனை தென்னை வள சங்கங்களின்
உறுப்பினர்கள், பணியாளர்கள்
ஆகியோரின் கொள்கை மற்றும்
வழிகாட்டு திட்டங்களாலும்
உதயத்து சூரியன்போல் உருவான
தலைமைகளும், வினைத்திறன்மிக்க
முகாமைகளும் ஒன்றிணைந்து
பனைமரம்போல் உயர்வான
பணித்தொகுதிகளாக வளர்ச்சி
கண்டுள்ளது என்னும் தித்திக்கும்
செய்தியுடன் கூட்டுறவாளர்கள்
அனைவருக்கும் இந்த "கற்பகஒளி"
என்னும் மலரினை நன்றி உணர்வுடன்
தொகுத்து சமர்ப்பணம் செய்வதையிட்டு
பெருமகிழ்வடைகின்றோம்.



**தொகுப்பாளர்கள்:-**
சு.சிவலிங்கம்
க.முருகானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பக ஒளிக் கதிர்கள்


- ஆசிச்செய்திகள்
- வாழ்த்துச் செய்திகள்
- தலைவரின் எண்ணத்திலிருந்து.....
- பொதுமுகாமையாளரின் உள்ளத்திலிருந்து....
- கொத்தணி வரலாறு
- கவிதைகள்
- சங்க வரலாறுகள்
- கட்டுரைகள்
- விளம்பரங்கள்
- ஆய்வுக் கட்டுரைகள்
- நன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செஞ்சொற் செல்வர்
கலாநிதி ஆறு திருமுருகன்
தலைவர்,
தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பளை.

கற்பகதருவினை காத்திடும் வலிகாமம் பிரதேச பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வெளியீடான "கற்பக ஒளி" மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். எமது மண்ணில் தென்னை பனை வளத்தை அடிப்படையாகக் கொண்டு பலருக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் இச்சங்கத்தின் சேவை பாராட்டுக்குரியது. எதிர்காலத்தில் மதுவை ஒழித்து, கற்பக தருக்களால் பெறப்படும் உயரிய பலன்களை மக்களுக்குப் பயன்படும் வகையில் இச்சங்கம் புதிய திட்டங்களை உருவாக்க வேண்டும் என அன்புடன் இவ்வேளையில் வேண்டுகின்றேன். சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கும், பணியாளர்களின் பிள்ளைகளுக்கும் கல்வி விருத்திக்கு உதவுவது குறித்து வாழ்த்துகின்றேன். முன்பள்ளிகளின் வளர்ச்சியிலும் தொழிற்பயிற்சிகளில் அக்கறை செலுத்துவதிலும் சங்கம் ஆற்றும் தொண்டு மெச்சத்தக்கது. சமுதாயத்தை நல்ல பாதையில் அழைத்துச் செல்லக்கூடிய நற்கருமங்களை மேலும் வளர்க்க வேண்டி எனது இதயபூர்வமான ஆசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"பாடுபட்டு உழைப்பவர்க்கே இப்பாரிடம் சொந்தமையா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரருட்திரு கலாநிதி
யஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம்
யாழ். மறைமாவட்ட ஆயர்.

இறை இயேசுவின் நாமத்தினால் எனது இனிய நல்வாழ்த்துக்கள். "பனை வளம் பெருக்கி, பயன்பல பெற்று, மனைவளம் சிறந்து, மகிழ்வுடன் வாழ்வோம்" எனும் மகுட வாக்குடன் வலிகாமம் பிரதேச பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 45வது வருட நிறைவிலே மலர இருக்கின்ற "கற்பக ஒளி" எனும் சிறப்பு மலருக்கு ஆசீர் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

பனை, தென்னை. இவை யாழ்ப்பாணத்தின் மண் வாசனையை, பழமையை, இயற்கையின்பால் கொண்டுள்ள செழுமையை சிறப்புற எடுத்துக்காட்டும் காலத்தினுள் கரைந்திடாத அடையாளங்கள். மனிதத்தேவைப்பாடுகளில் ஏற்பட்டுள்ள புரட்சி கரமான சிந்தனையும், அதற்கான நவீன தொழில்நுட்பத்தின் உட்புகுத்தலும், இயற்கை உற்பத்திகளை புறந்தள்ளி செயற்கை உற்பத்தியின்பால் மனிதன் ஈடுபாடு கொள்ளத் தூண்டுகின்றது. இதனால் மனிதனின் இயற்கையுடனான உறவு நிலை குன்றி மனிதன் இயற்கையிலிருந்து அந்நியப்பட்டுவிடுகின்றான்.

பரம்பொருளும், மனிதனும், இயற்கையும் நல்லுறவு நிலைகொள்ளும்போது வாழ்வு சீரும், சிறப்பும் பெறுகின்றது. கற்பக ஒளியாக பிரகாசிக்கும் இச்சிறப்பு மலர் புதிய பல சிந்தனைகளை சுமந்து வருவதுபோன்று, வலிகாமம் பிரதேச பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களாகிய நீங்களும் முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், புலமைப்பரிசில் மாணவர்கள், அங்கத்தவர், பணியாளர்கள் மட்டில் முன்னெடுக்கின்ற நல்ல நோக்குடனான பணிகள் இன்னும் பரந்து, பலரும் பயனடையும் விதமாக அமையவேண்டுமென்று வாழ்த்தி இறைவனைப் பிரார்த்தித்து ஆசீர்கள் கூறி நிற்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*திருமதி அனந்தி சசிதரன்,*
*அமைச்சர்,*
*மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல்,*
*சமூகசேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும்*
*விநியோகமும், தொழில்துறையும் தொழில்முனைவோர்*
*மேம்பாடும், மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சு,*
*வடக்கு மாகாணம்.*

வலிகாமம் பிரதேச பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 45வது ஆண்டு நிறைவினை முன்னிட்டும், வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் 30வது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டும் வெளியிடப்படுகின்ற "கற்பக ஒளி" மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

நாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவியபோதிலும் தெல்லிப்பழை, சுன்னாகம், கோண்டாவில், மானிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு, காரைநகர் ஆகிய 07 பனை தென்னை வள அ.கூ. சங்கங்களும் மக்கள் பணியில் 46வது ஆண்டிலும் அவற்றிற்கு வழிகாட்டியாக, உறுதுணையாக செயற்பட்டுவரும் வலிகாமம் கொத்தணியானது மக்கள் பணியில் 31வது ஆண்டிலும் காலடி எடுத்து வைப்பது பெருமைப்படவேண்டிய ஒன்றாகும்.

"கூட்டுறவே நாட்டுயர்வு" என்பதற்கிணங்க வாழ்வாதாரத்திற்காக போராடுகின்ற மக்களை உள்ளூர் மூலப்பொருட்களைக் கொண்டதான பொருட்கள் உற்பத்தியில் ஈடுபடுத்தி, அவர்களது வாழ்வில் ஒளியை ஏற்படுத்தும் முயற்சியில் இச்சங்கங்கள் ஈடுபடுவது பாராட்டுதற்கும் போற்றுதற்கும் உரியதாகும்.

மேலும் வலிகாமம் கொத்தணியானது பணியாளர் நலன்புரித் திட்டங்கள், அங்கத்துவ சங்கங்களின் பணியாளர்களுக்கு மாதாந்த ஓய்வுநலக் கொடுப்பனவு, மருத்துவ பரிசோதனைத் திட்டங்கள், மற்றும் அவர்தம் பிள்ளைகளுக்கான கல்வி ஊக்குவிப்பு உதவிகளுடன் கூடிய பொதுப்பணிகளை சிறந்த முறையில் மேற்கொண்டு பலரது பாராட்டுதல்களையும் பெற்றுக்கொண்டமையும் அறியப்படுகின்றது.

இச்சங்கங்களும் கொத்தணியும் கூட்டுறவாளர் பணியிலே மெனமேலும் வளர்ச்சியடையவும், சிறப்பான சேவையை பொதுமக்களுக்கு வழங்கவும் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**"கற்பக ஒளி தமிழர்தம் வாழ்வில் ஒளி பரப்புக"**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



திரு நா.வேதநாயகன்,
அரச அதிபர்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

வலிகாமம் பனை தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 45வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியீடு செய்யப்படும் "கற்பக" ஒளி என்னும் சிறப்பு மல ருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். யாழ்ப்பாணத்தின் சிறப்பினை வெளிப்படுத்தும் கற்பகதரு மூலம் கிடைக்கும் பயன்கள் பற்பல. இப் பனை தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கம் மக்களுக்கு பயனுள்ள வகையில் கைப் பணிப் பொருட்களையும், கருப்பட்டி, சீனி உற்பத்தியினையும் சிறப் புற முன்னெடுக்க வேண்டும். மக்களுக்கு பயனுள்ள வகையிலும், உள்ளூர் தயாரிப்புக்களை மேம்படுத்தலுக்குமான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தமது அங்கத்தவர்களின் ஓய்வுகாலக் கொடுப்பனவு, இலவச மருத்துவத் திட்டம், பணியாளர்களுக்கான நலன்புரித்திட்டம், மாணவர் களுக்கான புலமைப்பரிசில் திட்டங்களை வழங்கி, கொத்தணிப் பணியாளர்களுக்கான நலன்புரித்திட்டங்களை நிறைவாக வழங் குவதாக அறியப்படுகின்றது. மேலும் மக்கள் நலன்சார்ந்து தமது உற்பத்திகளை பெருக்கவும் வேண்டிக்கொள்கின்றேன்.

"கற்பக ஒளி" சுடர் விட்டுப் பிரகாசிக்க உழைத்துக்கொண்டிருக் கும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினரை பாராட்டி, கற்பக ஒளி அனைவருக்கும் பயனுடையதாக அமைய என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



Dr.இ.சிவசங்கர்,
தலைவர்.
பனை அபிவிருத்திச் சபை.

வடபுலத்தின் பெருவளம் பனை என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இவ்வளம் வழங்கும் அரிய ஊட்டச் சத்துமிக்க சாற்றினை, உயரிய பனையிலிருந்து சேகரித்து வழங்கு வோரை கூட்டுறவு முறையில் ஒன்றுபடுத்தி, பல ஆளணிக் கட்டமைப்புடன் வளம்சார்ந்த சமூகப் பொருளாதார அபிவிருத்திப் பாதையில் பனம் சாற்று உற்பத்தி தொழிற்சாலைகளுடன் இன்று 45 வருட காலங்களில் இன்றைய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் வளர்ச்சி கண்டுள்ளன.

1972ம் ஆண்டு தனித்தனியாக ஆரம்பிக்கப்பட்ட சங்கங்கள், கொத்தணிகளாகவும், கொத்தணிகள் இணையங்கள் மற்றும் வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களின் சமாசம் ஆகவும் ஆளணிக் கட்டமைப்பு இலகுபடுத்தப்பட்டு, செயற்பட்டு வருவது வளர்ச்சிக்குரியதாகும். இவ்வமைப்பில் தோற் றம்பெற்ற வலிகாமம் கொத்தணியானது சுன்னாகம், தெல்லிப்பளை, சங்கானை, மானிப்பாய், கோண்டாவில், பண்டத்தரிப்பு, காரைநகர் ஆகிய பனை தென்னை வளச் சங்கங்களின் இணைந்த செயற் பாட்டில் முதன்மை வகிக்கின்றது.

இக்கொத்தணியானது, 1988ம் ஆண்டு தனது பணியினை ஆரம்பித்து, தனது உற்பத்தியிலும், வாழ்வாதார திட்டங்களை நடை முறைப்படுத்துவதிலும், மகளிர் ஊடான செயற்பாட்டிலும், சேவை வழங்கி, வளமான சங்கமாக தன்னை 30 வருடங்களில் நிலை நிறுத்தி நிமிர்ந்து நிற்கின்றது. இக்கொத்தணி மேன்மையுற சேவை வழங்கியவர்களையும், சேவை வழங்கி வழி சமைப்போரையும் பனை அபிவிருத்திச் சபை வாழ்த்தி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



திரு நா.கணேசன்,
தலைவர்.
வடமாகாண பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
யாழ்ப்பாணம்.

நான் இக்கூட்டுறவுத் துறையிலே கடந்த 45 வருடங்களாக அங்கத்தவராக என்னை இணைத்துக்கொண்ட தோடு மட்டுமல்லாது, இத்துறைசார் நிறுவனங்களிலே நிர்வாக உறுப்பினராக, செயலாளராக, தலைவராக பதவி வகித்த வகையில், இந்நிறுவனங்களின் ஆரம்பம் முதல் இன்றுவரையான அவற்றின் வளர்ச்சியினை கண்டு பெருமிதம் அடைகின்றேன்.

எமது அங்கத்துவ நிறுவனமான வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியானது தமது கொத்தணிக்குட்பட்ட உறுப்புரிமைச் சங்கங்களின் அங்கத் தவர்கள், பணியாளர்கள், மகளிர்குழு உறுப்பினர்களிற்கு அவர்கள் சார்ந்த சமூக மேம்பாட்டிற்காக அதிசயிக்கத்தக்க வகையிலான நலத் திட்டங்களை மிகவும் நேர்த்தியாக தொடர்ந்து செயற்படுத்தி வருகின் றமையும், அதன் தொடர்ச்சியாக இச்சங்கங்கள் உருவாகி 45 ஆண்டுகள் நிறைவடைவதனை முன்னிட்டு "கற்பக ஒளி" என்னும் மலரினை வெளியிட்டு வைப்பதும் எமது நிறுவனங்களிற்கு என்றும் பெருமை சேர்க்கும் விடயமாகும்.

வலிகாமம் கொத்தணியின் இம் முன்னுதாரணமான செயற் பாட்டிற்கு மனமார்ந்த பாராட்டினை தெரிவித்துக்கொள்வதோடு, தனது அங்கத்துவ சங்கங்களின் அனைத்து தேவைகளையும் நிறைவுசெய்து, அங்கத்தவர்கள், பணியாளர்களின் வாழ்வு சிறப்புற அமைவதற்கு நீண்டு நிலைத்து நின்று சேவையாற்றவும், கொத் தணியால் வெளியிடப்படும் "கற்பக ஒளி" மலர்" சுடர்வீசி பிரகாசிக் கவும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடை கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு நா.சோதிநாதன்,
உதவி மதுவரி ஆணையாளர்.
வடமாகாணம்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 45வது ஆண்டு நிறைவைக் கொண்டாடி "கற்பக ஒளி" என்னும் சிறப்பு மலரை வெளியிடுவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. அதிலும் என்னை வாழ்த்துச் செய்தி வழங்கக் கேட்டுக்கொண்டமை இரட்டிப்பு மகிழ்ச்சி.

1972ம் ஆண்டு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றம் பெற்றன. இன்று 45 ஆண்டுகள் கடந்த நிலையில் இவ்வாறு சிறப்பு மலர் வெளியிட்டுக் கொண்டாடுவதோடு மட்டும் நில்லாது, கடந்து வந்த காலங்களை கருத்தில் எடுத்து, அதை ஒரு பாடமாகக் கொண்டு, எதிர்காலத்தை வரையறுக்கக்கூடிய வாறான செயற்திட்டங்களை முன்வைத்தல் வேண்டும்.

நான் 1985இல் மதுவரித் திணைக்களத்தோடு இணைந்து கொண்டது முதல் கடந்த 32 வருடங்களாக இந்தப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுடன் அலுவலகம் சார்ந்து மட்டுமல்லாது தனிப்பட்ட வகையிலும் நெருங்கிய தொடர்புபட்டவனாக நிற்கின்றேன். உண்மையில் இச் சங்கங்கள் கள்ளு உற்பத்தி, விற்பனைச் செயற்பாடுகளை மட்டுமன்றி, தங்களது வளர்ச்சிப் பாதையில் பல்வேறு வகையான பயனுள்ள செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது மிகவும் மகிழ்ச்சியான விடயங்கள். அண்மையில் சில சங்கங்களின் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களுக்கு நானும் அழைக்கப்பட்டடிருந்தேன். புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. (சா/த, உ/த.) சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்புக்கள் செய்யப்பட்டு, வெகுமதிகள் வழங்கப்பட்டு உற்சாகப் படுத்தப்பட்டமை, சிறந்த தொழிலாளர்கள், பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டமை மிகவும் முன்னேற்றமான செயற்பாடாகும்.

45 ஆண்டு கால வளர்ச்சிப் பாதையில் கொத்தணிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாசம் தோற்றுவிக்கப்பட்டமை, வடிசாலை, போத்தலடைப்பு நிலையம், வெல்ல உற்பத்தி நிலையம் என பற்பல சான்றுகள் வளர்ச்சிப் பாதைக்கு உறுதுணையாகின்றன. சொந்தக் காணி, கட்டடம், சொந்த உற்பத்திச்சாலை என புதுயுகம் படைத்திருக்கும் நிலை போற்றத்தக்கதாகும்.

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் பல முன்பள்ளிகள் இச்சங்கங்களினால் நடாத்தப்பட்டு வருகின்றமை மிகவும் பாராட்டத்தக்க ஒரு விடயமாகும். முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்களின் வேதனம், சீருடை, சத்துணவு என்பன கொத்தணியால் வழங்கப்படுவது நிச்சயமாக பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும். இருப்பினும் அவர்களது 45 ஆண்டுகால வளர்ச்சிப் பாதையில் இவர்கள் இன்னும் எவ்வளவோ செய்திருக்க வேண்டும். ஆனாலும் அவர்கள் செய்யவில்லை என்றே எனக்குத் தோன்றுகின்றது. உண்மையில் அவர்கள் எதிர்நோக்கிய நடைமுறைச் சிக்கல்க்ள் பற்பல. கூட்டுறவுத் திணைக்களம், மதுவரித் திணைக்களம், பொலிஸ் திணைக்களங்களின் இறுக்கமான நடவடிக்கை இவர்களது வளர்ச்சிக்குக் குந்தகம் ஆகும்.

அவ்வாறு இருப்பினும் இவர்கள் அவற்றை எல்லாம் வெற்றி கொண்டு சிகரத்தை அடைந்து, இன்று இந்த "கற்பக ஒளி" என்ற நூலை வெளியிடுவது மிகவும் பாராட்டத்தக்க ஒன்றாகும். அந்த வகையில் இந்த மலர் சிறப்புற வெளிவருவதற்கு எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களை சமர்ப்பித்து விடைபெறுகின்றேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



திரு. தி.சுந்தரலிங்கம்,
தலைவர்,
மாவட்டக் கூட்டுறவுச் சபை,
யாழ்ப்பாணம்.

### கூட்டுறவுத் துறையின் ஒளியாக மிளிர வாழ்த்துகின்றேன்

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியால் வெளியிடப்படும் "கற்பக ஒளி" என்னும் இம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழுங்குவதில் மனநிறைவு அடைகின்றேன்.

"கற்பகதரு" எனப் போற்றப்படும் பனைமரம் எமது மண்ணின் பெருவளம். இப் பனை, தென்னை மரங்களின் உற்பத்திகளை மூலவளமாகக் கொண்டு தொழிற்பாடுகளை செய்துவரும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியானது உற்பத்திகளை செய்து, சந்தைப்படுத்துவதோடு, தனது அங்கத்துவ சங்கங்களுக்கும் அதனூடாக அங்கத்தவர்களுக்கும் பல சேவைகளை செய்துவருகின்றது.

குறிப்பாக அங்கத்தவர்களுக்கு ஓய்வு நலக்கொடுப்பனவு, பணியாளர்களுக்கு நலன்புரிச் சேவைகள், முன்பள்ளி ஆசிரியர், மாணவர்களுக்கான சேவைகள், பயிற்சிகள் என தனது சேவைகளை விரிவுபடுத்தி சிறப்பாக செயற்பட்டு வருகின்றது. தற்போதைய சூழலில் கூட்டுறவு நிறுவனங்கள் எதிர்நோக்கிவரும் கடினமான பல தடைகளைத் தாண்டி வெற்றிகரமாக இயங்கிவரும் இந்நிறுவனம் வெளியிடவுள்ள "கற்பக ஒளி" கூட்டுறவுத்துறையின் ஒளியாக மிளிர எனது வாழ்த்துக்களை கூறி அமைகின்றேன்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



திரு பொ.மோகன்,
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

பனை வளம் நிறைந்த வடபுலத்தின் யாழ். மாவட்டத்திலே பனையை மூலாதாரமாகக் கொண்டு தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடாத்தும் ஏழைத் தொழிலாளர்களின் நலன் கருதி அவர்களின் தொழில் மேம்பாட்டிற்காகவும், வலுவூட்டலை மேற்கொள்வதற்காகவும் அத்துறைசார்ந்த சமூக ஆர்வலர்களினால் 1972ம் ஆண்டு உருவாக்கப்பட்டது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகும். இச்சங்கங்கள் மேலும் தமக்கிடையே வலுவான அமைப்புக்களாகத் திகழத்தக்க வகையில் குறைந்தது மூன்றுக்கு மேற்பட்ட சங்கங்கள் ஒன்றிணைந்து கொத்தணிகளாகப் பதிவு பெற்றன. இந்த வகையில் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களை அங்கத்தவர்களாகக் கொண்டு வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி பதிவுசெய்யப்பட்டது.

அங்கத்தவர்கள் தமது கடின உழைப்பின் ஊடாக கொத்தணியைக் கட்டியெழுப்பியுள்ளார்கள். இந்நிலையிலே கொத்தணியைக் காலத்திற்கு காலம் பொறுப்பேற்கும் இயக்குனர் சபையும் அயராத உழைப்பின் ஊடாக அங்கத்தவர்களிற்கு அளப்பரிய சேவைகளைப் புரிகிறது. அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக வருடாந்தம் கூட்டுறவுதின விழாவின்போது புலமைப்பரிசில் திட்டங்களையும், உதவு தொகைகளையும் வழங்கி மகத்தான சேவையை ஆற்றுகின்றது.

எனது சேவைக் காலத்தில் இவ் வலிகாமம் கொத்தணியினால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றகரமான நடவடிக்கைகளுக்கு தடையின்றியும், காலதாமதமின்றியும் அனுமதிகளை வழங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளதுடன், செயற்பாடுகள் நிறைவேறுவதையும் அவதானித்தும் வந்துள்ளேன்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் 45 வருடங்களைக் கடந்து வந்துள்ள நிலையில், கொத்தணியின் செயற்பாடுகளை மேலும் விஸ்தரித்து அங்கத்தவர்களிற்கு நலத்திட்டங்களை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதுடன், சமூக நலனில் அதிக அக்கறை செலுத்தி விழிப்புணர்வுடனான மக்கள் சேவையை ஆற்ற வேண்டுமென இந்நிறைவு விழாவினைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் உங்கள் அனைவரையும் அன்பாகக் கேட்டுக்கொள்வதுடன், நிகழ்வு வெற்றிபெற வாழ்த்துகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



திரு க.துரைசிங்கம்,
தலைவர்,
தென்மராட்சி பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
கொத்தணி,
வரணி.

எமது நாட்டில் பல வளங்கள் இயற்கையாகக் கிடைக்கின்றபோதிலும் பனை வளங்கள் எமக்கு இறைவனால் தரப்பட்ட ஒரு கொடையாகும். மக்கள் தமது பொருளாதார தேவைகளை நமது நாட்டிலேயே பெறக்கூடியதாகவிருந்தாலும், அவ்வாறு கிடைத்த வளங்களை தமது முயற்சியால் எவ்வளவு சிறப்பாக பயன்படுத்துகிறார்களோ, அதிலேயே அவர்களின் உயர்ச்சி தங்கியுள்ளது. மேலும் 1992இல் இருந்து முன்பள்ளி மாணவர்களுக்கான இலவச சத்துணவு, சீருடை, என்பவற்றோடு, முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சீருடையையும் இலவசமாக வழங்கி வருகின்றது. அத்துடன் பல நலத்திட்டங்களும், அங்கத்தவர்களுக்கான ஓய்வூதியம், பணியாளர் ஓய்வூதியம், கல்விக்கொடைத் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இது எல்லோருடைய வாழ்க்கையிலும் பனைமரம் தரும் பயன் ஒரு வெற்றிப் படியாகும். கற்பகதருவென அழைக்கப்படும் பனை தென்னை மரங்கள் எங்கள் வாழ்க்கைக்கு ஊன்றுகோலாய் இருந்து, எங்கள் கஷ்ட துன்பங்களைப் போக்கி, நமது பிள்ளைகளின் வாழ்க்கையில் முன்னேற்றங்களையும் கொடுத்து, பெரிய நிலையில் வைத்துள்ள பனை தென்னை வளங்களை என்றும் ஆண்டாண்டு காலங்களுக்கும் பேணி பாதுகாத்து, தனது பாதையில் வலிகாமம் கொத்தணியானது வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



திரு க.நடராசா (ஆசிரியர்),
பனை வள நிறுவனங்களின் ஸ்தாபகரும்,
பனை அபிவிருத்திச் சபையின்
முன்னாள் தலைவரும்.

எமது பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் நாற்பத்தைந்து வருடங்களாக, அனைவரும் வியக்கும்படி மகத்தான சேவைகளை ஆற்றியுள்ளன என்ற உண்மையை யாராலும் மறுக்கமுடியாது. "ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தாய்" போல என் மனம் புளகாங்கிதம் அடைகிறது. ஆரம்ப காலத்திலிருந்து 45 வருடங்களுக்கு மேலாக சொல்லமுடியாத அளவுக்கு வேதனைகளையும் சேதனைகளையும், தாங்கி வந்துள்ளீர்கள். உங்கள் திறமைகளையும், தியாகங்களையும் வாழ்த்த வார்த்தைகள் இல்லை. வணங்கி நிற்கிறேன். எந்த சூறாவளியையும் தாங்கி நிற்கும் பனைமரம்போல, நீங்கள் நிமிர்ந்து உயர்ந்து நிற்கிறீர்கள்.

எங்கள் சங்கங்களின் 45 ஆண்டு கால வரலாறு மிகப் பெருமைப்படத்தக்கது. வலிகாமம் கொத்தணியால் சங்கங்கள் சார்பாக வெளியிடப்படுகின்ற இக் கற்பக ஒளியானது சில வகையான செயற்பாடுகளில் இருளில் மூழ்கியிருக்கும் சங்கங்களுக்கு ஒளி கொடுப்பதாக அமையக்கூடியது.

ஒரு காலகட்டத்தில் எங்கள் சங்கங்கள், இலங்கையிலேயே மிகச் சிறந்த கூட்டுறவுக் கூடமாகக் கருதப்பட்டது. இப்போது ஆசியாவிலேயே சிறந்த ஸ்தாபனமாகக் கருதப்படும் நிலைக்கு நீங்கள் வளர்ந்துள்ளீர்கள். உண்மையான கூட்டுறவுத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையிலுள்ள பல்வேறு ஸ்தாபனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு முன்மாதிரியாக நடந்துள்ளீர்கள். நிர்வாக சபையில் அல்லது பதவிகளில் கருத்து வேற்றுமைகள் ஏற்படும்போதெல்லாம் கூட்டுறவு ஜனநாயகத் தத்துவத்துக்கு அமைவாக செயற்பட்டுக்கொண்டு வருகிறீர்கள். வேற்றுமைகளை மறந்து, ஒன்றாக நிற்கிறீர்கள். உங்கள் சங்கங்களினதும், கொத்தணிகளினதும், சமாசத்தினதும் இந்த முன்மாதிரியை தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள சகல ஸ்தாபனங்களும் பின்பற்றினால், எமது இனத்தின் எதிர்காலம் மேலும் சிறப்பாக அமையும் என்பதை உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எமது ஸ்தாபனங்களில் தகைமை வாய்ந்த பல ஊழியர்களும் அனுபவசாலிகளும் பனை வளர்ச்சித் துறையில் பல புதிய நுட்பமான முறைகளை பயன்படுத்தி வருவதும், பனை வளம் சார்ந்த செயற்பாடுகளையும் உற்பத்திகளையும் சர்வதேச ரீதியாக முன்னெடுத்துச் செல்வதற்கு முயன்று நிற்பதும் பாராட்டத்தக்க செயற்பாடுகளாகும்.

இவ்வாறான எமது பனை தென்னை வள நிறுவனங்கள் சார்பாக வெளியிடப்படுகின்ற இக் கற்பக ஒளியானது எங்கும் சுடர் விட்டுப் பிரகாசிக்க எனது உளப்பூர்வமான வாழ்த்துக்கள்.

நன்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



திரு வீ.கே.அருந்தவநாதன்,
ஓய்வுநிலை கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர்,
உடுவில் வீதி, மானிப்பாய்.

பல இடர்கள், இன்னல்கள், இழப்புக்கள் மத்தியிலும் கூட்டுறவில் தனியாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங் களின் கொத்தணியும் அங்கத்துவ சங்கங்ளும் இணைந்து வெளி யிடும் "கற்பக ஒளி" என்னும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பல்லாண்டு காலமாக அல்லலுற்று வாழ்ந்துவந்த பனை தென்னை வள வல்லுநர்களின் வாழ்வும் அவர்கள் சார்ந்த சமூக ஏற்றத்தாழ்வும் அப்போதைய நடை முறையில் இருந்த முறைமைகளை மாற்றி கூட்டுறவுச் சங்கங்கள் என்கின்ற முறையின் ஊடாக சமூக, பொருளாதார, கலாச்சார, கல்வி சார்ந்த நடவடிக்கைகளுக்கு மேலாக சமூகத்தின் மீதான பார்வை யுடன் 45 ஆண்டுகள் கூட்டுறவுக் கொள்கைகளை மிகச் சிறப்புடன் பின்பற்றிவரும் தங்கள் கூட்டுறவு நிறுனவங்களின் ஸ்தாபகர்கள், தலைவர்கள், நிர்வாக உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், பணியாளர் களின் சேவைகள் போற்றுதற்குரியவை.

மேலும் திறந்த பொருளாதாரக் கொள்கையை கருத்திற் கொண்டும், தற்கால சூழலை கருத்திற்கொண்டும் பணிப்பாளர் சபை யும், பணியாளர்களும் மேலும் சிறப்புடன் செயற்பட்டு, அவர்களின் வாழ்வு வளம்பெற்று, கற்பக ஒளியாக, ஒளி விளக்காக பிரகாசிக்க எனது இதயசுத்தியான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து உழைப்போம்"
"நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து மகிழ்வோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துச் செய்தி



திரு பந்துல ஹப்புதந்திரிகே,
உள்நாட்டு இறைவரி ஆணையாளர்.
உள்நாட்டு இறைவரி பிரதேச காரியாலயம்.
யாழ்ப்பாணம்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் 45வது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப் படுகின்ற சிறப்பு மலர் "கற்பக ஒளி" ஓர் அற்புத மலராக மலர நான் மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு. பனை. தென்னை மரங்கள் பற்றிய சிறப்புக்களை எடுத்துரைக்க விரும்பு கின்றேன்.

யாழ். மண்ணிற்கே சிறப்பான ஒரு குறியீடாக இந்தப் பனை மரங்கள் விளங்குகின்றன. அதற்கு ஒரு உதாணரமாக அண்மை யில் எமது காரியாலயம் அமைந்துள்ள வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கண்காட்சியின் பெயர்கூட "பனாங்காட்டில்" என அமைந் ததே என் நினைவிற்கு வருகின்றது.

நானும் தமிழில் ஆர்வம் உள்ள ஒரு நபர்தான் என்பதால் பனை மரத்தின் சிறப்பினை, கற்பகதரு எனும் தேவலோக இந்திர னுக்கு கேட்பவை எல்லாவற்றையும் கொடுக்கும் மரமாக விளங்கிய கற்பகத்திற்கு ஒப்பிட்டு கற்பகம் என்ற பெயரிட்டு இன்று நாடு முழு வதும் இந்த விற்பனையகம் பனையால் பெறும் நன்மைகளை பறைசாற்றிக் கொண்டு இருகிக்கின்றது. பனையும் தனது ஒவ்வொரு பாகத்தினையும் சிறந்த பலனுக்காகத் தந்துதவுவதால் "கற்பக ஒளி" நிச்சயமாக எல்லாச் சிறப்புக்களோடும் சகல நன்மைகளையும் கொண்டு அமைய வேண்டும் என இறை ஆசியை வேண்டி எனது நல் ஆசிகளை அளிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

# தலைவர்



திரு செ.செல்வராசா

பதவிக் காலம் : 2011.08.06 – இன்றுவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

# செயலாளர்



**திரு நா.கணேசன்**

**பதவிக் காலம் : 2014.08.11 இல் இருந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

## பொதுமுகாமையாளர்



திரு க.சுதாகரன்

பதவிக் காலம் : 2000.06.12 – இன்றுவரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

### நெறியாளர்குழு உறுப்பினர்கள் விபரம்

- தலைவர் : திரு செ.செல்வராசா
- உபதலைவர் : திரு தி.இந்திரசித்து
- செயலாளர் : திரு நா.கணேசன்
- உறுப்பினர்கள் : திரு செ.கிருஸ்ணராசா
  திரு பொ.தர்மராசா
  திரு அ.சரவணபவன்
  திரு சி.நந்தகுமார்
  திரு தி.குணராசசிங்கம்
  திரு மு.பரமேஸ்வரன்
- பொதுமுகாமையாளர் : திரு க.சுதாகரன்
- கணக்காளர் : திரு க.சத்தியசீலன்

### அங்கத்துவ சங்கங்களின் விபரம்:-

- சங்கானை ப.தெ.வ.அ.கூ.சங்கம் : J/1580
- தெல்லிப்பழை ப.தெ.வ.அ.கூ.சங்கம் : J/1591
- சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம் : J/1582
- மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம் : J/1605
- பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம் : J/1762
- கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம் : J/1572
- காரைநகர் ப.தெ.வ.அ.கூ.சங்கம் : J/22


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி**

**பணித் தொகுதி விபரம் (2017)**

- ★ திரு க.சுதாகரன் : பொதுமுகாமையாளர்
- ★ திரு க.சத்தியசீலன் : கணக்காளர்
- ★ திருமதி க.சத்தியபாமா : கணக்குப் பதிவாளர்
- ★ திரு க.முருகானந்தன் : காசாளர்
- ★ திருமதி வி.மாலினி : எழுதுனர்
- ★ திருமதி ற.ஸ்ருதி : எழுதுனர் (பயிற்சியாளர்)
- ★ செல்வி ம.ரேகா : எழுதுனர் (பயிற்சியாளர்)
- ★ திரு நா.சிவகுமார் : காரியாலய உதவியாளர்
- ★ திரு சு.கதிர்காமலிங்கம் : வடிசாலை முகாமையாளர்
- ★ திரு ப.விஜயராசா : களஞ்சியப் பொறுப்பாளர்
- ★ திரு மா.தவலிங்கம் : களஞ்சிய முகாமையாளர்
- ★ திரு நா.தவனேஸ்வரன் : வடிகலன் இயக்குனர்
- ★ திரு கி.சத்தியகாந்தன் : போத்தலடைப்பு உத்தியோகத்தர்
- ★ திரு இ.குகனேஸ்வரன் : சாரதி
- ★ திரு சி.கோடீஸ்வரன் : பாதுகாவலர்
- ★ திரு தி.ஜீவநாதன் : காவலாளி
- ★ திரு க.சுரேஸ்குமார் : காவலாளி
- ★ திரு மு.அல்பிரட் : தொழிலாளி
- ★ திரு க.ஜெகநாதன் : தொழிலாளி
- ★ திரு க.பாஸ்கரன் : தொழிலாளி
- ★ திரு ச.கனிபாகரன் : தொழிலாளி
- ★ திரு க.விஜயகுமார் : தொழிலாளி
- ★ திரு க.சதானந்தன் : தொழிலாளி
- ★ திரு து.ஜெயக்குமார் : தொழிலாளி
- ★ திரு மா.விஜயகுமார் : தொழிலாளி
- ★ க.மோகனதாஸ் : தற்காலிக பணியாளர்
- ★ இ.திலீப் : அமையப் பணியாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

# ஸ்தாபகத் தலைவர்



அமரர் சுப்பர் நடேசு

**பதவிக் காலம்: 1988.08.04 – 1989.07.17**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

## தலைவர்கள் வரிசையில்......

**திரு செ.செல்வராசா**



பதவிக் காலம் :

1989.07.04 – 1991.03.13

**திரு சி.அன்னலிங்கம்**



பதவிக் காலம் :

1991.03.14 – 1993.05.27

**திரு சி.கந்தசாமி**



பதவிக் காலம் :

1993.05.28 – 1995.01.27

**திரு நா.கணேசன்**



பதவிக் காலம் :

1995.01.28 – 2001.09.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

## தலைவர்கள் வரிசையில்......

**அமரர் க.மெய்யழகன்**



பதவிக் காலம் :
2001.09.05 – 2005.01.26
2008.02.17 – 2011.08.05

**திரு இ.செல்வரத்தினம்**



பதவிக் காலம் :
2005.01.27 – 2008.02.16


எமது கொத்தணியின் ஆரம்பகாலம் முதல்
இன்றுவரை கொத்தணியின் அபிவிருத்தியை
இலக்கு வைத்து மிகுந்த அர்ப்பணிப்புடன் செயலாற்றி,
கொத்தணியின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய
தலைவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்!

**பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
**வலிகாமம் பனை தென்னை வள அபி.கூட்.**
**சங்கங்களின் கொத்தணி (வ-து), மானிப்பாய்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முகாமை அமைப்பு வ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

## மைப்பு வரைபடம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுறவுச் சிந்தனைகள்

கூட்டுறவே நாட்டுயர்வு!

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை!

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு!

ஒற்றுமை நீங்கிடின் அனைவருக்கும் தாழ்வு!

ஒன்றுகூடி உழைத்தல்

விடாமுயற்சி சுறுசுறுப்பு

சுய உதவி, பரஸ்பர உதவி

சிக்கனமே சேமிப்பு.

## கூட்டுறவுத் தத்துவங்கள்

கூட்டுறவு என்பது வெறுமனே ஒரு ஒழுங்கமைப்பு மட்டுமன்றி, ஒரு மாபெரும் இலட்சியமும் ஆகும். அதன் பயன்பாட்டு வழிகளே பற்பல கூட்டுறவுக் கொள்கைகள், மனிதனிடமுள்ள மனித தத்துவத்தை கௌரவிக்கின்றது. அது எமது உடலுக்கும் ஆத்மாவுக்கும் ஒருங்கே உணர்வு ஊட்டுகின்றது.

- கவிஞர் தாகூர்-

மனித குலம் தனது வாழ்வுத் தேவைகள் முழுவதையும் நிறைவேற்ற கூட்டுறவுக் கொள்கைகள் காட்டும் வழியைப் பின்பற்றி பயன்பெறமுடியும். தொடர்ந்து பின்பற்றுவது தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நலனைக் கொடுக்கும். இக்கொள்கையின் வழிகாட்டல்கள் சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும், சமூக அநீதிகளையும், சுரண்டல்களையும் ஒழித்து, நீதியும் அறமும் சார்ந்த பொதுநல சமுதாய அமைப்பு ஒன்றை உருவாக்க வழிவகுக்கும்.

- றொபேர்ட் ஓவன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தலைவரின் எண்ணத்திலிருந்து........

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் தலைவரான எனது உள்ளத்திலிருந்து....

வரலாற்றுப் பதிப்பில் தலைவர் பதவி என்பது கௌரவ சேவையாகும். இச் சேவையின் மூலமாக கொத்தணி ஆரம்பிக்கப்பட்ட காலமாகிய 1988ம் ஆண்டு திரு சு.நடேசு அவர்களின் அயராத முயற்சியினால் சிறியளவிலான சாற்று உற்பத்தியினை எடுத்து மதுசாரம் உற்பத்தி செய்து விற்பனை செய்து வந்தது.

இதன் வெற்றியின் காரணமாக 1988ம் ஆண்டு சித்திரை மாதம் 8ம் திகதி சங்கமானது வடிசாலைச் சமாசம் என்னும் பெயரில் வலிகாமத்திற்கு உட்பட்ட அங்கத்துவ சங்கங்களை இணைத்து செயற்பட்டு வந்ததுடன், இதன் வளர்ச்சியின் பயனாக மதுசார உற்பத்தி மட்டுமல்லாது பனாட்டு, பனங்களி, புளக்கொடியல், பனை வெல்லம், பனஞ்சீனி என பல்வேறு பனைசார் உற்பத்திகளை மேற்கொண்டு பாரிய இலாபங்களைப் பெற்று வந்தது.

பின்னர் 1991ம் ஆண்டு காலத்தில் குறித்த நிறுவனத்தின் பெயரினை சங்கானை வடிசாலை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் எனப் பெயர் மாற்றம் செய்ததுடன், வலிகாமத்தில் மேலும் இயங்கிய இரண்டு சங்கங்களையும் அங்கத்துவமாக இணைத்துக்கொண்டது. இக் காலப் பகுதிகளில் மாறி வந்த தலைவர்கள் கொத்தணியின் வளர்ச்சியில் கூடிய கவனம் எடுத்து வந்துள்ளனர். இக்காலப் பகுதியில் இருந்து அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்கள், பணியாளர்கள், அவர்கள் சார்ந்த பிள்ளைகளுக்கான கல்விக் கொடைகளையும், முன்பள்ளி சேவைகளையும் ஆரம்பித்து சிறப்பாக முன்னெடுத்து வந்ததுடன், அனைவராலும் பாராட்டத்தக்க வகையில் சேவைகளை விரிவுபடுத்தியது மட்டுமல்லாது, 1992ம் ஆண்டு கோபாம் மருந்தகம் என்னும் பெயரில் சித்த வைத்திய மருந்து உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கப்பட்டதன்மூலம் மதுசார உற்பத்தியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்லாது சமூகம் சார்ந்த சேவைகளாக பரிணாம வளர்ச்சி கண்டமை பெருமைக்குரியதாகும்.

பின்னர் 1993ம் ஆண்டு வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி என்னும் பெயரில் மாற்றம் செய்யப்பட்டு, தற்போது இதே பெயருடன் சிறப்பாக இயங்கிவரும் இந்நிறுவனம், தற்போதைய நிலையில் அசையும், அசையாச் சொத்துக்களை பல கோடி ரூபா பெறுமதி யில் தன்னகத்தே கொண்டுள்ளமைக்கு இந்நிறுவனத்தின் வழி வந்த தலைவர்களின் வழிகாட்டல்களே முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன.

பின்னர் எனது காலப்பகுதியான 2011-2017 இன்று வரையான காலப்பகுதியில் இலங்கையில் உள்ள ஏனைய மதுசார உற்பத்தி தொழிற்சாலையில் தயாரிக்கும் மதுசாரத் தின் தரத்திற்கு ஈடாக தரமான மதுசாரங்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்த வேண்டும் என்ற எனது எண்ணத்தின் பயனாக இதற்குரிய பல தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் ஆலோ சனையினைப் பெற்று, சாராய உற்பத்தியினை மேற்கொண்ட தன் பயனாக இன்று எல்லோரையும் கவரக்கூடிய வகையில் அழகுபடுத்திய லேபலுடன் முதல் தரத்திலான மதுசார உற்பத் திகளை மேற்கொண்டு வெளியிட்ட பின்னர், சாராய விற்பனை குறிப்பிட்டளவு முன்னேற்றம் அடைந்துள்ளமை இரட்டிப்பு மகிழ் ச்சியளிக்கின்றது.

இருந்தும் இனி வரும் காலங்களில் நவீன முறையிலான புதுவகையிலான இயந்திரங்களை பொருத்தி சர்வதேச தரத்தி லான மதுசார உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், இதன்மூலம் கிடைக்கும் வருமானத்தில் சமூக மேம்பாட்டுக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் ஏற்ற வகையிலான வேலை த்திட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என்ற எனது எண்ணப் பாட்டிற்கு அனைவரது ஒத்துழைப்பினையும் தந்துதவ வேண் டும் என்று நன்றியுடன் கேட்டுக்கொள்வதுடன், “கற்பக ஒளி” மலர் சிறப்புற அமைய வாழ்த்துகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொதுமுகாமையாளரின் உள்ளத்திலிருந்து........

பனந்தொழிலை நம்பி வாழ்ந்த மக்கள் பல்வேறு சமூக ஒடுக்குமுறைகள், அடக்குமுறைகள் மற்றும் நிலப்பிரபுத்துவ சமூகத்தின் சுரண்டல்களாலும், சமூக, பொருளாதார, கலாச்சாரச் சீரழிவிற்குள்ளும் சிக்கித் தவித்த வேளையில், இவர்களின் சமூக, பொருளாதார, கலாச்சார மேம்பாடு கருதி அன்றைய காலத்தில் இருந்த இடதுசாரிகளின் ஆலோசனைகள், முன்னெடுப்புக்களுக்கமைய, 1970களில் ஆட்சியிலிருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் நிதியமைச்சராக இருந்த மதிப்புக்குரிய உயர்திரு என்.எம்.பெரேரா அவர்களினால் கூட்டுறவுக் கொள்கைகளின் அடிப்படையில் பனந்தொழிலாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு பிரதேச ரீதியாக "கள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்" என்னும் பெயரில் உருவாக்கப்பட்டவையே எமது சங்கங்களாகும்.

இச் சங்கங்கள் ஆரம்ப காலத்தில் பல்வேறு இடங்களில் நெருக்கடிகளை எதிர்கொண்டபோதிலும், தலைமைத்துவப் பொறுப்புக்கள் பனந்தொழிலாளர்களிடம் கையளிக்கப்பட்ட பின்பு இச்சங்கங்களின் செயற்பாடுகள் விரிவடைந்து மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் ஒன்றிணைந்த அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு அங்கத்தவர்களினதும், பணியாளர்களினதும் குடும்பங்களினதும், சமூகத்தினதும் பொருளாதார மேம்பாடுகள் நோக்கிய பல்வேறு சமூக நலத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

இவ்வகையில் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும், கொத்தணியும் இணைந்து கூட்டுறவுக் கொள்கைகளுக்கமைய பல்வேறு சமூக நல மேம்பாட்டுத் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றன.

இந்நிலையில் ஏனைய கூட்டுறவு நிறுவனங்களுக்கு முன்னோடியாக வலிகாமம் கொத்தணியும் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து 45வது வருட நிறைவைக் குறிக்கும் முகமாக வெளியிடுகின்ற "கற்பக ஒளி" என்னும் சிறப்பு மலரின் வருகையையிட்டு பொதுமுகாமையாளர் என்ற வகையில் பெருமகிழ்வடைகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

*தலைவர்*



திரு அ. சின்னராசா

*பொதுமுகாமையாளர்*



திரு நி.பொ. ஜேசுராசா

## சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

*தலைவர்*



திரு சி.நந்தகுமார்

*பொதுமுகாமையாளர்*



திரு தி.சுரேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

*தலைவர்*



திரு நா. கணேசன்

*பொதுமுகாமையாளர்*



திரு தெ. ரவிக்குமார்

## பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

*தலைவர்*



திரு தே. கிறிஸ்துராசா

*பொதுமுகாமையாளர்*



திரு செ. றெஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

தலைவர்



திரு ஆ. நடராசா

பொதுமுகாமையாளர்



திரு செ. சுரேஸ்குமார்

## மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

தலைவர்



திரு இ. பிரதீபன்

பொதுமுகாமையாளர்



திருமதி கி. தவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

தலைவர்



திரு பொ. தர்மலிங்கம்

பொதுமுகாமையாளர்



திரு த. கமலநாதன்

## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

### புதிய நிர்வாக சபை (2018)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறும் வளர்ச்சியும்

## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

பல்லாண்டு காலமாக பரம்பரை பரம்பரையாக கள் உற்பத் தித் தொழிலை மேற்கொண்டுவந்த பனம் தொழி லாளர்கள் சமூக, பொருளாதார, கல்வி, கலாச் சார நடவடிக்கைகளில் பின்தள்ளப்பட்ட நிலையில் தமது ஜீவனோ பாயத்தை நடாத்தி வந்தனர். இவர்களது ஜீவியத் தொழிலாகிய சீவல் தொழில், கூடுதலான உடல், மனோபல வலுவைப் பயன் படுத்தி குறைந்த வருமானத்தைப் பெறுகின்ற பேராபத்து மிகுந்த முயற்சியாகவும் இருந்தது. 1972க்கு முன்னர் இருந்த மரவரி முறையின்கீழ் கள் உற்பத்தித் தொழிலை மேற்கொண்டு வந்த இவர்களது உழைப்பு மரச்சொந்தக்காரர்களாலும், முதலாளிகளா லும், சுரண்டப்பட்டு வந்தமையாலும் இவர்கள் முன்னேற முடியாத நிலையிலும் ஒதுக்கப்பட்ட நிலையிலும் நசுக்கப்பட்டு வாழ்ந்து வந் தனர்.

இந்நிலையில், 1970ம் ஆண்டுகளில் இருந்த இடதுசாரி சிந் தனையுடைய முற்போக்காளர்களினதும் 1972ம் ஆண்டு ஆட்சியில் இருந்த ஐக்கிய முன்னணி அரசில் நிதி அமைச்சராக இருந்த டாக்டர் என். எம். பெரேரா அவர்களின் சிந்தனையின் காரணமாக வட பகுதியில் வாழ்ந்த சீவல் தொழிலாளர்களை மையமாகக் கொண்டு கூட்டுறவு முறையின்கீழ் கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றவுச் சங்கம் உதயமாகியது.

இச்சங்கங்களில் ஆரம்பத்தில் நியமனத் தலைவர்கள் நியமிக்கப்பட்டு இவற்றை வழி நடத்தி வந்தனர். இச் சங்கங்கள் வளர்ந்து வரும் நிலையில், நியாயமான தலைமுறை மாற்றம்பெற்று அங்கத்தவர்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களே தலைமைப் பொறுப்பை வகிக்க வேண்டுமென அங்கத்தவர்களிடையே ஏற்பட்ட விழிப்புணர்வு காரணமாக சங்கத்தின் தலைமைப் பொறுப்பு அங்கத்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன்மூலம் சங்கங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிருத்திச் செயற்பாடுகளில் முன்னேற்றம் காணப்பட்டது. இச்செயற்பாடுகளில் ஒன்றாகவே கூட்டுறவு வடிசாலை முறைகள் ஆரம்பமாகின.

1987, 1988 ஆண்டுகளில் வலிகாமம் பகுதிகளில் உள்ள தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களில் மிதமிஞ்சிய கள்ளை விற்பனை செய்யமுடியாமல் திண்டாடிய வேளையில், சங்கானை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் அப்போதைய தலைவர் அமரர் திரு சு.நடேசு, பொதுமுகாமையாளர் க.செல்வராசா மற்றும் நெறியாளர் குழுவினரின் அயராத முயற்சியின் காரணமாக அச்சங்கம் தனது சொந்த முயற்சியாக சிறிய அளவில் கள்ளைப் பயன்படுத்தி மதுசார உற்பத்தியில் ஈடுபட்டு சாராய உற்பத்தி செய்தது. இம் முயற்சி வெற்றியளித்ததன் காரணமாக 1988ம் ஆண்டு சித்திரை மாதம் 08ம் திகதி அமரர் திரு.சு.நடேசு அவர்களின் வழிகாட்டலில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.ச.வேலாயுதம் பிள்ளை அவர்களின் ஒத்துழைப்புடன் சங்கானை, தெல்லிப்பளை, சுன்னாகம், மானிப்பாய் ஆகிய சங்கங்கள் இணைந்து **'சங்கானை வடிசாலை சமாசம்'** என்ற பெயரில் இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு, குறித்த சங்கங்களின் மிதமிஞ்சிய கள் கொள்வனவு செய்யப்பட்டு. மதுசார உற்பத்தி **மேற்கொள்ளப்பட்டது.** அதிலிருந்து சாராய உற்பத்தி விற்பனை நடவடிக்கை ஆரம்பமாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் முதல் தலைவராக திருவாளர் திரு சு.நடேசு அவர்களும், உபதலைவராக திரு க.இரத்தினம் அவர்களும், செயலாளராக திரு ச.வ.சின்னையா அவர்களும், இவர்களுடன் மேலும் 06



நெறியாளர் குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இதன் பகுதிநேர முகாமையாளராக திரு என். ரவுடேந்திரன் என்பவர் நியமிக்கப்பட்டார். இப்பகுதிச் சங்கங்களின் பனந்தொழில் உற்பத்தி நடவடிக்கைகளை முன்னேற்றுவதிலும், வடிசாலையின் ஆரம்ப நடவடிக்கைகளையும் அதன் உற்பத்தித் திறனையும், மேம்படுத்துவதற்கும் இவர் ஆற்றிய சேவை அளப்பரியதாகும். தொடர்ந்து சுன்னாகம் சங்கப் பொதுமுகாமையாளராக இருந்த திரு ஜே.பி.குணரட்ணம் அவர்கள் பகுதிநேர பொதுமுகாமையாளராக பொறுப்பேற்று, வடிசாலை ஆரம்பத்தில் அதன் செயற்பாடுகளில் உரிய பகுதிகளுடன் தொடர்பு கொண்டு முன்னெடுப்பதிலும் இவர்களாற்றிய பணி மகத்தானதாகும்.

இந்நிறுவனம் ஆரம்பத்தில் அங்கத்துவ சங்கங்களிடமிருந்து கள், லோவைன் என்பவற்றைப் பெற்று, அதனை செறிவு கூடிய மதுசாரமாக உற்பத்திசெய்தது. அதிலிருந்து சாராயம் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இதன்மூலம் அங்கத்துவ சங்கங்களில் மீதமாகும் கள் வீணே நிலத்தில் ஊற்றப்படாது அங்கத்தவர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் கள் முழுவதற்கும் உரிய பெறுமதி முழுமையாக வழங்கக்கூடிய நிலை சங்கங்களுக்கு ஏற்பட்டது. இதனால் அங்கத்தவர்கள் பொருளாதார ரீதியில் முன்னேறக்கூடிய நிலை ஏற்பட்டதுடன், சங்கங்களும் இலாபத்தில் இயங்கி தமது செயற்பாடுகளில் முன்னேற்றம் காணக்கூடிய நிலை ஏற்பட்டது.

இந்நிறுவனத்தின் இரண்டாவது தலைவராக திரு ஐ.செல்வராசா அவர்களும், செயலாளராக திரு.சி.கந்தசாமி அவர்களும் 1989.09.12ல் தெரிவுசெய்யப்பட்டு இந்நிறுவனத்தை திறம்பட இயக்கி வந்தனர். இக் காலப்பகுதியில் மதுசார உற்பத்தி, சாராய உற்பத்தி, விற்பனையுடன் பனங்களி, பனாட்டு, புழுக்கொடியல் என்பன

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வும் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்தது. குறித்த இக்காலப்பகுதியில் இந்நிறுவனமானது தனது செயற்பாடுகள் மூலம் பெரியவில் தேறிய இலாபத்தினை ஈட்டியமை குறிப்பிடத் தக்கது.

1991.03.14 தொடக்கம் தலைவராக திரு.சி.அன்னலிங்கம் அவர்களும், உபதலைவராக திரு.மு.நாகேஸ்வரநாதன் அவர்களும், செயலாளராக திரு அ.முடியப்பு அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். இக்காலப் பகுதியில் திரு க.மகேஸ்வரன் அவர்கள் சமாசப் பதில் பொதுமுகாமையாளராகவும் அதனைத் தொடர்ந்து 1991ம் ஆண்டு பங்குனி மாதம் தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளரான திரு கா.சிவஞானம் அவர்கள் பகுதிநேரப் பொதுமுகாமையாளராகப் பொறுப்பேற்று 1992 புரட்டாதி வரை கடமையாற்றினார்.

இக்காலப்பகுதியில் இந்நிறுவனமானது மதுசார உற்பத்தி, விற்பனையுடன் அங்கத்துவ சங்கங்களிடமிருந்து பாணி கொள்வனவு செய்யப்பட்டு பனம் சீனி, பனங்கட்டி என்பனவும் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டன. இக்காலப் பகுதியில் **'சங்கானை வடிசாலை சமாசம்'** என அழைக்கப்பட்ட இந்நிறுவனம், **சங்கானை வடிசாலைக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்** என 1991ல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1990, 1991ம் ஆண்டுகளில் முறையே பண்டத்தரிப்பு, கோண்டாவில் ஆகிய ப.தெ.வ.அ.கூ.சங்கங்களும் இந்நிறுவனத்தில் அங்கத்துவ சங்கமாக இணைந்து கொண்டன. இக்காலப்பகுதியில் திரு சி.இ. இராசநாயகம் அவர்கள் 1991ம் ஆண்டு புரட்டாதி மாதம் தொடக்கம் செயலாளராக கடமையாற்றினார்.



1992ம் ஆண்டு அங்கத்துவ சங்கங்களில் இருந்து 2,270,000 போத்தல் கள்ளும், 10,000 போத்தல் கழிவு பாணியும், 88,000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போத்தல் லோவைனும் கொள்வனவு செய்யப்பட்டு, மதுசார உற்பத்தி மேற்கொள்ளப் பட்டதுடன், 82,000 போத்தல் தரமான பாணியினை கொள்வனவு செய்து பனம் சீனி, பனை வெல்லம், கல்லாக் காரம் போன்றவையும் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. இந் நடவடிக்கைகளின்போது, திரு.க.குமாரசாமி, மறைந்த ஆ.பொ.செல்வராஜன் அவர்களும் சீனித்தொழிற்சாலை முகாமையாளர்களாக கடமையாற்றியமை நினைவு கூறத்தக்கது.

சங்கானை வடிசாலை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என அழைக்கப்பட்ட இந்நிறுவனம், 1992இல் **வலிகாமம் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி** எனப் பெயர் மாற்றம் பெற்றுக்கொண்டது. இவ்வாண்டிலேயே கூ.அ. உதவி ஆணையாளர் (ப.தெ.வளம், வடபிராந்தியம்) ஆக இருந்த திரு.தி.சபாரத்தினம் அவர்களது வழிகாட்டலில் வைத்திய பேராறிஞர் திரு க. பாலசுப்பிரமணியம் அவர்களின் ஆலோசனையுடன் சித்த வைத்திய மருந்து உற்பத்தியை ஊக்குவிக்கும் முகமாக **'கோபாம் மருந்தகம்'** என்னும் பெயரில் சித்த வைத்திய மருந்து உற்பத்தி விற்பனை நிலையம் சித்தங்கேணியில் கொத்தணியால் ஆரம்பிக்கப்பட்டு திறம்பட இயங்கி வந்தது. இக் **'கோபாம்'** மருந்தகமே 1993ம் ஆண்டு அனைத்து பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களும் அங்கம் வகிக்கும் சித்த மருந்துக்கள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கமாக உருவாக்கப்பட்டு தற்போது யாழ். மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய கூட்டுறவுச் சங்கம் என்னும் பெயரில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும். இக்காலப் பகுதியில் வடலியடைப்பு, மானிப்பாய் ஆகிய இடங்களில் கொத்தணிக்கு காணி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டடம் கொள்வனவு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

1992ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் சுன்னாகம் சங்கப் பொதுமுகாமையாளர் திரு மு.வேலையா அவர்கள் பகுதிநேர பொதுமுகாமையாளராக கடமையாற்றினார். 1993 தை மாதம் முதல் சட்டத்தரணி திரு.நா.தம்பிமுத்து அவர்கள் பதில் பொது முகாமையாளராக கடமைப் பொறுப்பேற்று கடமையாற்றினார். தொடர்ந்து கொத்தணிக்கு நிரந்தர பொதுமுகாமையாளர் இல் லாத குறையை நீக்கும்பொருட்டு, கோண்டாவில் சங்கப் பொதுமுகா மையாளராக இருந்த அமரர் க.சந்திரராசா அவர்கள் கொத்தணி யின் பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டு 1995ம் ஆண்டு ஐப் பசி மாதம் அவரது இறுதி மூச்சு ஓயும்வரை கடமையாற்றினார். இவ ரது கடமைக் காலத்தில் இந்நிறுவனம் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அத்துடன் நிதி ஆண்டு மார்கழி 31 எனவும் துணை விதி மாற்றம் செய்யப்பட்டது. அது மட்டுமல்லாமல் இதுவரை காலமும் சங்கானை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த இதன் தலைமைக் காரியாலயம் இதே ஆண்டு மார்கழி 9ம் திகதி தொடக்கம் மானிப்பாயிலுள்ள சொந்தக் கட்டடத்திற்கு மாற்



றம் செய்யப்பட்டதுடன், அதனுடன் இணைந்த வள ஆய்வு கூடம், படிப் பகம் என்பன வும் அமைக் கப்பட்டது.

மேலும் வடிசாலையை சொந்தக்காணியில் நிர்மாணிப்பதற்கு 1993, 1995ம் ஆண்டுகளில் நவாலியில் இரு காணி, கட்டடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு ஒரு காணியில் வடி சாலைக்கான கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வடிசாலை இயங்கி வரு கின்றது. அடுத்த காணியில் பனம்தொழில் பல்தொழில் பேட்டை நிறுவப்பட்டது. தற்பொழுது அவ்விடத்தில் சாராயம் போத்தலில் அடைக்கும் நிலையம், களஞ்சியம் என்பனவும் இயங்கி வருகின் றன. பொதுமுகாமையாளர் க.சந்திரராசா காலப்பகுதியில் அங்கத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரின் சமூக மேம்பாடு கருதி மகளீருக்கான வகுப்புக்கள் நடாத்தப்பட்டதுடன், பன்னவேலை உற்பத்தி நிலையம், தையல் நிலையம், சித்த மருந்து விற்பனை நிலையம் என்பவற்றை அமைத்து மகளிருக்கு வேலைவாய்ப்பு



வழங்கப்பட்டது. 1994ம் ஆண்டு அங்கத்துவ சங்கங்கள் சார்ந்த உறுப்பினர்களுக்கு மாவட்டக் கூட்டுறவுச் சபையுடன் இணைந்து தொடர் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இப் பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றியவர்களே இன்று கொத்தணியிலும் சங்கங்களிலும் தலைவர்களாகவும், நிர்வாக உறுப்பினர்களாகவும் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலப்பகுதியில் 1993 வைகாசி தொடக்கம் 1995 தை வரை சி.கந்தசாமி என்பவர் தலைவராகவும் உபதலைவராக திரு இ.இராசநாயகம் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டு கடமையாற்றினர். 1995 தை தொடக்கம் தலைவராக நா.கணேசன் அவர்களும் உப தலைவராக க.கந்தசாமி அவர்களும் செயலாளராக மீண்டும் மு.கணேஸ் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். 1994ல் க.சந்திரராசா எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியின் காரணமாகவும் பணியாளர்களின் ஒத்துழைப்பினாலும் அங்கத்துவ சங்கங்களில் இருந்து 32,965,059 போத்தல் கள்ளும், 85,560 போத்தல் லோவைனும் கொள்வனவு செய்யப்பட்டு 2,084,147 போத்தல் மதுசாரம் உற்பத்தி செய்யப்பட்டது. இதிலிருந்து 491,000 போத்தல் சாராயம் உற்பத்தி செய்யபட்டு விற்பனை செய்யப்பட்டது. இதன்மூலம் இவ்வாண்டில் மிகப்பெரியளவில் தேறியலாபம் ஈட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அங்கத்தவர்களின் சமூக, பொருளாதார மேம்பாடு கருதி 1995ம் ஆண்டு பாதிக்கப்பட்ட அங்கத்தவர்களின் கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டது. இது மட்டுமல்லாமல் அங்கத்தவர்கள் வழங்கும் கள்ளிற்கு தாமதித்த கொடுப்பனவாக 1995ம் ஆண்டு காலப்பகுதியில் 1,100,000/- ரூபா அங்கத்துவ சங்கங்கள் மூலம் அங்கத்தவர்களு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கு வழங்கப்பட்டது. அத்துடன் எமது தமிழ் மக்களின் மனங்களை விட்டு மறக்கமுடியாத நிகழ்வான 1995 ஐப்பசி மாதம் இடப்பெயர் வின்போது, கொத்தணியின் சோக நிகழ்வாக எமது பொதுமுகாமை யாளர் க.சந்திரராசா அவர்கள் எம்மைவிட்டு மறைந்தார். அப்போது பதில் பொதுமுகாமையாளராக க.இராசையா அவர்கள் பொறுப் பேற்றார்.

இக்காலத்தில் எமது கொத்தணியினது தலைமைக் காரி யாலயம் சரசாலையில் உள்ள சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான சீனி ஆலை கட்டடத்திலும், வடிசாலை வரணியிலும் இயங்கியது. இவ் இடப் பெயர்வின்போது எமது நிறுவனத்தை இயங்குவதற்கு உதவி புரிந்த சக கூட்டுறவு நிறுவனங்களான சாவகச்சேரி ப. தெ.வ.அ.கூ.சங்கம், கொடிகாமம் ப.தெ.வ. அ.கூ.சங்கம், தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.ச கொத்தணி என்பன வலிகாமம் கொத்தணியை அரவணைத்து இட ங்கள் தந்து உதவியமை குறிப்பிடத்தக்கது. இடப்பெயர்வு காரண மாக தென்மராட்சி பகுதியில் எமது நிறுவனம் இயங்கி வந்தபோது ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகளினால் மீண்டும் சொந்த இடத் திற்கு 1996ல் நிறுவனத்தின் சொத்துக்களும் உடமைகளும் பலத்த சிரமங்களின் மத்தியில் ஓரளவிற்கு கொண்டுவரப்பட்டது. பிரதான களஞ்சியம் இருந்த சரசாலைப் பகுதிக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டதால் எமது சொத்துக்களும், பொருள் இருப்புகளும் எம் மால் பாதுகாக்கமுடியாத நிலை ஏற்பட்டது. இதனால் 6,510,036/- ரூபா இழப்பு ஏற்பட்டது. இந்நிலையிலும் எமது சீவல் தொழிலாளர் களினதும், அங்கத்துவ சங்கங்களினதும் நிலையினைக் கருத்தில் கொண்டு நவாலியில் உள்ள காணி கட்டடத்தில் மீண்டும் வடி சாலை அமைக்கப்பட்டு 1997ல் இருந்து இயங்கத் தொடங்கியது. இதே ஆண்டில் ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின் வெள்ளி விழா சேவை நிறைவு கண்ட அங்கத்தவர்கள் பணியாளர் களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப் பிடத்தக்கது. 1998ம் ஆண்டு 5ம் மாதம் 27ம் திகதி நடை பெற்ற விசேட பொதுச்சபை க் கூட்டத்தில் தலைவராக மீண்டும் திரு நா.கணேசன் அவர்களும் உபதலைவராக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.நாகேஸ்வரநாதன் அவர்களும் செயலாளராக திரு க.பாலராசா அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். 1999.06.02ல் திரு செ.செல்வ ராசா அவர்கள் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டார். 2001.09.05 வரை இவரே தொடர்ந்தும் சேவையாற்றினார். 1998ம் ஆண்டு அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களின் எதிர்கால நலனைக் கருத்தில்கொண்டு அங்கத்தவர்களுக்கான ஓய்வு, மரணக் கொடுப் பனவுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்துடன் அங்கத்துவ சங்கங்க ளின் அனுசரணையுடன் நடைபெறுகின்ற முன்பள்ளிகளில் கல்வி பயிலுகின்ற மாணவர்களின் உடல்வள நலனைக் கருத்தில் கொண்டு இலவச சத்துணவு வழங்கும் திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. இம்முன்னெடுப்புக்களும் தலைவர் திரு நா.கணேசன் அவர்களினதும் நெறியாளர் குழுவினதும் தனித்துவமான செயற்பாடுகள் ஆகும். இவ்வாண்டு எமது நடவடிக்கைகளுக்கு சட்டப்படியான அனுமதிப்பத்திரம் முதன்முதலாக கிடைக்கப்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.



1999ம் ஆண்டு எமது வடிசாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பனஞ்சாரய வகைகள் கொழும்பிற்கு அனுப்பப்பட்டு அதிகமாக விற்பனை செய்யப்பட்டதுடன், கொழும்பில் சாராய பாவனையாளரின் நன்மதிப்பைப் பெற்றுக்கொண்டது. இதன் காரணமாக கொழும்பு சாராய உற்பத்தியாளர்களின் உற்பத்திகள் போட்டியை எதிர் கொண்டன. இந் நிலையில் தனியார் வடிசாலைகளின் முறையற்ற செயல்கள் காரணமாக தொடர்ந்து கொழும்பிற்குச் சாராயம் அனுப்புவதில் தடங்கல் ஏற்பட்டது. இவ்வாண்டில் முன்பள்ளி மாணவர்களுக்கு இலவச சீருடைத்துணி வழங்கும் திட்டத்தின்கீழ் அங்கத்துவ சங்கங்களின் அனுசரணையுடன் நடாத்தப்படுகின்ற முன்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவச சீருடைத்துணி வழங்கப்பட்டதுடன், கலை நிகழ்வுகளும் நடாத்தப்பட்டன. கொத்தணிக்கான ஆளணித்திரட்டு அங்கீகாரம் கூ.அ.ஆணையாளர் (வ.கி) அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாண்டின் இறுதிப்பகுதியில் வடிசாலைக்குத் தேவையான பொருட்கள் கொழும்பில் இருந்து 'மாகோ' கப்பலில் கொண்டு வரப்பட்டபோது கப்பல் கடலில் மூழ்கியமையால் ரூபா 2,142,278.42 கொத்தணிக்கு இழப்பு ஏற்ப்பட்டது. இதனைப் பெறுவதற்கு பல தடவைகள் முயற்சி செய்தும் இன்றுவரையும் கிடைக்கவில்லை. வடிசாலையில் மதுசாரம் களஞ்சியப்படுவதற்கு களஞ்சியக் கட்டடம் வசதி இல்லாத காரணத்தால் 2000ம் ஆண்டு ஆரம்பத்தில் புதிய களஞ்சியக் கட்டடம் அமைக்கப்பட்டது.

2000.06.12 தொடக்கம் திரு க.சுதாகரன் கொத்தணியின் பதில் பொதுமுகாமையாளராக கடமையேற்றதன் பின்னர் கொத்தணியின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பல இடையூறுகள், நெருக்கடிகள் ஏற்பட்டபோதும் தலைவர் திரு நா.கணேசன் அவர்களினதும் நெறியாளர் குழுவினதும் கடின ஒத்துழைப்புக் காரணமாக கொத்தணியின் செயற்பாடுகளும் கொத்தணி மேற்கொண்டுவரும் சமூக நலமேம்பாட்டுத் திட்டங்களும் விரிவுபடுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். 2000ம் ஆண்டில் மதுசாரம் களஞ்சியப்படுத்துவதற்கு வசதியான வெள்ளிரும்புக் கொள்கலன்கள் 6,000 போத்தல் கொள்ளளவில் 3ம், 12,000 போத்தல் கொள்ளளவில் ஒன்றும், கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகள் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டதுடன், ஸ்தாபகத் தலைவர் அமரர் சு.நடேசு, மறைந்த பொதுமுகாமையாளர் அமரர் க.சந்திரராசா ஆகியோரின் சேவையைக் கௌரவித்து நினைவுத்தூபியும் அமைக்கப்பட்டது.



2001.09.06ல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தலைவராக திரு க.மெய்யழகன் அவர்களும் உப தலைவராக திரு க.இராசரத்தினம் அவர்களும் செயலாளாக திரு. சி. இராசமூர்த்தி அவர்களும் தெரிவுசெய்யப்பட்டதுடன் வடிசாலையினதும் கொத்தணியினதும் சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் தொடர்பிலும் 2000ம் ஆண்டில் இருந்து விரிவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுசாரம் களஞ்சியப்படுத்துவதற்கும் மதுசாரம் பயன்படுத்துவதற்கும் 9,000 லீற்றர் கொள்ளளவு உடைய 4 வெள்ளிரும்புக் கொள்கலன்களும் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டமையும், வடிசாலை, களஞ்சியம் ஆகிய இடங்களுக்கு கலால்வரிச் சட்டத்திற்கமைய சுற்றுமதில் அமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். சாராய உற்பத்தி சீராக மேற்கொள்வதற்கு ஏற்றவகையில் புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. அத்துடன் அங்கத்தவர் ஓய்வு, மரணக் கொடுப்பனவுத் தொகைகள் அதிகரிக்கப்பட்டது. முன்பள்ளி மாணவர்களுக்கான சத்துணவுத் தொகைகள் அதிகரிக்கப்பட்டது. முன்பள்ளி மாணவர்களுக்கான சத்துணவு வழங்கும் திட்டத்தை எக்காலமும் நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்றவகையில் திட்டத்தின் பெயரில் நிலையான வைப்பு செய்யப்பட்டமை போன்றவற்றை குறிப்பிடலாம்.

அத்துடன் ஆளணித் திரட்டிற்கமைய 2001ல் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு பணியாளர்கள் நிரந்தர நியமனம் செய்யப்பட்டு கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் ஆளணி நியமனம் அங்கீகாரம் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. வடமாகாணத்தில் இயங்கி வருகின்ற கூட்டுறவு நிறுவனங்களிலே கூட்டுறவுக் கொள்கைக்கமைய அங்கத்தவர்களுக்கான சமூக, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை திறம்பட நடாத்தி வருகின்ற எமது கொத்தணியானது மேலும் பல புதிய சமூக, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 23.01.2003ல் நடைபெற்ற பொதுச்சபையில் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தி வருகின்றது. அவையாவன.

- அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களினதும் பணியாளர்களினதும் கொத்தணிப் பணியாளர்களினதும் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் வழங்கல் திட்டம்.
- அங்கத்தவர், பணியாளர் இலவச மருத்துவ பரிசோதனைத் திட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பணியாளர்களின் நலன்புரித் திட்டம்.
- முன்பள்ளி மாணவர், ஆசிரியர்களுக்கான இலவச சீருடைத்துணி வழங்கல்.
- இலவச மருத்துவ பரிசோதனைத் திட்டம்.
- முன்பள்ளி மாணவர்களுக்கான இலவச சத்துணவு வழங்கல் திட்டத்தின்கீழ் மேலும் முன்பள்ளிகள் இணைக்கப்பட்டன. (தற்போது 69 முன்பள்ளிகள் இத் திட்டத்தின்கீழ் இணைக் கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.)

இவ் நிறுவனங்களை நம்பி வாழ்கின்ற அங்கத்தவர் பணியா ளர்களின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு அங்கத்தவர், பணி யாளர் மருத்துவ பரிசோதனைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அதற் கென ரூபா 10 லட்சம் நிலையான வைப்பில் இத்திட்டத்தின் பேரால் இடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்

அங்கத்தவர் பணியாளர்களின் பிள்ளைகளின் எதிர்காலக் கல்வியை ஊக்குவிக்கும் முகமாக புலமைப் பரிசில் திட்டம் உரு வாக்கப்பட்டு, அதற்கென ரூபா 20 லட்சம் நிலையான வைப்பில் வைப்புச் செய்யப்பட்டு அதன் வட்டியை பயன்படுத்தி தரம் 5 புல மைப் பரிசில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், க.பொ.த. சாதா ரணதரம் சித்தியடைந்து உயர்தரம் கற்கும் மாணவர்களுக்கும், க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்து உயர்கல்வி கற்கும் மாணவர் களுக்கும், உயர் கல்வியில் சித்தியடைந்து பட்டம்பெற்ற மாண வர்களுக்கும், புலமைப்பரிசில் வழங்கி வருகின்றது. இவை போன்று அங்கத்துவ சங்கங்களிலும் கொத்தணியிலும் பணிபுரிகின்ற பணி யாளர்களின் நலனை மேம்படுத்தும் முகமாக பணியாளர் நலன்புரித் திட்டம் உருவாக்கப்பட்டு செயற்படுத்தி வருவதம் குறிப்பிடத்தக்க தாகும்.

27.01.2005ம் திகதி நடைபெற்ற விசேட பொதுச்சபைக் கூட் டத்தில் தலைவராக இ.செல்வரத்தினம் அவர்கள் தெரிவு செய்யப் பட்டதுடன் உபதலைவராக திரு ப.குமாரவேலு, செயலாளராக பெ.தேவராசா ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். இக்காலப் பகுதியில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக எமது தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திகள் நல்ல விலையில் முழுமையாக விற்பனை செய்யப்பட்டதால் நிறைந்த வருமானம் கிடைக்கப்பெற்று அதன்மூலம் பனம்தொழில் வல்லுனர் களுக்கு கூடுதல் கொடுப்பனவு வழங்கியதுடன் நலத்திட்டம் தொடர் பான வைப்புக்கள் செய்யப்பட்டதுடன் அங்கத்துவ சங்கங்களினால் நடாத்தப்படுகின்ற முன்பள்ளி மாணவர்களுக்கு மேலைத்தேய இசைப் பயிற்சி அளிக்கும் முகமாக பாண்ட் வாத்தியக் கருவிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வனவு செய்து வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. கள் போத்தலில் அடைக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். கடந்த 2004, 2005ம் ஆண்டுகளில் பல இடையூறுகள் மத்தியிலும் சமூகநல மேம்பாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றபோதும் அரசாங்கமோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ எவ்வித நிதி உதவியும் செய்வதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இடைவிடாத எமது திட்டமிட்ட செயற்பாடுகளின்மூலம் பெறப்படும் நிதியில் இருந்தே பல நெருக்கடிகள், இடையூறுகள் மத்தியில் சிறப்பாக இவற்றை நடாத்தி வருகின்றோம்.

16.02.2008ம் திகதி நடைபெற்ற விசேட பொதுச்சபைக் கூட்டத்தில் தலைவராக க.மெய்யழகன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் உபதலைவராக ப.குமாரவேலு, செயலாளராக பெ.தேவராசா ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். இக்காலப் பகுதியில் மதுசாரம் களஞ்சியப்படுத்துவதற்கு 12,000 போத்தல் கொள்ளளவுடைய இரண்டு வெள்ளிரும்புக் கொள்கலன்கள் புதிதாக செய்யப்பட்டதுடன், வடிசாலை, போத்தலடைப்பு நிலையம் ஆகிய இடங்களுக்கு நிரந்தர மின் இணைப்பு பெறப்பட்டது. மேலும் கடந்த காலத்திலுள்ள நலத்திட்டங்களுடன் கொத்தணியில் பணிபுரியும் பணியாளர்களின் நலன்கருதி கொத்தணிப் பணியாளர் நலத்திட்டத்திற்கென ரூபா 1,000,000/- ஒதுக்கம் செய்யப்பட்டு நிலையான வைப்பு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. கொத்தணியின் செயற்பாடுகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன்,

1. எரிபொருள் நிரப்பு நிலையம்.
2. விருந்தினர் விடுதி உயர் மதுபான விற்பனை நிலையம்

என்பன அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிப் பாவனைக்கென குளர்சாதனப் பெட்டி வழங்கப்பட்டதுடன் துடுப்பாட்ட மைதானம் அமைப்பதற்கு நிதியும் வழங்கப்பட்டது. இக்காலப் பகுதியில் பொதுமுகாமையாளராக திரு க. சுதாகரன் அவர்களுக்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டு 01.01.2008ல் நிரந்தர பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

2004, 2005ம் ஆண்டுகளில் பல இடையூறுகள் காரணமாக மந்தமாக இருந்த எமது சாராய உற்பத்தி விற்பனை 2006, 2007ம் ஆண்டுகளில் அதிகரித்த நிலையில் விற்பனை நடைபெற்றமையால் கிடைக்கப்பெற்ற மேலதிக வருமானத்தில் இருந்து சமூகநல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்பாட்டுத் திட்டங்களுக்கு என ஒதுக்கம் செய்து அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களுக்கான ஓய்வு, மரணக் கொடுப்பனவுத் திட்டத்தின் கொடுப்பனவானது காலத்திற்கு காலம் அதிகரிக்கப் பட்டு 01.01.2009ன் பின்னரும் தொழில்புரிந்து ஓய்வு பெறுகின்ற அங் கத்தவர்களுக்கு ரூபா 17,000/-உம், இயற்கை மரணம் அடைந்தவர் களுக்கு ரூபா 17,000/-உம், விபத்து மரணம் அடைந்தவர்களுக்கு ரூபா 40,000/-உம் அதிகரித்த கொடுப்பனவு வழங்குவதெனத் தீர் மானிக்கப்பட்டது. அத்துடன் நிரந்தரப் பாதிப்படைந்து இயலாமை க்கு உட்பட்டவர்களுக்கு ரூபா 20,000/- விகிதம் வழங்குவதற்கு ஏற் பாடு செய்யப்பட்டது.

06.08.2011ம் திகதி நடைபெற்ற விசேட பொதுச்சபைக் கூட் டத்தில் தலைவராக செ.செல்வராசா அவர்கள் தெரிவு செய்யப்பட் டதுடன் உபதலைவராக திரு ப.தவராசா செயலாளராக கி.உமா சுதன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். கடந்த கால நிர்வாகங் களின் செயற்பாடுகளின் தொடர்ச்சியாக புதிய நெறியாளர் குழு வின் ஒத்துழைப்புடன்,

1. கள் போத்தலில் அடைக்கும் தொழிற்சாலையும் களஞ்சி யமும் அமைக்கப்பட்டது.
2. புதிய பாரஊர்தி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது.
3. வடிசாலையில் மதுவர கட்டளைச் சட்டத்திற்கமைய கலால் பகுதியினருக்கான தங்குமிடம் அமைக்கப்பட்டது.
4. அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களுக்கான ஓய்வு, மர ணக் கொடுப்பனவுத் திட்டம். அங்கத்துவ சங்கங்களின் உறு ப்பினர்களுக்கான ஓய்வூதிய நலத்திட்டமாக பொதுச்சபை யினால் மாற்றம் செய்யப்பட்டது.
5. கொத்தணிப் பணியாளர்களுக்கான நலன்புரித்திட்ட நடை முறைவிதி பொதுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

கூட்டுறவுத் தன்மை, கூட்டுறவுக்கு மத்தியில் கூட்டுறவு என் னும் அடிப்படையில் சர்வதேச கூட்டுறவுக் கொள்கைகளில் ஒன்றா ன கூட்டுறவுக்கு மத்தியில் கூட்டுறவு என்னும் அடிப்படையில் அங்க த்துவ சங்கங்களினால் உருவாக்கப்பட்ட இக் கொத்தணியின் சகல செயற்பாடுகளையும் அங்கத்துவ சங்கங்களும் இணைந்து ஒன்றாக முன்னெடுப்பதும், ஏனைய கூட்டுறவு நிறுவனங்களுக்கும் முன்னு தாரணமான செயற்பாடாக அமைகின்றது. அவ்வகையில் வருடாந் தம் கூட்டுறவு தினவிழாவை முன்னிட்டு அங்கத்தவர், மகளீர், பணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளர், முன்பள்ளி ஆசிரியர்கள், போன்றவர்களுக்கு இடையில் பேச்சு, கவிதை, கட்டுரை, போன்ற போட்டிகளையும் அங்கத்துவ சங்கங்களுக்கு இடையே கயிறிழுத்தல், வினாடிவினா, தாச்சி, சிறந்த சங்கம் தெரிவு ஆகிய போட்டிகளை நடாத்துவதுடன், அவற்றிற்கு பெறுமதிவாய்ந்த பரிசில்களையும் வழங்கி போட்டியாளர்களை ஊக்குவிப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வகையில் ஒவ்வொரு வருடமும் இவற்றை ஏற்பாடுசெயது, சர்வதேச கூட்டுறவுதின விழாவையும் ஸ்தாபகத் தலைவர் நினைவு தினத்தையும் ஒக்டோபர் 31ம் திகதியில் சிறப்புற நடாத்துவதும் சிறப்பிற்குரியதாகும்.

பானை வடிசாலை முறையில் எமது வடிசாலை இயங்குகின்றபோதும், அப்பகுதியில் பணிபுரிகின்ற பணியாளர்களின் அனுபவ ரீதியான வினைத்திறன் காரணமாக மதுசாரம், சாராயம் என்பன தரமான முறையில் உற்பத்திசெய்யப்பட்டு, ஏனைய வெளிநாட்டு மதுபானங்களுடன் போட்டியிட்டு விற்பனை செய்து வந்துள்ளோம். ஆனால் தற்போது போட்டிப் பொருளாதாரச் சந்தையில் எமது உற்பத்திகளின் தரத்தினை மேலும் உயர்த்துவதற்கு நவீன வடிசாலைப் பொறித்தொகுதி நிர்மானிக்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும். இதனை நன்கு உணர்ந்து புதிய நவீன வடிசாலைப் பொறித்தொகுதி நிர்மானிப்பதற்கு தற்போதைய நெறியாளர் குழுவும், பணியாளர்களும், அங்கத்துவ சங்கங்களின் தலைவர், பொது முகாமையாளர்களும், இணைந்து தீவிர கவனம் செலுத்தி வருகின்றனர். அங்கத்துவ சங்கங்களின் நெருக்கடிகளைத் தீர்க்கும் முகமாக போத்தலில் கள்ளை அடைக்கும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டு உற்பத்திச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எமது நிறுவனத்தின் படிமுறை வளர்ச்சிக்கு தங்கள் கடமைக் காலத்தில் அயராது பாடுபட்டு உழைத்த தலைவர்கள், நெறியாளர் குழுவினர்கள், பொதுமுகாமையாளர்கள், பணியாளர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது நிறுவனத்தின் வளர்ச்சியில் பெரும் பங்கு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து எமது கொத்தணியின் வடிசாலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற சாராயத்தின் தரம், சுவை என்பவற்றை மேம்படுத்தும் வகையில் 1,000 லீற்றர் கொள்ளளவுடைய மதுசாரம் சுத்திகரிக்கும் வடிகருவி கொள்வனவு செய்யப்பட்டு, எமது உற்பத்தியின் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களிற்கான ஓய்வு, மரணக் கொடுப்பனவுத் திட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01-01-2013இல் இருந்து 23-02-2013 பொதுச்சபைத் தீர்மானம், 29-05-2013ம் திகதிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அனுமதி என்பவற்றுக்கமைய அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களிற்கான மாதாந்த ஓய்வு நலக் கொடுப்பனவுத் திட்டமாக மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இத் திட்டத்தின்கீழ் தற்போது 204 உறுப்பினர்கள் பயன்பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து 06-08-2014ம் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் மீண்டும் திரு செ.செல்வராசா அவர்கள் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டதுடன், திரு தி.இந்திரசித்து அவர்கள் உபதலைவராகவும் திரு நா.கணேசன் அவர்கள் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

07.11.2017இல் நடைபெற்ற விசேட பொதுச்சபைக் கூட்டத்தின்போது, மீண்டும் தலைவராக திரு செ.செல்வராசா அவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன், உபதலைவராக திரு பா.விஜயகுலசிங்கம் அவர்களும், செயலாளராக திரு பெ.தேவராசா அவர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பல்வேறு நெருக்கடிகள், இடையூறுகள் ஏற்பட்டபோதும் அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்களின் வருவாய் அதிகரிக்கும் நோக்குடன் போத்தலில் கள் அடைத்து விற்பனை செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் மதுபான உற்பத்தி விற்பனையும் பன்னாட்டு நிறுவனங்களின் போட்டித்தன்மை நிலவுகின்றமையால் எமது உற்பத்திகளும் விற்பனைகளும் பாதிக்கப்படுகின்ற நெருக்கடிகள் ஏற்படுகின்றபோதிலும் தலைவர், நெறியாளர்குழு உறுப்பினர்கள், பணியாளர்கள் ஒத்துழைப்புடன் வியாபாரச் செயற்பாடுகள் சிறந்த முறையில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி



இயக்குனர் சபை




பணியாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
## முகாமை அமைப்பு வரைபடம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாளரம்



வலிகாமம் கொத்தணியின்
வலுவமைந்த பணிகள் பலநூறில்
முதலமைந்த முயற்சியதுவாய்
முகிழ்கின்ற மலர் கொத்து
வாழ்வாங்கு வாழுகின்ற
வளமமைந்த பனை வளத்தின்
உளமமைந்த உருவமதாய்
உதிக்கின்ற இந்த மலரிதழ்!

பனைவளமும் கடல்வளமும்
பரிணமித்த யாழ் மண்ணில்
வலிமை மிகு வளமதுவாய்
அருமை கொள் பயன்நூறு
அள்ளித்தரும் கொடையதுவாய்
அவதரித்த பனை வளத்தின்
பயன்பெறு வழிதன்னை
வகை செய்து வழியமைத்து
வாழ வைக்கும் கற்பகத்தாள்
வழியமைத்த கொத்தணியின்
முத்தான பலநூறு சேவைகளின்
வித்தாக வெளிவருகின்றதிந்த
வெளிச்சக்கூடு!

பனந்தொழில் வல்லுநர்களின்
பாவப்பட்ட வாழ்வு நிலையை
துடைத்தெறிய அவதரித்த
தூண்டா மணி விளக்காய்
ஐம்பத்தி இரண்டில் முகிழ்த்தெழுந்த
எங்கள் பனை வளச் சங்கங்கள்!

உதயமாகி ஆண்டுகள் 45
நிறைவுறும் தருணமிதில்
உலகமே வியந்துகொள்ளும்
உன்னத வளர்ச்சி கண்டு
கூட்டுறவுக் கொள்கைகளில்
கோலோச்சும் நிறுவனமாய்
கூட்டுறவுப் பண்புகளை
முழுமையாய்க் கொண்டுவரும்
நிறுவனமாய் மிளிர்ந்திங்கு
உறுப்பினரின் வாழ்வியலை
ஒழுங்கமைத்து வெற்றி கண்டு
வீறுநடை போடுமெங்கள்
பனை வளச் சங்கங்களின்
வீரியத்தைப் பறைசாற்றும்
வீர முரசு இந்த மலர்க்கொத்து!

சு.சிவலிங்கம்,
கல்வி அலுவலர்,
கோண்டாவில்
ப.தெ.வ.அ.கூ.சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஆண்டுகளில் பனைவளச் சங்கங்கள்

தே.தவராசா,
பணியாளர்,
கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.

பனை வளச் சங்கங்கள்

பரிணமித்த ஆண்டுகள்
நாற்பத்தைந்தானது பதினேழில்!
கள்ளிறக்கும் தொழில்புரிவோர்
கண்டு நின்ற துயரம் போக்க
வேண்டி விதைந்துரைத்து
கொண்டு வந்து கூட்டுறவுக்குள்
கொணர்ந்திட்ட கோமகன் "பெரேரா" வால்
முளை கொண்டு முனைப்புற்று
கிளை பரப்பி திறன் நிரப்பிட
நிமிர்ந்து நிற்குதெங்கள்
நித்திலத்தில் பனை வளச் சங்கங்கள்!

பார் புகழும் யாழ் மண்ணின்
ஊர் முழுக்க உயர்ந்து நிற்கும்
வேர் கொண்ட பனை வளத்தை
தூர் எடுத்து வகைப்படுத்தி
வளம்கொழிக்கும் தொழிலாக்கி
உளம் மகிழ அகம் நெகிழ - இன்று
புகழ் பூத்து நிற்குதெங்கள்
பனை வளச் சங்கங்கள்!

பனந்தொழில் புரிவோரின்
வாழ்வுதனைச் செப்பனிட்டு
வளம்பெருக்கி வாழ்வின் சுமை நீக்கி
உழைப்பின் பெருமை கண்டு - தக்க
ஊதியம் வழங்கி சிக்கனம் சேமிப்பு
பயிற்சி முயற்சி ஊக்குவிப்பு என
பலநூறு வழிகாட்டி - அறியாமை
போக்கி முயலாமை நீக்கி
பொருண்மிய மேன்மை காட்டி
புதுப்பொலிவு பெற்று
பூப்படைந்து நிற்குதெங்கள்
பனை வளச் சங்கங்கள்!

முன்பள்ளி சீருடை சத்துணவு
கல்வியூட்டல் பயிற்சி வழங்கல்
சுயதொழில் பன்னவேலை தையல்கலை
முகஒப்பனை விளையாட்டு நிகழ்வுகள்
விபத்து நிதி மரணக்கொடை கட்டாய சேமம்
மருத்துவநிதி காப்புறுதி சகாயநிதி
இலவச மருத்துவ சேவை சித்த மருத்துவம்
நன்கொடை வீடு கிணறு மலசலகூடம்
இழப்பீட்டுத் தொகை ஓய்வூதியம் பணிக்கொடை
எனப் பல நூறு நலத்திட்டங்களுடன்
நாற்பத்தைந்து வருடங்கள் கடந்து
வீறு நடை போடுதெங்கள்
விந்தைமிகு பனை வளச் சங்கங்கள்....!

சங்கங்கள் கொத்தணிகள் சமாசம்
இணையம் பேரிணையம் தொழிற்சங்கம்
ஊழியர் சங்கம் நலன்புரிச் சங்கம்
கிராமிய வங்கி மகளீர்குழு முன்பள்ளிகள்
தொழிற்கூடங்கள் உற்பத்தி நிறுவனங்கள்
திக்கம் வரணி வலிகாமம் என வடிசாலைகள்
இவை எல்லாம் எங்கள் பனை வளச்சங்கங்கள்
பிரசவித்துப் பிரகாசித்து - எங்கள் சமூகத்தின்
வளர்ச்சிக்காய் உயர்ச்சிக்காய் வழியமைத்து
நாற்பத்தைந்து ஆண்டுகளாய்
நம் முன் வாழ்கிறது - எம்மை வாழவைக்கும்
பனைவளச் சங்கங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை வளம்



மா. தர்மலிங்கம்

இறைவன் அருளிய வரமல்லவா
யாழ் மண்ணின் பனை வளம்
இயற்கையின் வரம் –அது
எங்கள் பனைவளம்
பந்தமாய் நம் இல்லங்களுக்கு அருகில்
வசிக்கின்ற சொந்தம்
எங்கள் பனைவளம்
வைரத்தின் மதிப்பினைவிட
உயரத்தினை தொட்டது
எங்கள் பனைவளம்...
கருமையான நிறமும்
உயரமான தோற்றமும்
பெற்றாய் நீயே.... உன்னால்
மக்கள் அனைவரும் பயன்பல
பெற்றனர் என்பது உண்மையே
பனையே நீ வளர்ந்திட
நீர் எதற்கு உணவு எதற்கு?
வெப்பம் ஒன்றே போதுமே
உயரமாய் நீ வளர்ந்திடவே
வைரமாய் நீ ஆகிடுவாய்
அடிமுதல் நுனி வரை
உன் பாகங்கள் அத்தனையும்
பயன்தரும் போகங்களே
தொல்காப்பியம் தொடக்கம்
திருக்குறள் தேவாரம் இதிகாசம்
நவீன கவிதை என இற்றைவரை
நிலைத்து போற்றப்படுகின்றது
எங்கள் பனை வளம்...
இளமைப் பருவமாய் வடலி – அதில்
அழகு நிறைந்த ஓலைகளாம்
பால்தரும் பசுவிற்கு சிறந்த உணவாம்
பத்து வருடங்களின்மேல் கடந்திடவே
வடலி அது பனைமரமாக ஆகிடுமாம்
நீண்டு வளர்ந்த உடலிலே
சிலாகை மரங்கள் சிராய்கள்
என பல பெற்றிடலாம்
பெரிய ஓலைகள் எடுத்து
வேலிகள் வீடுகள் வேய்ந்திடலாம்
சார்வுகள் பல எடுத்து
பன்னத் தொழில்களினை
சிறப்புற விருத்தி செய்திடலாம்
பெட்டிகள் கடகங்கள்
நீற்றுப் பெட்டிகள் குட்டான்கள்
என்று பல இழைத்திடலாம்
பாய்கள் பல பின்னி விற்றிடலாம்
விளையாட்டப் பொருட்கள்
கைப்பொருட்கள் என பலவற்றை
செய்திடலாம் எங்கள் பனை வளத்தில்
பெண்பனைகளே பெருவளம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்து பெருமை பெறுகின்றன
சிறுவர்கள் மகிழ்ந்து அருந்திடவே
நுங்குகள் நாம் பெறுகின்றோம்
கொஞ்ச நாட்கள் கழிந்திடவே
பனம்பழமும் விழுந்திடுமே...
பணியாரமும் சுட்டிடலாம்
பனாட்டும் போட்டிடலாம்
பனம் வித்து எடுத்து
பாத்தியும் போட்டிடவே
பனம்கிழங்கும் பெற்றிடலாம்
துவையலும் செய்து சாப்பிடலாம்
ஒடியலும் செய்திடலாம்
புழுக்கொடியலும் போட்டிடலாம்
பருவங்கள் அடைந்திடவே
பதநீரும் கிடைத்திடுமே
பனங்கட்டியும் செய்திடலாம்
கருப்பணியும் பருகிடலாம்
உடலிற்கு குளிர்ச்சியாம் பதநீர்
உள்ளத்திற்கும் மகிழ்ச்சியாம் பதநீர்
நொய் நொடிகளை நீக்கிடுமே பதநீர்
நீண்ட ஆயுளையும் தந்திடுமே பதநீர்
பணம் காசு பெருக்கிடலாம்
பனை வளம் நாம் காத்து வந்தால்
ஆயிரம் ஆண்டுகள் பழமையானது
ஆயிரம் ஆசைகளை
அர்த்தமாக்கிடும் புதுமையானது
கற்பகதரு எனப் பெயர் கொண்டு
தொழில்தரும் தெய்வமாம்
எங்கள் பனைச் செல்வம்...!
அன்றும் இன்றும் என்றும்
தனக்கென தனித்துவம் படைத்து
உலகில் பெயர்பெற்று விளங்கும்
எங்கள் பனைச் செல்வத்தினை
பேணிப் பாதுகாத்துக்கொள்வது
நம் எல்லோரதும் கடமையாகும்
இறைவன் அருளிய பனை வளத்தினால்
எங்கள் மனைச் செல்வத்தினை
பெற்றிடுவோம் பெருக்கிடுவோம்
பனை வளம் மனைவளம் காக்கும்
பனையது பசியது போக்கும்
என்பது திடமே...............!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டுறவும் கல்வியும்

சி.அசானி, மாணவி,
உடுவில் மகளிர் கல்லூரி

தனிமரம் என்றும் தோப்பாவதில்லை
தனித்து எவரும் சாதனை புரிவதில்லை
உயர்வு வேண்டி உழைத்தவர் வாழ்வில்
கூட்டுறவு இருந்ததை வரலாறு பகரும்

கல்வி என்னும் கனிமரம் வளர
பள்ளி எனும் பாசறை புகுந்து
கூடி ஒன்றாய்க் கலைமகள் தனைக்
கூவி அழைத்தோம் கல்வி பயின்றோம்

ஏழும் எட்டும் எத்தனை என்றறிய
காலும் கையும் கை கொடுத்தப்போ
இருபதும் பத்தும் எவ்வளவு என்பதற்கு
அருகிலுள்ளவர் கைகள் வேண்டிற்று – ஆக
பாலர் வகுப்பு பயில்கின்ற போதே
கூட்டுறவு எமக்கு வேண்டியதாயிற்று

பாலர் கல்வியில் ஆரம்பித்த கூட்டுறவு
விண்வெளி வரைக்கும் வியாபித்து நிற்கிறது
உழைப்போர் கூடித் தோற்றுவித்த கூட்டுறவு
உலகை ஆளும் திறனைப் பெற்றுள்ளது

அழகாய் அன்று ஆரம்பித்த கூட்டுறவு
விண்வெளியை இன்று ஆக்கித் தந்துள்ளது
முன்பள்ளிகள் முளைத்ததும் கூட்டுறவால்
வளங்கள் வந்ததும் கூட்டுறவால் இன்று
கல்வி வளர்ந்துள்ளதும் கூட்டுறவால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை மரங்களே!
# தென்னை மரங்களே!



பனை மரங்களே
தென்னை மரங்களே
எங்களை யாழ் மண்ணிற்கு
வருக வருக என வரவேற்று
உங்கள் ஒவ்வொரு பகுதியையும்
எங்களிற்கு கொடுத்து
கற்பகதருவாக விளங்குகிறீர்களே!

உங்கள் நல்ல மனதிற்கு
நாம் என்ன சன்மானம்
தரப்போகின்றோமோ?
யாம் அறியோம் பராபரமே!
யாமறிவோம் என்றோ
ஒரு நாள் "தளரா வளர்தெங்கு
தாளுண்ட நீரை தலையாலே
தான் தருதலால்" நாமும்
தென்னை மரங்களாகுவோம்
ஆனால் பனை மரங்களோ..
எதனையும் பெற்றுக்கொள்ளாமல்
சிறந்த நண்பர்களாக
எமக்களிக்கும் நன்மைகளைப்
போற்றி அவர்களை பாதுகாப்போம்
அடுத்த தலைமுறைக்கு அவர்களை
பேணக் கற்றுக்கொடுத்து
நாம் பனையைப் பெருக்கிடுவோம்
பனை வளம் காப்போம்!

பந்துல ஹப்புதந்திரிகே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2050 களில் பனைவளச் சங்கங்கள்

ரின்னில் அடைத்த கள்ளு
ஏற்றுமதி செய்த வகையால்
அந்நியச் செலவாணி
நானூறு பில்லியன்!
அரசுக்கு நன்கொடை
இருபது பில்லியன்!

அனைத்துச் சங்கங்களின்
உறுப்பினர்களுக்கும்
இலவச வீட்டு வசதி
செய்கிறத சங்கம்!

சங்கம் நடாத்தும் கல்லூரியின்
பத்தாண்டு விழாவுக்கு
பாரதப் பிரதமர் முதன்மை அதிதி!

மருத்துவத் துறையில்
சாதனை படைத்த
சித்த வைத்திய சேவைக்கு
தேசிய விருது!

பனந்தொழில் பொருளாதாரத்தில்
தன்னிறைவு கண்டதெப்படி?
டோக்கியோ மாநாட்டில்
சிறப்புரை நிகழ்த்த
சங்கத் தலைவர்
யப்பான் விரைவு!

பனஞ்சாற்று
உற்பத்திக்கு
நவீன பொறித் தொகுதி
வியட்நாமிலிருந்து
தருவிப்பு!

பனை வளச் சங்கங்கள்
பன்முகப்படுத்தப்பட்டதெப்படி?
பல்கலைக்கழக ஆய்வுகள்
வியப்புடன் விதைந்துரைப்பு!

**இவை எல்லாம்
2050 இல் எங்கள்
சங்கங்களின் நிலைப்பாடுகளின்
செயற்பாடுகள் பற்றியதான
பரபரப்புச் செய்திகள்.....**

தே.தவராசா,
கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

# வாழ்க்கைக்கு எது அழகு?



சு.சிவலிங்கம்,
கோண்டாவில்

வானமும் பூமியும் சேர்ந்திருந்தால்
இயற்கைக்கு **அழகு!**
காலையும் மாலையும் கலந்திருந்தால்
நாட்களுக்கு **அழகு!**
கல்வியும் செல்வமும் கூடியிருந்தால்
அந்தஸ்துக்கு **அழகு!**

பெண்மையும் நாணமும் ஒன்றித்திருந்தால்
பெண்ணுக்கு **அழகு!**
ஆசையும் பாசமும் சேர்ந்திருந்தால்
அன்புக்கு **அழகு!**
வெற்றியும் தோல்வியும் அடுத்தடுத்திருந்தால்
வாழும் வாழ்க்கைக்கு **அழகு!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டுறவின் மாண்மியம்



வலுவற்றவரை
வளம்பெறச் செய்வது
கூட்டுறவு!

*வ.சிவகுமார்,*
*கல்வி உத்தியோகத்தர்,*
*சமாசம்.*

பொருளாதார பலமற்ற, வலிமையற்ற நடுத்தர மக்களின் வாழ்வில் ஏற்பட்ட வறுமை என்னும் இருளைப்போக்கி அவர்களின் வாழ்வாதாரத்திற்கு கைகொடுத்து சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்கி, ஏழை-பணக்காரன் என்ற பேதங்களைப் போக்கி சகலருக்கும் சமநீதி கிடைக்க உதய சூரியனாய் வந்துதித்தது கூட்டுறவு!

இன்று உலக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் பலம் மிக்க அமைப்பாக கூட்டுறவு விளங்கி வருகின்றது. ஏழைகளின் தோழனாய் உலகின் பலகோடி மக்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியதுடன், உலக மக்களை ஒரு குடையின்கீழ் கொண்டுவருவதற்கு கூட்டுறவின் தந்தை றொபேர்ட்ஓவன் அவர்கள் கண்ட கனவு இன்று நனவாகியுள்ளது.

இக்கூட்டுறவு இயக்கம் எப்போது உருவாகியது என எவராலும் உறுதியாகக் கூறமுடியாது. உலகில் உயிரினங்கள் மற்றும் மனித இனம் தோற்றம்பெற்ற காலத்தில் இருந்தே கூட்டுறவு ஆரம்பித்தது எனலாம். பறவையினங்கள், மிருகங்கள் என சகல உயிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னங்களும் கூட்டமாகக்கூடி வாழும் இயல்பைக் கொண்டுள்ளன. தமது எதிரிகளை எதிர்க்க, தமக்கான உணவைத் தேடிக்கொள்ள, தமது பாதுகாப்பை தக்கவைத்துக் கொள்ள கூடிவாழ்தல் என்னும் பண்பு அவற்றிற்கு பயனுள்ளதாக இருந்துள்ளது.

ஆதி மனிதர்கள் நாடோடிகளாய் திரிந்த காலத்தில் இருந்தும், பின்பு ஓரிடத்தில் தமக்கான இருப்பிடத்தை அமைத்து நிலையாக வாழத் தொடங்கியபோதும் அவர்கள் கூட்டமாக இருந்து கூடி வாழ்தலையே விரும்பியிருந்தனர். காலப்போக்கில் ஏற்படுத்தப்பட்ட கூட்டுக்குடும்ப வாழ்வும் ஒரு கூட்டுறவு அமைப்பாகும். ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும் என்ற கூட்டுறவுத் தத்துவம் கூட்டுக்குடும்பத்தில் இருந்தே தோற்றம்பெற்றது எனலாம்.

## மக்களை கவர்ந்த அமைப்பு கூட்டுறவே!

1844ம் ஆண்டு இங்கிலாந்து தேசத்திலே ஏழைத் தொழிலாளர்கள் முதலாளி வர்க்கத்தினரால் பெரிதும் பாதிக்கப்படுவதனையும் அவர்களின் உழைப்பிற்கேற்ற ஊதியத்தினைப் பெற்றுக் கொள்ள முடியாத அவர்கள் துன்பத்தில் தவிப்பதையும், நேர காலம் இல்லாது அவர்களது உழைப்பு சுரண்டப்படுவதையும் தடுப்பதற்கு என்னவழி? இவ் ஏழைத் தொழிலாளர்களை மகிழ்ச்சியாக வாழவைப்பது எவ்வாறு? இப்பிரச்சினைகளை எந்த வழிமூலம் தீர்க்கமுடியும்? என்ற றொபேர்ட் ஓவன் அவர்களின் வினாக்களுக்கு எல்லாம் விடையாக அமைந்ததுதான் கூட்டுறவு அமைப்பு.

ஒரே தொழிலைச் செய்யும் சகலரும் கூட்டுறவு அமைப்பின் கீழ் ஒன்று சேருவதனால் அவர்களுக்கு ஏற்படும் பலம், அதனால் அவர்கள் பெறப்போகும் பயன்கள் தொடர்பாக மக்களுக்கு எடுத்துக்கூறி, கூட்டுறவின்கீழ் ஒன்றுகூட அவர் அறைகூவல் விடுத்தார். அவர் கூறிய கூட்டுறவுத் தத்துவங்கள் அப்போதைய மக்களின் சிந்தனையில் ஆழமாகப் பதியவில்லை. அதனால் றொபேர்ட் ஓவன் அவர்கள் மிகவும் மன வேதனைப்பட்டார். "நான் காலத்தால் மிகவும் முந்திப் பிறந்துவிட்டேன். எனது கருத்துக்கள் இன்று மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும் என்றோ ஒருநாள் மக்கள் இதனை ஏற்றுக்கொள்வார்கள். கூட்டுறவு என்ற ஒரே குடையின்கீழ் மக்கள் ஒன்றுகூடும்போது எனது சிந்தனைகள் வெற்றிபெறும்" என்று கூறியிருந்தார். அவரது மறைவிற்குப் பின்னர் அவரது கூட்டுறவுக் கருத்துக்கள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கூட்டுறவு அமைப்பு தோற்றம்பெற்று, உலக நாடுகளில் இன்று வெற்றிகரமான அமைப்பாக காணப்படுகிறது. இவரது இக்கருத்து எமது பனை தென்னை வள அபிவிருத்தி நிறுவனங்களின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும், எமது தொழிலாளர்களின் நிறுவனமயப்பட்ட வாழ்வாதார விருத்திக்கும் எவ்வாறு உதவியுள்ளது என்பதை நாம் இன்று கண்கூடாகக் காண்கிறோம்.

1972ம் ஆண்டு உருவாகிய எமது பனை தென்னை வள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுவனங்கள் இன்று 45 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளமையை முன்னிட்டு, வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுற வுச் சங்கங்களின் கொத்தணி தமது உறுப்புரிமைச் சங்கங்களின் சார்பாக "கற்பக ஒளி" என்னும் மலரினை வெளியிடத் தீர்மானித் துள்ளமை கூட்டுறவின் உயர்வை எடுத்தியம்புகின்றது.

பனை தென்னை வள நிறுவனங்கள் தமது செயற்பாடு களை விரிவுபடுத்தியதால் இன்று அதிசயிக்கத்தக்க வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருக்கின்றன. அங்கத்தவர்களின் பொரு ளாதார அபிவிருத்தி, கல்வி, கலாச்சார அபிவிருத்தியை கருத்திற் கொண்டு பல நலத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றன. வலி காமம் கொத்தணியானது தமது அங்கத்துவ சங்கங்களினால் நடாத்தப்படும் முன்கல்வி நிறுவனங்களின் மாணவர்களிற்கான சத் துணவு, சீருடைத்துணி, ஆசிரியர் சீருடைத்துணி என்பன இலவச மாக வழங்கி, சிறார்களின் கல்விக்காக பெருமளவு பங்களிப்பை வழங்கி வருவது பாராட்டத்தக்கது. இதனைத் தவிர அங்கத்தவர்க ளிற்கான ஓய்வூதியத் திட்டங்களை வருடாந்தம் விரிவுபடுத்தி வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தமக்கென நிரந்தரமான கட்டட வசதிகளுடன் பாரிய தொழிற்சாலையையும் நிர்வகித்து விளையாட்டு விழா, கூட்டுறவுதின விழா, நிறுவுனர் நினைவு விழா என்பவற்றை வருடந்தோறும் நடாத்தி வருவது பெருமைப்பட வேண்டிய விடயமாகும். தமது தூரநோக்கு சிந்தனைகள் மூலம் திட்டமிட்ட நலத்திட்டங்களால் அங்கத்தவர்கள், பணியாளர்கள், அவர்சார்ந்த குடும்ப உறுப்பினர்களின் நம்பிக்கையை வென்றெடு த்து கூட்டுறவின் வழித்தடத்தில் அவர்களை வெற்றிப் பாதையில் வழிநடத்திச் செல்வது மகிழ்ச்சிக்குரியது.

மேலும் எமது நிறுவனங்கள் தமது சேவைகளில் கல்விச் சேவை, பணப்பரிமாற்ற சேவை, பனைசார் பொருட்கள் விற்பனை, அச்சக சேவை, அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை மற்றும் கிராமிய வங்கிச் சேவை, காப்புறுதித் திட்டங்கள், மாதாந்த ஓய்வூ திய திட்டங்கள் என தமது தொழிற்பாடுகளை விரிவுபடுத்தி கூட்டு றவில் திடமாக தடம்பதித்து வளர்வது எமது சாதனைகளே!

## ஏழைத்தொழிலாளர் வாழ்வில் ஏற்றம்பெறச் செய்த கூட்டுறவுக் கல்வி

பரந்துபட்டு, கட்டுப்பாடுகள் இன்றி, கவனிப்பார் இன்றி, தாம் விரும்பியபடி உற்பத்தியில் ஈடுபட்ட தொழிலாளர்கள் வாழ்வில் கூட்டுறவுத் தன்மையினை ஏற்படுத்தி கூட்டுறவுச் சட்டத்தில் பதிவு பெற்ற கூட்டுறவு அமைப்பாக தம்மை மாற்றி அதன் சட்ட திட்டங் களுக்கமைய கூட்டுறவு அமைப்பிற்கே உரித்தான அனைத்து பண்புகளும் நிறைந்த கட்டுப்பாடுகள் கொண்ட அமைப்பாக தம்மை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றிக்கொண்டதோடு, பணபலம், ஆளணிப் பலம் இரண்டும் சேர்ந்த ஆளுமைப்பலத்துடன் செயற்படத்தொடங்கிய பனை தென்னை வள நிறுவனங்கள், 1992ம் ஆண்டு முதல் கல்விப் பயிற்சிகள்மூலம் கல்விச் செயற்பாடுகளில் கூடுதல் கவனம் எடுத்து பயன்மிகு கல்வித் திட்டங்களைத் தீட்டி தமது இலக்கினை நோக்கி நகர்கின்றன.

கூட்டுறவு அமைப்புக்கள் நிலைத்திருந்து சேவையாற்ற வேண்டுமானால் இத்துறைசார்ந்த அனைவருக்கும் கூட்டுறவுக் கல்வி போதிக்கப்படவேண்டும் என்ற கூட்டுறவு அறிஞர்களின் கருத்திற்கமைய இந்நிறுவனங்களினால் அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர்குழு உறுப்பினர்கள், முன்கல்வி ஆசிரியர்களுக்கு காலத்திற்கு காலம் பொருத்தமான பயிற்சிகள் சங்க மட்டம், சமாச மட்டங்களில் நடாத்தப்பட்டு வருகின்றன.

கல்வி அறிவு எவ்வாறு மனித சமூகத்தை நாகரிகமுள்ள சமூகமாக உயர்த்தி வைக்கின்றதோ, அதேபோல கூட்டுறவுக் கல்வியானது கூட்டுறவை நம்பி வாழ்பவர்களினதும் அவர்கள் சார்ந்த நிறுவனங்களினதும் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் வித்தாக உள்ளது.

## கூட்டுறவு என்பது ஒரு சமூக நிறுவனமாகும்

சமூகத்தில் உள்ள மக்கள் அனைவரையும் ஒரே நோக்கத்திற்காக இணையச்செய்யும் ஓர் அமைப்பு என்பதால் கூட்டுறவு ஒரு சமூக நிறுவனமாக கருதப்படுகின்றது. குறிப்பாக பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்கள், கால் நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாமே தாம் சார்ந்த வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி தமது மக்களின் அதாவது, தமது அங்கத்தவர்களின் சமூக மேம்பாடு, பொருளாதார மேம்பாடு, கல்வி, சுகாதார, கலாச்சார மேம்பாட்டிற்காக கூடி உழைப்பதன்மூலம் தமது தேவைகளை பூர்த்திசெய்து தமது இலட்சியத்தை அடையமுடியும் என்று நம்பிக்கை கொண்டு செயற்பட்டு அதில் வெற்றியும் கண்டு வருகின்றார்கள். தனக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணத்தைக் கைவிட்டு மற்றவர்களின் கருத்துகளிற்கும் மதிப்பளித்து, பலரது கருத்துக்களையும் உள்வாங்கி அதில் இருந்து நல்ல முடிவுகளை எடுப்பதற்கு தீர்மானிப்பவனே உண்மையான கூட்டுறவாளன் ஆவான்.

கூட்டுறவு அமைப்பு செயற்பட தூய்மையான உள்ளம் கொண்ட அங்கத்துவமே மிகவும் அவசியமாகும். இதற்கு எதிர்மாறான அங்கத்துவம் கொண்ட நிறுவனங்கள் தமது இலக்கினை அடைய முடியாது என்பதே நிதர்சனமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்கு பணிவும் துணிவும் அவசியம்

திரு கி.பொ.யேசுராசா,
பொதுமுகாமையாளர்,
கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்



உலக ஜீவராசிகளுக்குள் மிகமிக மாண்புடையது மனித வாழ்வு. எனினும் இன்றைய நவநாகரீக உலகில் மனித வாழ்வும் மனித மனமும் தறிகெட்டு முறை தவறி குறை நிறைந்த நிலையில் மனிதம், மாண்பு, மனிதநேயம், மனிதாபிமானம் என்றவாறான பல மனிதக் குறியீடுகளை இழந்துவிட்ட நிலையில் துடுப்பிழந்த படகாக, மேய்ப்பன் இல்லாத மந்தைகளாக, கரைகளற்ற காட்டாறாகப் போகும் திசை தெரியாது அடையும் இலக்குப் புரியாது மனித வாழ்வு பயணித்துக் கொண்டிருக்கிறது.

அன்பு, பண்பு, பரிவு, கருணை, காருண்யம், இரக்கம், தயவு, தாட்சண்யம் மற்றும் இன்னோரன்ன இனிய குணாதிசயங்களால் நிரம்பி வழியவேண்டிய மனித மனங்களும் இயல்புகளும் இன்று திசைமாறி கோபம், வக்கிரம், பழிவாங்குதல், வன்சொல், ஆண்மை, அடக்குமுறை, அதிகாரம் போன்ற செயற்பாடுகள் மேலோங்கி மனித வாழ்வையே புரட்டிப் போடுகின்ற கைங்கரியத்தை மேற்கொள்கின்ற அவலம் நடைபெறுகிறது.

இவற்றிலிருந்து விடுபட மனித வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய மிக முக்கியமான விடயங்களாக பணிவும், துணிவும், முன்னிலை பெறுகின்றது. "பதவி வரும்போது பணிவு வரவேண்டும், துணிவும் வரவேண்டும் தோழா" என்ற பாடலுக்கு ஏற்ப மனித மனங்கள் மத்தியிலே பணிவும் துணிவும் பரந்தளவில் விதைக்கப்படவேண்டும் என்பதே இக்கட்டுரையின் தலையாய நோக்கமாகும்.

மனித வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய மிகவும் முக்கியமான விடயங்கள் பணிவும், துணிவும் ஆகும். பணிவு வேண்டும், ஆனால் கோழைத்தனம் கூடாது. துணிவு வேண்டும், ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைக்கனம் கூடாது. பணிவு பக்குவத்தை உண்டாக்கும். துணிவு எல்லையைத் தொடும் வல்லமையை நல்கும். பணிவும் துணிவும் இணைந்து பிணைந்தால் வாழ்வு சிக்கனமாய் அமையும். இப்பணிவும் துணிவும் சேதாரம் ஏற்படாத அற்புத வாழ்வைப் பெறுவதற்கு ஆதாரமாகும்.

"பணிவு பெருமையைத் தரும். துணிவு காரிய சித்தியை உண்டாக்கும்" என்று பகர்ந்தார் வள்ளுவர். துணிவுகொள்பவர்க்குத்தான் அறிவும் உணர்வும் துணைசேரும். துணிவு இல்லாத இடத்தில் சோர்வு குடி புகுந்துவிடும். சோர்வுக்கு இடம் கொடுத்த வாகனோட்டியின் வாகனம் கவிழ்ந்தது. தன்னையும் காயப்படுத்தி எதிரே வந்த மனிதனின் உயிரையும் குடித்தான் என்ற செய்தியை தினம் தோறும் ஊடகங்கள் வாயிலாக அறியும்போது, பணிவும் துணிவும் இல்லாமல் செய்யும் காரியத்தால் ஏற்படும் ஆபத்துக்கள் பசுமரத் தாணிபோல் மனதில் பதிந்து விடுகின்றது. துணிவு பிறந்துவிட்டால் அபாயத்தைக் கண்டு அஞ்சி ஆபத்துக்குள்ளாவதைத் தடுத்து விடலாம். பயம் பிறந்துவிட்டால் உடலையும் சிதைத்து உள்ளத் தையும் வதைக்கும். அதற்காக எதற்கும் அஞ்சாமல் தலைவிரி கோலமாய் நடக்கக்கூடாது. தீமையைக் கண்டு அஞ்சத்தான் வேண்டும். துணிச்சல் பிறக்க வேண்டிய இடத்தில் அச்சம் பிறக்கக்கூடாது. அது ஆபத்தை உண்டாக்கும்.

ஜீன் பாட்டன் என்ற இளம் விஞ்ஞானி தனியாக விமானத்தை ஓட்டிச் செல்கின்றான். ஆறாயிரம் அடி உயரத்தில் பறந்து செல்கிறது விமானம். திடீரென என்ஜின் நின்றுவிட்டது. விமானம் மேலே பறக்கவில்லை. கீழே இறங்க ஆரம்பித்து விட்டது. கடலைத்தொட இன்னும் இரண்டாயிரம் அடி தொலைவுதானிருக்கிறது. ஜீன் பாட்டன் மனம் தளர்ந்து விடவில்லை. அந்தரத்தில் தனியாக இருந்தும் என்ஜினைப் பழுது பார்க்க முற்பட்டான். என்ஜின் மறுபடியும் வேலை செய்யத் தொடங்கியதும் மீண்டும் விமானம் மேகத்தினூடே பறந்து சென்றது. வானம்பாடிபோல பாடத்தொடங்கிவிட்டான் ஜீன்பாட்டன். துணிவால் உயிர் தப்பியதோடு, வெற்றியும் பெற்றான்.

வெற்றிபெறும்வரை துணிச்சலோடு செயலில் இறங்க வேண்டும் என்பதை வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கவேண்டும். கடந்த காலத்தைப் பற்றித் திரும்பிப் பார்க்கக்கூடாது. முன்வைத்த காலைப் பின்வைக்கக்கூடாது. முன்னேறிச் செல்லவேண்டும். பின்னுக்குப் போகக் கூடாது. தோல்விகளைக் கண்டு கலங்கக்கூடாது. அவற்றைப் படிப்பினைகளாகக் கருதவேண்டும். துணிவோடு துணிவு பெறுவதற்கு பலவீனத்திற்கு இடமளிக்ககூடாது. இலட்சியத்தில் அசையாத உறுதிகொள்ள வேண்டும். இறுதியில் வெற்றி பெறுவோம் என்ற முழு நம்பிக்கை கொள்ளவேண்டும்.

துணிவு கொள்ளவேண்டும் என்று நாவினால் சொன்னால் மட்டும் போதாது. துணிவு இல்லாததால் ஏற்படும் தீங்கைப் போக்கு வதற்கான காரியத்தைக் கைக்கொள்ள வேண்டும். ஆற்றின் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைகளைப் போன்றது பணிவும் துணிவும். கரையில்லாத ஆற்று நீர் கால்வாய் வழியாக பாயாது, களனிகளில் விழாது. நெல்மணிகள் விளையாது, கடைசியாகக் கடலில் போய்க் கலக்காது. அதுபோல் பணிவும் துணிவும் இல்லாத வாழ்வு தோல்வியில் முடிவதோடு, இலட்சிய வாழ்வையும் அடையமுடியாது. மேலும் நாவடக்கம் வேண்டும். அதுதான் பணிவுக்கு அறிகுறி. எங்கு போனாலும் நாவை அடக்கிக் கொள்ளுங்கள். நாவை அடக்காவிடில் வசைச் சொற் களை உதிர்க்க நேரிடும். அதனால் வருந்தநேரிடும் என்று வள்ளுவர் எச்சரிக்கை விடுக்கின்றார். வாயை அடக்கி, நாவை மடக்கி பணி வோடு பழகுபவர்களுக்குப் பாதகம் ஏற்படவே ஏற்படாது என்கின்றார் எபரேய மன்னன் சாலமன்.

பணிவுக்கு நாவடக்கம் முன்வாசலாக அமைகிறது. அவ்வாச லிலுள்ள படிகள் வருமாறு,

01) அவசியம் ஏற்படும்போது மட்டுமே வாயை திறக்க வேண் டும், நாவை அசைக்க வேண்டும். நறுக்காகக் பேசவேண் டும்.

02. எப்பொழுதும் உண்மையை உரைக்கவேண்டும், வாய்மை பேசுவதுதான் வாய்.

03. கேட்பவரின் தன்மையறிந்து நன்மை பயக்கும்படியாக நல்ல கருத்துக்களைக் கூறவேண்டும்.

04. பேசும் சொற்களில் கோபக்காற்று வீசக்கூடாது. கடுஞ் சொல் கலக்கவே கூடாது.

05. வசைமொழி கூறவே கூடாது. பழுத்து முற்றிய கனியிருக் கும்போது காய் சாப்பிடலாமா? இனிய சொற்கள் இருக் கும்போது வன்மையான சொற்களை வாயால் உச்சரிக்கக் கூடாது.

06. மென்மையாக சொற்களை மணியடிப்பது போன்று கணீரென பேசவேண்டும்.

07. அளவுக்கு மேல் ஒரு நாளும் பேசக்கூடாது. பேசும்போது அளந்து பேசவேண்டும்.

08. வாய்க்கு வந்ததை உளறக்கூடாது நிதானித்து பேச வேண்டும். காரியத்தோடும், கருத்தோடும் பேசவேண்டும்.

09. நாவினால் வெளியேறும் சொற்களும் நறுக்காய் இருக்க வேண்டும். நாவினால் உள்ளே புகும் உணவும் அளவோடு இருக்கவேண்டும்.

துணிவோடு பணிவு சேராவிட்டால் அடங்காமை சேர்ந்து விடும். பின்னர் ஆத்திரமும் கோபமும் அடைக்கலம் புகுந்துவிடும். கோபம் கொள்ளாதிருப்பதுதான் பண்பு நிறைந்த வாழ்க்கை பலரும் பாராட்டும் வாழ்க்கையாகவும் அமையும். பணிவும் துணிவும் கொண்ட வாழ்க்கையை நாம் வாழ்வதன்மூலம் எமது வாழ்நாள் முழுவதும் சீரும் சிறப்புடனும் வாழ்வாங்கு வாழலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## சங்கத்தின் தோற்றம்

கோண்டாவில் இணுவில் கள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கம் எனும் பெயருடன் 1972ம் ஆண்டு மே மாதம் 01ம் திகதி எமது சங்கம் உருவாக்கப்பட்டதுடன், இதன் எல்லைப் பரப் பாக உடுவில், நல்லூர் பிரதேச செயலகங்களின் நிர்வாகப் பிர தேசத்திற்குட்பட்ட 11 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட பிரதேசம் ஆகும். இப்பகுதியில் 11 கள் விற்பனை நிலையங்கள் ஒரு கிராமிய வங்கி ஒரு உற்பத்தி நிலையம் ஆகியவற்றை உள்ளடக் கிய ஒரு நிறுவனமாகும்.

## அங்கத்துவம்

சங்கத்தின் ஆரம்ப அங்கத்துவம் சில நூறுகளாக இருந்தபோதிலும் படிப்படியாக இவ் எண்ணிக்கை உயர்வடைந்து தற்போது ஆயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று உறுப்பினர்கள் அங்கத்துவத்தைப் பெற்றிருப்பதுடன், இதில் சீவல் தொழில்வல்லு நர்கள் ஆயிரத்து நூற்று ஐம்பத்து மூன்று பேரும் மகளிர் உறுப் பினர்கள் நூறு பேரையும் கொண்டு இயங்கி வருகின்றது. ஆரம்ப காலத்தில் சீவல் தொழிலையே முக்கிய தொழிலாகக் கொண்டு இயங்கியபோதும் காலப்போக்கில் சங்கத்தின் துணைவிதி நடை முறைவிதி திருத்தங்களுக்கேற்ப மகளிர் அங்கத்துவம் உள்வாங் கப்பட்டு இவர்களுக்கான செயற்பாடும் உருவாக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற்பாடு

இச்சங்கம் ஆரம்ப இலக்கிற்கு ஏற்ப கள் விற்பனையிலே முழு ஈடுபாட்டையும் கொண்டு வளர்ந்த போதிலும் காலப்போக்கில் வெல்லம், சீனி, போத்தல் கள்ளு உற்பத்தி போன்ற முயற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளது. தற்போது ஆரம்ப காலத்தில் எம்மால் அமைக்கப்பட்ட கிளை நிலையங்களில் சில அகற்றப்பட்ட நிலையிலும் சங்க வளர்ச்சிக்கு பாதகம் ஏற்படாத வகையில் நகர்ந்து வருகின்றது.

## அங்கத்துவ நலத்திட்டங்கள்

இச்சங்கத்தின் கீழ் இணைந்து தொழிலாற்றிவரும் அங்கத்தவர்களுக்கு சமூக மேம்பாட்டுத் திட்டங்களாக பின்வரும் நலத்திட்டங்களை அறிமுகம் செய்து மிகச் சிறப்பாக நடாத்தி வருவதில் நிர்வாகம் வெற்றி கண்டுள்ளது.

- ☞ ஓய்வு பெற்ற உறுப்பினர்கள் பணியாளர்களுக்கான மாதாந்த ஓய்வூதியம் வழங்கல். (தற்போது இவ்வாறாக 77 பேர் மாதாந்தம் பயன்பெற்று வருகின்றனர்)
- ☞ உறுப்பினர்கள், பணியாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில், க.பொ.த (சா/த), க.பொ.த (உ/த), பல்கலைக்கழகம் சித்தி பெற்றவர்களுக்கான உதவிக் கொடுப்பனவு வழங்கல்.
- ☞ உறுப்பினர், பணியாளர்களின் பிள்ளைகளுக்கு சுற்று வட்டத்திலான வங்கி வைப்புச் செய்தல்.
- ☞ உறுப்பினர்கள், பணியாளர்களுக்கு மரணம் அல்லது நிரந்தரப் பாதிப்பு ஏற்படின் அவர்களின் பிள்ளைகளுக்கான கல்விக் கொடையை தொடர்ச்சியாக வழங்கல்.
- ☞ முன்பள்ளி நிலையங்களை நடாத்துதல், ஆசிரியர்களுக்கான சம்பளம், மாணவர்களுக்கான போஷாக்கு உணவு, சீருடை மற்றும் தகுதிகாண் பரீட்சைகளை நடாத்தி பரசில்களை வழங்குதல்.
- ☞ முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப் போட்டிகளுக்கு அன்பளிப்பு நிதி வழங்கி ஊக்கப்படுத்தல்.
- ☞ உறுப்பினர்கள், பணியாளர்கள், மகளீர்குழு உறுப்பினர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கூட்டுறவுத்துறை சார்ந்தவர்களுக்கான தொழில்சார் பயிற்சிகளை வழங்குதல்.
- ☞ உறுப்பினர்கள், பணியாளர்கள், அவர்களைச் சார்ந்த பிள்ளைகளுக்கான மாலைநேரக் கல்வியினை சனசமூக நிலையங்கள் ஊடாக இலவசமாக வழங்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ உறுப்பினர்கள், பணியாளர்கள், அவர்களைச் சார்ந்தவர்களுக்கு இலவச கண் பரிசோதனை செய்து, மூக்குக் கண்ணாடிகளை வருடாந்தம் வழங்குதல்.

☞ வருடாந்தம் சிறந்த உறுப்பினர்கள், பணியாளர்களைத் தெரிவுசெய்து கௌரவித்து பரிசில்கள் வழங்குதல்.

☞ உறுப்பினர்கள், பணியாளர்களின் பிள்ளைகளுக்கு இலவச பாடசாலை உபகரணங்களை வழங்குதல்.

இத்திட்டங்களின் கீழ் பல நூறு அங்கத்தவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் பயன்பெற்று வருவதுடன் மேலும் பெருமளவான அங்கத்தவர்கள் விவசாய ஓய்வூதிய காப்புறுதித் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளதுடன், 75 அங்கதத்வர் வரையில் விவசாய ஓய்வூதியத்தினைப் பெற்று வருகின்றனர். மற்றும் ஏழு முன்பள்ளி நிலையங்களை சிறப்பாக நடாத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.



## பணித்தொகுதி

சங்கத்தின் பல்வேறுபட்ட தொழிற்பாடுகளிலும் ஏறத்தாழ ஐம்பது பணியாளர்கள் ஆரம்ப நிலையில் பணிபுரிந்து தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டு உழைத்து வருபவர்கள் இன்றும் உள்ளனர். இவர்களது சிறப்பான சேவையை கௌரவித்து இவர்களுக்கான பல நலத்திட்டங்களை ஒழுங்குபடுத்தி நடைமுறைப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் பணியாளர் தமக்கென நலன்புரி அமைப்பினையும் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தையும் உருவாக்கி தமக்குள்ளான சேவையின்மூலம் பயன்பெற்று வருவதையும் பெருமையுடன் கூறமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொத்துக்கள்

1981ம் ஆண்டில் சங்கத்தின் தலைமை அலுவலக நிர் மாணிப்பிற்காக ஓர் காணி கொள்வனவு செய்யப்பட்டு, இரண்டு காரியாலயம் 2 மாடிக் கட்டடமாக அமைக்கப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து மதுபான நிலையத்திற்கான 2 மாடிக் கட்டடம் கொள் வனவு செய்யப்பட்டதுடன், கிளை நிலையங்கள் உற்பத்தி நிலை யத்திற்குப் பொருத்தமான பல துண்டுக் காணிகளை ஆங்காங்கே கொள்வனவு செய்ததுடன், பாரிய செலவுகளில் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு இன்று பல இலட்சம் மதிப்புள்ள அசையும் அசை யாச் சொத்துக்களையும் இச்சங்கம் பேணி வருவதோடு, அவ்வப் போது இருந்த நிர்வாகத்தினரதும் பணியாளர்களினதும் அரும் பெரும் பணியின் காரணமாகவே இச்சொத்துக்களைப் பெற்றுக் கொள்ள ஏதுவாக இருந்தது.



## சமூக நலத்திட்டங்கள்

பொருத்தமான இடங்களைத் தெரிவுசெய்து அவ்விடங் களில் முன்பள்ளிகளை நிறுவி தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நிய மித்து சமூகத்திலுள்ள சிறுவர்களுக்கு ஆரம்பக் கல்வி மற்றும் போஷாக்கு உணவு, சீருடை போன்றவற்றை வழங்குவதன் ஊடாக சமூக நலனில் அக்கறை செலுத்த தொடங்கிய எமது சங்கமானது, படிப்படியாக அதனை விரிவுபடுத்தி சனசமூக நிலையங்களுக்கான நிதயுதவி, தொழில்சார் பயிற்சிகள், மகளிருக்கான தையல் மற்றும் முக ஒப்பனைப் பயிற்சிகள் என்பவற்றை வழங்கி, சுயதொழில் ஊக்குவிப்பினை மேம்படுத்தியும் பள்ளி மாணவர்களுக்கான இல வச மாலைநேர வகுப்புக்களை நடாத்தியும் வருவதுடன் அங்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவர்களின் மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட உறுப்பினர்களுக்கு மலசலகூடம், குழாய்க்கிணறுகளை இலவசமாக அமைத்து வழங்கியதன்மூலம் அங்கத்தவர்களுக்கு மிகுந்த அக்கறை கொண்டவர்களாக உள்ளோம் என்பதை எடுத்துக் காட்டுகிறது.



## கிராமிய வங்கி அமைப்பு முறை

சங்கம் கிராமிய வங்கியை நிறுவி சேமிப்பு, சிக்கனம், உழைப்பு என்பவற்றை ஊக்கப்படுத்தியதனூடாக கிராமிய வங்கி யில் தற்போது இலட்சக் கணக்கான ரூபாய்களை கணிசமான அங்க த்தவர்கள் வைப்பிலிட்டுள்ளார்கள் என்ற செய்தியினூடாக அவர் களின் வாழ்வாதாரம் வியக்கவைக்கும் அளவிற்கு உயர்த்தப்பட் டுள்ளதைக் காணமுடிகிறது என்பதுடன் கீழ்க்காணும் சேவைகளை கிராமிய வங்கி ஊடாக செய்து வருவதும் பெருமைக்குரிய விடய ங்களாகும்.

- ☞ அங்கத்தவர்களின் சேமங்களை பேணுதல்.
- ☞ அங்கத்தவர், பணியாளர், மகளிர்குழு உறுப்பினர்களுக்கு கடன் வழங்கல்.
- ☞ வெஸ்ரன் யூனியன் பணப்பரிமாற்றம்.
- ☞ வாகன காப்புறுதிச் சேவை.
- ☞ மின் கட்டணம் அறவிடுதல்.

## சாதனைகள்

சங்கங்களுக்கிடையேயான செயற்பாடுகளில் மாகாண மட்டத்திலும் சரி, சமாச மட்டத்திலும் சரி பல தடவைகள் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தினைப் பெற்றுக்கொண்ட சாதனையை தனதாக்கிக்கொண்ட இச்சங்கமானது தொடர்ந்தும் அத்தரத்தினையும் அனைத்து தரப் பினரதும் நற் பெயரையும் தக்கவைத் துக் கொண் டுள்ளது. கல்விச் செயற்பாடு களில் ஆர ம்பகாலம் முதற் கொண்டு இன்றுவரை அனைவரா லும் போற்ற ப்படும் முன் னுதாரணமான நிர்வாகமாக மிளிர்வதுடன் கூட்டுறவாளர்தின விழாக் கள் ஆண்டுதோறும் நடைபெறும்போது, அதில் பலதரப்பட்ட போட்டி களிலும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு பலநூறு வெற்றிக்கேடயங் களைத் தனதாக்கிக் கொண்டுவருகின்ற எமது சங்கம், இவை எல் லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல 2011ம் ஆண்டில் தேசிய மட்ட ரீதியில் சங்கங்களின் சகல செயற்பாடுகள் அடங்கிய தெரி வுப் போட்டியில் அகில இலங்கையில் இருக்கக்கூடிய அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும் இருந்தும் எமது சங்கம் முதல் சங்கமாக தேர்வு செய்யப்பட்டு விருதுபெற்று பெரும் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



## எதிர்கால நோக்கு

இச்சங்கம் துறைசார்ந்தவகையில் காத்திரமான பணி களைச் செய்து நாற்பத்தைந்து ஆண்டுகால வரலாற்றுச் சாதனை யைப் படைத்து வருகின்றபோதிலும், எதிர்பார்ப்புக்கள் முழுமை பெறவில்லை. பலவிதமான தடைகளைத் தாண்டி முன்னேறும் முயற்சியிலே வெற்றிகரமாகச் செயற்படும் நாம், இச்சங்கத்தோடு தொடர்புடைய அனைத்துத் தரப்பினரதும் வழிகாட்டல்கள், ஆலொ சனைகள், ஒத்துழைப்பு என்பவற்றுக்காக என்றுமே சிரம் தாழ்த்தி நன்றி கூறுவதோடு, எதிர்கால இலக்காக சீனி உற்பத்தி ஆலை, பனம் பொருள் உற்பத்தி விற்பனைச்சாலை ஆகியவற்றை நிறுவி கூட்டுறவு சார்ந்தவர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு செயற்படவுள்ளோம் என்பதையிட்டு பெரு மிதம் அடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



இயக்குனர் சபை



பணியாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"கற்பக ஒளி" 45வது அகவை சிறப்பு மலருக்கு
எமது நல்வாழ்த்துக்கள்!

**அங்கத்தவர் நலத்திட்டங்கள்**
- மாதாந்த ஒய்வூதியம் வழங்கல்.
- விபத்து மரணக்கொடை வழங்கல்.
- பொங்கல் பொதி வழங்கல்
- கூட்டுறவுக் கல்விப் பயிற்சி.

**கிராமிய வங்கிச் சேவை**

சேமிப்பைப் பேணுதல்



அங்கத்தவர், பணியாளர், மகளிர் கடன் வழங்கல்.

மோட்டார் சைக்கிள் கொள்வனவு கடன்



காப்புறுதி கட்டணம் அறவிடல்

வெஸ்ரன் யூனியன் பணப் பரிமாற்றம்

மின்சாரக் கட்டணம் அறிவிடல்

சிறுவர் சேமிப்பாளர் ஊக்குவிப்பு வழங்கல்

**தொழில் முயற்சிகள்**

அங்கத்தவர் சாற்று உற்பத்தி கொள்வனவு, விற்பனை.



போத்தற் கள் உற்பத்தி




பனைவெல்லம், கல்லாக்காரம், பதநீர், உற்பத்தி.

**கல்வி ஊக்குவிப்பு திட்டம்**
- முன்பள்ளிகளை நிர்வகித்தல்.
- முன்பள்ளி ஆசிரியர் வேதனம் வழங்கல்.
- ஆசிரியர், மாணவர் கௌரவிப்பு
- புலமைப்பரிசில், க.பொ.த(சா/த, உ/த) கல்விக்கொடை வழங்கல்.
- அங்கத்தவர்களுக்கு மலசல கூடம், குழாய்க்கிணறு அமைத்தல்.



**மகளிருக்கான அபிவிருத்தித் திட்டம்**

தையல், அழகுக்கலைப் பயிற்சி

சுயதொழில் ஊக்குவிப்பு.



**கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

கே.கே.எஸ். வீதி,
தாவடிச் சந்தி,
கோண்டாவில்

தொ.பே:
021 222 3539


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

இச்சங்கமானது 06-03-1972ம் ஆண்டு பதிவுசெய்யப்பட்டுள்ளது. பதிவுக்கு முன்னர் இரு அங்குரார்ப்பண கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. அதன் முதலாவது கூட்டம் பாரதி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்திலும், 2வது கூட்டம் யா/வலிதூண்டல் றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் நடைபெற்றுள்ளன. இச்சங்கப் பதிவுக்காக அயராது உழைத்தவர்களில் திரு சுவக்கீன் அன்ரன் லாசறஸ், திரு சி.கதிரவேலு, திரு மு.வயிரமுத்து போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்களில் திரு சி.கதிரவேலு இச்சங்கத்தின் முதலாவது செயலாளராக தொடர்ந்து 14 ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார். இச்சங்கத்திற்கு ஆரம்ப காலத் தலைவராக திரு வ.கிருஷ்ணசாமி அவர்கள் சேவையாற்றி இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டுள்ளார். அதனை யடுத்து திரு வ.பொன்னம்பலம் அவர்களும், அடுத்து திரு வே.மாணிக்கம் அவர்களும் நியமனத் தலைவர்களாகவிருந்து இச்சங்கத்தின் வளர்ச்சிக்குச் சேவையாற்றியுள்ளனர்.

நியமனத் தலைவரின்கீழ் இந்நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பை கையளிக்கும் நோக்கத்துடன் அக்காலத்தில் யாழ். மாவட்டத்திற்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகவிருந்த திரு ச.வேலாயுதம்பிள்ளை அவர்கள் முன்னைய ஏற்பாட்டை தடை செய்து தெரிவுத் தலைவரிடம் பொறுப்பளித்தார். அவ்வகையில் முதலாவது தெரிவுத்தலைவராக திரு க.உருத்திராபதி அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். இவரைத் தொடர்ந்து திரு பூ.இரத்தினம் அவர்க்ள தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். இவர் காலத்தில் சங்கம் சேந்தாங்குளத்தில் வருடமொன்றுக்கு 1 இலட்சம் போத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை (பருவகாலத்தில்) அடைக்கக்கூடிய போத்தலில் கள் அடைக்கும் பாரிய ஆலையை சங்கத்தின் சொந்த நிதியிலும் அங்கத்தவர்களிடம் பெற்ற நிதி மூலமாகவும் உருவாக்கினார். இதன்மூலம் அங்கத்தவர் மத்தியிலிருந்த அகற்றுக் கள் பிரச்சினை ஓரளவு நீங்கி சங்கத்துடன் இணைந்து உழைக்கும் ஆர்வம் மேலோங்கியது. இதன் விளைவாகச் சங்கம் வருடாந்தம் இலாபங்களை உழைத்து அங்கத்தவர், பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு வழங்கப்பட்டதுடன், இக்காலத்தில் தலைமைக் காரியாலயம், பல உற்பத்தி நிலையங்கள், கிளை நிலையங்களுக்கான காணி, கட்டடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. தனித்து கள்ளுடன் நிற்காது பனாட்டு, கல்லாக்காரம், பனை வெல்லம், பனம் பழத்திலிருந்து பானம், சுவைமிகு பதநீர் போன்ற உற்பத்திகளை ஊக்குவித்து புதியவரலாற்றை உருவாக்கியது. இவை 1981இல் இருந்து ஏற்பட்டவை. வெல்லத்தொழிற்சாலையை திரு கொல்வின் ஆர்.டி.சில்வா திறந்து வைத்தமையும். அக்காலத்தில் பனை வெல்ல உற்பத்தியின் இலாபத்தை சங்கம் ஈட்டியமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இக்காலத்தில் ஆறு (06) பனை வெல்லத் தொழிற்சாலைகள் இயங்கியது. 1977ம் ஆண்டின் அரசியல், பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக இத்தொழிற்சாலைகள் நட்டமடைய நேர்ந்தது. 1984ம் ஆண்டின் பின் புதிய வரலாற்றை உருவாக்கிக் கொண்டிருந்த சங்கம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள் இழப்புகள் ஏற்பட்டன. இடப்பெயர்வினால் அங்கத தவர்கள் தாம் வாழ்ந்த பிரதேசங்களை விட்டு சிதறி வேறு இடங்களில் குடியேறினர். இக்காலத்தில் கடமையிலிருந்த தெரிவுத் தலைவர் திரு சண்முகலிங்கம் சங்கத்தின் கட்டுக்கோப்பு அழியாது பல திட்டங்களை வகுத்து அதனூடாக சங்கத்தினை சிறப்புற நடத்தி வந்தார். அவரைத் தொடர்ந்து வந்த திரு நா.கணேசன் அவர்கள் பலப்பல இடப்பெயர்வுக் காலத்திலும் சங்கத்தின் தொழிற்பாட்டை ஸ்த்திரத்துடன் காத்து மீளச் சொந்தப் பிரதேசத்தில் இயக்குவதற்கு பல சேவைகளை புரிந்துள்ளார்.

இச்சங்கமானது தனது அங்கத்தவர்களுக்கு நிலையான சேமத்திட்டம் ஒன்றை உருவாக்கி பல இடப்பெயர்விலும் கணிசமான சேமிப்பை அவர்களது பிற்கால வாழ்வுக்கு சேமிக்க வழிகாட்டியது. இது தவிர கணிசமான அங்கத்தவர்களை விவசாய ஓய்வூதியத் திட்டத்திலும் தொழிற்படும் அங்கத்தவர்கள் அனைவரையும் இணைத்துள்ளது. 1991ம் ஆண்டில் பனை வெல்ல உற்பத்தி பெரிதும் இலாபகரமாக இயங்கியது. இது மட்டுமல்லாது அக்காலத்தில் சீனிக்குப் பதிலாக கணிசமான அளவு மக்களின் பனை வெல்ல பாவனையை அதிகரிக்கச் செய்தது. பின்னர் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வின் காரணமாக இத்தொழிற்பாட்டையும் கைவிட நேர்ந்தது. இக்காலத்தில்தான் சங்கத்தின் செயற்பாட்டுப் பிரதேசத்தின் 90 வீதமான பகுதியும் மக்கள் புலம்பெயர்ந்து செல்ல மீதமாகவுள்ள 10 சதவீத இடத்திலேயே இரு கிளை நிலையங்களை நடத்தி அங்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவர்களின் உற்பத்தியை கொள்வனவு செய்து சேவையாற்றி வந்துள்ளது.

இச்சங்கத்தின் வளர்ச்சியில் ஆரம்ப காலம் முதல் 1990ம் ஆண்டு இடப்பெயர்வு வரை நிரந்தரப் பணியாளர் 54 பேரும், தற்காலிகப் பணியாளர் 25 பேரும் கடமைபுரிந்துள்ளனர். இடப்பெயர்வின்போது சங்கத்தின் சொத்துக்கள், ஆவணங்களை பாதுகாப்பதில் பணியாளர்களின் பங்களிப்பு பெரிதும் மேலோங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. 45வது வருடத்தில் 13 நிரந்தரப் பணியாளர்களும் 2 தற்காலிக பணியாளர்களும் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

திரு நா.கணேசன் தலைவரைத் தொடர்ந்து திரு க.சின்னராசா தலைமைப் பொறுப்பை ஏற்று சங்கத்தினை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்தினார். சமூக நலத்திட்டங்களை உருவாக்கி அங்கத்தவர் சேமிப்புக்களை அதிகரித்து அங்கத்தவர்கள், பணியாளர்கள் விருத்திக்கு சேவையாற்றியுள்ளார். சங்கத்தின் பணித்தொகுதி மீள் அமைப்பில் ஆளணி அங்கீகாரம் மீள் அமைப்பு செய்யப்பட்டு ஸ்த்திரமான ஆளணி நிர்ணயம் பெறப்பட்டுள்ளது. திரு க.சின்னராசாவின் தலைமைத்துவத்தினைத் தொடர்ந்து திரு கா.கதிரமலை தலைமை பொறுப்பேற்று சங்க வளர்ச்சியில் இருந்த திட்டங்களை செழுமைப்படுத்துவதிலும், மீள அனுமதிக்கப்பட்ட சங்கத்தின் தொழிற்பரப்பில் கிளைகளை நிறுவி சங்க மேம்பாட்டிற்கு உழைத்தமையுடன் சங்க அங்கத்தவர்கள் உயர் வருமானம்பெற இலாபங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டமையையும் குறிப்பிடலாம். பணியாளர் ஊக்குவிப்பு வழங்கி சங்கம் சிறப்பாக செயற்பட்டுள்ளது. திரு கா.கதிரமலை அவர்களைத் தொடர்ந்து திரு மு.தவபாலன் தலைமைப் பொறுப்பை ஏற்று தொடர்ந்து திட்டங்களை முன்னெடுத்தமையுடன், கிராமிய வங்கி அமைப்பு முறையை ஏற்படுத்தி அங்கத்தவர் மத்தியில் சேமிப்பு நிலையை மேம்படுத்தியதுடன் அங்கத்தவர், பணியாளர் சமூக நலத்திட்டங்களை நல்ல நிலையில் பேணி, சங்கத்தினை வளர்ச்சிப் பாதையில் மாற்றியுள்ளார். திரு மு.தவபாலன் அவர்களைத் தொடர்ந்து திரு க.அருணகிரிநாதர் தலைமைப் பொறுப்பேற்று சங்கத்தினை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்தி வந்தார். இவரது காலத்தில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் பல கிளை நிலையங்கள் அமைக்கப்பட்டதுடன், அரசின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி உதவியுடன் இரு வெல்ல நிலைய கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றும் 45 இலட்சம் ரூபா பெறுமதியானது. வசந்தபுரம், வித்தகபுரம் ஆகிய பகுதிகளில் இவை அமைக்கப்பட்டுள்ளன. மதுவகைப் பொருட்களுடன் மட்டுமல்லாது உப உணவுப் பொருட்களான பனை வெல்லம், பனாட்டு, புழுக்கொடியல், பன்னவேலை பொருட்கள் தொடர்பிலும் கவனத்தினை செலுத்தி தொழிலாளர்களையும், மகளிர்குழு உறுப்பினர்களையும் ஈடுபடுத்தி இவ் உற்பத்திகள் மேற்கொள்ள திட்டங்கள் வகுக்கப்பட்டு, இதில் பனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்ல திட்டத்தினை நடைமுறைப்படுத்தி நல்ல வருமானம் பெறுவதுடன், பயனாளிகளும் நன்மை அடைகின்றனர். திரு க.அருணகிரிநாதர் அவர்களைத் தொடர்ந்து மீண்டும் இன்றுவரை நா.கணேசன் அவர்கள் தலைமைப் பொறுப்பேற்று தொடர்ந்து திட்டங்களை முன்னெடுத்தமையுடன், சங்கத்திற்கென சொந்தமாக வாகனம் கொள்வனவு செய்யப்பட்டு, சங்கங்களுக்கிடையே கள் வெளி மாற்றம் செய்து வருமானத்தினை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இவரது காலத்தில் சங்கத்திற்கென நிரந்தர நவீன கிளை அமைக்கப்பெற்றுள்ளது. உறுப்பினர்கள், பணியாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் க.பொ.த(சா/த, உ/த), பல்கலைக் கழகம் சித்தி பெற்றவர்களுக்கான உதவிக்கொடுப்பனவு வழங்கல் போன்றவற்றுடன் சிறந்த அங்கத்தவர்கள், பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் ஓய்வுபெற்ற அங்கத்தவரக்ள், பணியாளர்கள் வருடாந்தம் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுதல் போன்ற திட்டங்களின் கீழ் சங்கங்களின் 45வது வருடத்தில் பல நூறு அங்கத்தவர்கள், பணியாளர்கள் பயன்பெற்று வருகின்றார்கள்.

சங்கம் கல்வி அபிவிருத்தியில் கவனம் செலுத்தி முன்பள்ளிகளில் பயிலும் சிறார்களின் கல்விக்கு ஊக்குவிப்பு வழங்குதல், பொது நிறுவனங்களின் கல்வி செயற்பாடுகளுக்கு அன்பளிப்பு வழங்குதல் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. சங்கத்தின் வளர்ச்சியில் பனந்தொழில் வல்லுநர்களின் நேரடி நிர்வாகம் இருப்பதினால் அரசின் எதுவிதமான மானியமும் பெறாது பெரும் தொகையான வரியை செலுத்தியும் குறைந்த இலாபத்தில் நிர்வாக செலவுகளை ஈடுசெய்வதுடன் பல சமூக நலத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவது இக்கூட்டுறவு அமைப்பு சார்ந்துள்ள சமூக மக்களுக்கு நல்ல சேவையை ஆற்றி இலக்கை அடைந்துள்ளது எனக் குறிப்பிடலாம்.

இச்சங்க வளர்ச்சிக்கு பணியாளர் ஒத்துழைப்பு மிக முக்கியமானது. வெறுமனே ஊதியம் பெறுபவர் என்ற நிலைக்கு அப்பால் அர்ப்பணிப்புடன் சமூக மக்களுக்கு ஆற்றும் சிறந்த சேவை என்ற மனப்பாங்குடன் செயற்பட்டு வருவது விசேட கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். இந்நிறுவனத்தின் ஆரம்பம்முதல் இன்று வரை (45வது ஆண்டில்) பணிபுரிந்த, பணிபுரிகின்ற பணியாளர்கள் இதன் வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் கடமைபுரிந்துள்ளனர். இச்சங்க பொதுமுகாமையாளர் திரு கா.சிவஞானம் 1985ம் ஆண்டு தொடக்கம் 23.09.2015 வரை இச்சங்க வளர்ச்சிக்கு சிறப்பாக கடமையாற்றியுள்ளார். பொதுமுகாமையாளர் திரு கா.சிவஞானம் அவர்களைத் தொடர்ந்து திரு க.சக்திவேல் அவர்கள் பதில் பொதுமுகாமையாளராக கடமையாற்றியுள்ளார். 45வது ஆண்டில் திரு தெ.ரவிக்குமார் பதில் பொதுமுகாமையாளராக கடமையாற்றி வருகின்றார்.

சங்கம் தன்னுடன் தொடர்புடைய நிறுவனங்களின் ஒத்துழைப்பை வரலாற்று ரீதியாக பார்க்குமிடத்து, நேரடியாக தொடர்புடைய கூட்டுறவுத் திணைக்களத்துடன் நல்ல உறவினைப் பேணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறது. ஆரம்பகால கூட்டுறவு ஆணையாளர்கள் சங்கத்தினை பதிவு செய்வதிலும் செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும் வழிகாட்டி யுள்ளனர். திரு ச.வேலாயுதபிள்ளை அவர்களின் காலத்தில் வளர்ச்சி அதிகமானதாகும். இதனைத் தொடர்ந்து நெருக்கடியான காலத்தில் சேவையாற்றியிருந்த திரு தி.சபாரத்தினம் காலத்தில் சங்கம் பல காணிகளை சொந்தமாகக் கொள்வனவு செய்து பொரு ளாதார ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் வளர்ச்சியடைந்தது. கூட்டு றவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு சு.கணேசமூர்த்தி அவர்கள் காலத்தில் நிதிப் பலம் பெறவும், நிர்வாக ஆளுமையை வளர்க்கவும் பெரிதும் வாய்ப்பாக அமைந்தது. திரு க.ஐயாத்துரை அவர்கள் காலத்தில் கிராமிய வங்கி ஆரம்பிக்கப்பட்டு அங்கத் தவர்கள், பணியாளர்கள் சேமிப்பு வளர்ச்சி பெறவும் சங்கமும் நிதிப் பலமடையவும் உதவியுள்ளார். பின்பு பதவி வகித்த உதவி ஆணை யாளர் திரு வீ.கே.அருந்தவநாதன் அவர்கள் பல வழிகளிலும் சிறப் பாக சேவையாற்றி சங்க வளர்ச்சிக்கு உதவியுள்ளார். 45வது ஆண் டில் தற்பொழுது பதவி வகிக்கும் கூ.அ.உ.ஆணையாளர் திரு பொ.மோகன் அவர்கள் பல வழிகளிலும் சிறப்பாக சேவையாற்றி சங்க வளர்ச்சிக்கு பெரிதும் வழிகாட்டி வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

இச்சங்க வளர்ச்சிக்கு சமாசம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இன்றுவரை பல வழிகாட்டல்களை வழங்கி குறிப்பாக அங்க த்தவர் ஓய்வூதிய திட்டத்தினை நடைமுறைப்படுத்தி அங்கத்தவர் களுக்கு அளப்பரிய சேவையை ஆற்றி வருகிறது. சமூக மேம்பாட் டுத் திட்டம் மூலமும் அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கு பல நன்மைகளை செய்து வருகிறது. வலிகாமம் கொத்தணி ஆரம்பிக்கப் பட்டது முதல் இன்றுவரை இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு குறிப்பாக அங்கத்தவர் பொருளாதார விருத்திக்கு பெரிதும் உதவியுள்ளது. யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையானது எமது பணியாளர், அங்கத்த வர்களுக்கு பல பயிற்சிகளையும் தலைமைத்துவ வழிகாட்டல்களை யும் வழங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. பனை அபி விருத்திச் சபை உற்பத்தி துறைசார் தொழில்நுட்பங்களை வழங்கி, சங்கத்தின் தொழில்வளம் செழிக்க பெரிதும் உதவியுள்ளது. காலத் திற்கு காலம் நியமனம் பெற்ற தலைவர்கள் உதவியுள்ளனர்.

சங்கத்தின் வரலாற்றில் அரச நிதி உதவிகள் கிடைத்த காலம் ஐக்கிய முன்னணி அரச காலமாகும். இவ்வகையில் கணேஸ் வரத்தில் திரு கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இந்து கலாச் சார அமைச்சராக இருந்தபோது, ரூபா 10 இலட்சம் நிதி உதவியில் உற்பத்தி நிலையக் கட்டடமும், தற்போது வெல்ல நிலைய கட்ட டங்கள் இரண்டுக்கும் தலா 45 இலட்சம் ரூபாவும் அவரால் ஒதுக்கீடு செய்து தரப்பட்டது. இச்சமூக மக்களுக்கும் இக்கூட்டுறவு நிறுவனத் திற்கும் அளித்த உதவியை நன்றியுடன் இச்சங்கம் வரலாற்றுக் குறிப்பில் குறிப்பிட விரும்புகின்றோம்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் உற்பத்திச் சங்கமாகத் திகழும் தெல்லிப்பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் 45வது வருட நிறைவில் தனக்கென தனி இடம் அமைத்து செயற்படுகிறது என்ற மகிழ்வுடன் சங்கத்தின் வரலாற்றுக் குறிப்பை நிறைவு செய்கிறோம்.

**சங்கத்தில் பதவி வகித்த நியமனத் தலைவர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு வ.கிருஸ்ணசாமி | - | முன்னாள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர். |
| 02. | திரு S.அமிர்தசாகரன் | - | உதவி அரச அதிபர் |
| 03. | திரு வ.பொன்னம்பலம் | - | 1975 - 1978 |
| 04. | திரு வே.மாணிக்கம் | - | 1978 - 1980 |

**சங்கத்தில் பதவி வகித்த தெரிவுத் தலைவர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு க.உருத்திராபதி | - | 1980 - 1981 |
| 02. | திரு பூ.இரத்தினம் | - | 1981 - 1989 |
| 03. | திரு க.சண்முகலிங்கம் | - | 1989 - 1992 |
| 04. | திரு நா.கணேசன் | - | 1992 - 1998 |
| 05. | திரு க.சின்னராசா | - | 1998 - 2001 |
| 06. | திரு கா.கதிரமலை | - | 2001 - 2005 |
| 07. | திரு மு.தவபாலன் | - | 2005 - 2007 |
| 08. | திரு க.அருணகிரிநாதர் | - | 2007 - 2013 |
| 09. | திரு நா.கணேசன் | - | 2013 - இன்றுவரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



இயக்குனர் சபை



பணியாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"கற்பக ஒளி" 45வது ஆண்டு நிறைவு

சிறப்பு மலருக்கு எமது வாழ்த்துக்கள்!

கடந்த 45 வருடங்களாக கூட்டுறவுக் கொள்கைகள்
வழியிலான எமது பயணத்தின்போதான எமது
சேவைகளும் தொழிற்பாடுகளும்

கிராமிய வங்கி
சேவை



- அங்கத்தவர் நிலையான வைப்பு
- அங்கத்தவர்களுக்கான கடன்வழங்கல்.

சமூக நல
மேம்பாட்டு
திட்டங்கள்




போத்தற்
கள்

உற்பத்திகள்

- பனை வெல்லம்



கல்வி
மேம்பாட்டு திட்டம்

- முன்பள்ளிகளை நிர்வகித்தல்.
- அங்கத்தவர், பணியாளர், முன்பள்ளி ஆசிரியர்கள் கல்விப் பயிற்சியளிப்பு.

- ஒடியல்





- புழுக்கொடியல்

கல்லாக்காரம்

தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கம்
(வ-து)

மருத்துவமனை வீதி,
தெல்லிப்பழை.

தொலைபேசி:
021 321 1351


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

இச்சங்கமானது 1972ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டது. காலம்காலமாக மரவரி முறையில் சிக்குண்டு நசுக்கப்பட்ட பாமர சீவல் தொழிலாளர்களை முன்னேற்றும் நோக்கத்துடன் 1972 ஆம் ஆண்டு வைகாசி மாதம் அன்றைய நிதி மந்திரியாக இருந்த அமரர் கலாநிதி என்.எம்.பெரேரா அவர்கள் எடுத்த முற்போக்கான மாற்றமே இதற்கு வித்தாக அமைந்துள்ளது. இத் திட்டத்தை வெற்றிகரமாக தொடக்கி வைப்பதற்கு முழுமூச்சாக நின்று பாடுபட்டு உழைத்தார் அவர். அன்று இச் சங்கங்களுக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக இருந்து கடமைபுரிந்த திரு.க.சண்முகலிங்கம் அவர்களை நாம் எல்லோரும் கட்டாயமாக நினைவில் கொள்ளவேண்டும்.

இவர்களது விடாமுயற்சியின் பயனாக சங்கானை, சுழிபுரம், அராலி, காரைநகர் ஆகிய பகுதிகளில் கள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம் என்னும் பெயரில் சிறிய சங்கங்களாக தனித்தனி காரியாலங்களை அமைத்து அவர்களுக்கு ஏற்ற கிளைகளை அமைத்து அங்கத்தவர்கள் அன்று உற்பத்தி செய்த கள்ளை கொள்வனவு செய்து அவற்றின் ஒரு பகுதியை விற்பனை செய்தல், விற்கப்படாத கள்ளை அகற்றுதல் போன்ற நடவடிக்கையை செய்து வந்தது. இதன் பயனாக சகல தொழிலாளர்களும் தமது உற்பத்திக்கு சராசரி வருமானம் பெறத்தொடங்கினார்கள். இவ்வாறு இருந்தபோதும் ஒரு பகுதியினர் சங்கத்துக்கு எதிராகவே இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வண்ணமாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முமாக வளர்ச்சியடைந்த இச் சங்கங்கள் அக்காலத்தில் உற்பத்தி செய்து வழங்கிய கள் போத்தல் ஒன்றிற்கு 25 சதம் வீதம் ஒவ்வோர் அங்கத்தவர்களிடமும் அறவிட்டு அவர்களுக்கு விபத்து ஏற்பட்டால் அக்காலம் இருந்த நிர்வாக சபை விபத்துக்கு ஏற்ற விதத்தில் விபத்துக்கொடை வழங்கும் திட்டத்தை அமுல்செய்து வந்தது.

1973 - 1974 இக் காலப்பகுதியில் மேற்கூறிய நான்கு சங்கங்களும் ஒன்றிணைக்கப்பட்டு சங்கானையில், **வட்டுக்கோட்டை தொகுதி கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவு சங்கம்** என்னும் பெயரில் கள் கொள்வனவு விற்பனை செய்தலை தனது தனித் தொழிலாக கொண்டு செயற்பட்டு வந்தது. 1974ம் ஆண்டில் உலகச் சந்தையில் சீனியின் விலை என்றும் இல்லாதவாறு உயர்ச்சியடைந்தது. இக்காலத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களின் யாழ்ப்பாணத்துக்கான வருகையின் பின் 1975ம் ஆண்டு பனம் பதநீரில் வெல்லம், சீனி ஆகியவற்றை உற்பத்திசெய்ய திட்டமிட்டு சங்கானை ப.தெ.வ.அ.கூ.சங்கம் அந்த ஆண்டிலே அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கடன், மானியம் என்பவற்றின் உதவியுடன் இச் சங்கம் தொல்புரம், சங்கானை, அராலி ஆகிய பகுதிகளில் மூன்று வெல்ல நிலையங்களை ஸ்தாபித்து வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டது. இக்காலத்திலே கள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம் என இருந்த பெயர் **வட்டுத் தொகுதி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்** என பெயர் மாற்றப்பட்டது.



கள் உற்பத்தி விற்பனையுடன் வெல்ல உற்பத்தி விற்பனையையும் தனது அபிவிருத்தியில் ஒன்றாக செய்து வந்தது. அன்று அரசாங்கத்தின் கொள்கைத்திட்டம் சங்கத்திற்கு பாதகமாக அமைந்ததால், அந்த ஆண்டிலே வெல்ல உற்பத்தி கைவிடப்பட்டது. அதாவது உற்பத்திச் செலவுக்கேற்ப விற்பனவு செய்யமுடியாத நிலை. இக்காலத்தில் வட்டுத்தொகுதி பிரதேச அபிவிருத்திச் சங்கத்தினாலே போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலை இயக்கப்பட்டு வந்தது. இதன் பயனாக ஓரளவு சங்கத்தை நடாத்தக்கூடியதாக இருந்ததேதவிர, சங்கம் இலாபகரமாக இயங்கமுடியவில்லை.

மேலும்1980.02.06ம் திகதியில் இருந்த நிர்வாக சபையினரின் ஆக்கபூர்வமான ஊக்கத்தினால் போத்தல் கள் அடைப்பு நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சங்கத்துக்கு கிடைத்தது. இதன்மூலம் இச்சங்கம் கள் உற்பத்தி விற்பனை, வெல்ல உற்பத்தி விற்பனை, போத்தலில் கள் அடைத்தல், விற்றல் ஆகிய தொழிலை செய்து அங்கத்தவர்களால் உற்பத்தி செய்யப்படும் கள்ளினை ஊற்றும் ஆபத்தில் இருந்து ஓரளவு தவிர்த்து செயற்பட்டு வந்தது.

அத்துடன் சங்கத்திற்கு சொந்தமாக காணி கொள்வனவு செய்வது தொடர்பில் 15.12.1980ல் சுழிபுரம், காளுவன் பகுதியில் ஒரு காணியைக் கொள்வனவு செய்து ஒரு கிளையை அமைத்து அப்பகுதி மக்கள் உற்பத்தி செய்யும் கள்ளை கொள்வனவு செய்து வருகிறது. இக்காலத்தில் 15% வியாபார மொத்த விற்பனை வரி அமுலில் இருந்தது. 1981 கார்த்திகை மாதம் 10% வீதமாக வியாபார மொத்த விற்பனை வரி குறைக்கப்பட்டது. இவ்வரி 10% வீதமாக குறைக்கப்பபட்டதால் அவ் 5% வீத வரியினை அங்கத்தவர்களுக்கு கட்டாய சேமமாக ஒதுக்கி வைக்க வேண்டுமென அப்போது இருந்த நிர்வாக சபையால் தீர்மானிக்கப்பட்டு அன்று முதல் ஒவ்வொரு அங்கத்தவர்களின் பெயரிலும் கட்டாய சேமம் கணக்கிடப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் ஒவ்வொரு அங்கத்தவர்களும் தங்கள் பெயரில் கட்டாய சேமம் சேமிக்கக் கூடியதாகவுள்ளது. இச்சேமத்தினை அங்கத்தவர்கள் ஓய்வுபெறும் காலத்தில் வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

1982ஆம் ஆண்டு மார்கழி மாதம் அன்று தலைவராக இருந்த திரு.சு.நடேசு அவர்களின் விடாமுயற்சியின் பயனாக அன்று இருந்த நிர்வாகசபையும் சேர்ந்து கட்டடத்துடனான காரியாலயத்தை கொள்வனவு செய்து அக்கட்டடத்தை திருத்தி அமைத்து 13.06.1982 அன்று திரு.சு.நடேசு அவர்களது தலைமையில் அக்காலத்தில் கூ.அ.உ.ஆணையாளராக இருந்த திரு வேலாயுதபிள்ளை அவர்களால் காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது. தனது 10ம் ஆண்டு பூர்த்தி விழாவினை வெகு விமரிசையாக கொண்டாடியது, இவ்விழாவில் துவிச்சக்கர வண்டி ஓட்டம், மரதனோட்டம், கயிறு இழுவைப் போட்டி, சாதாரண ஓட்டப் போட்டி, அங்கத்துவ மகளிருக்கான போட்டிகள





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற நிகழ்ச்சிகள் சங்கானை பட்டினசபை இருக்கும் கலை அரங்கத்தில் இரவு நிகழ்ச்சியினை நடாத்தி புதிய கட்டட அங்குரார்ப்பணத்தை ஆரம்பித்து அக்கட்டடத்தில் இருந்து அங்கத்தவர்களுக்கு சிறந்த சேவையை ஆற்றி வந்தார்.

சங்கம் தனது தொழிற்பாட்டை விருத்தி செய்யும் நோக்கோடு அன்று தலைவராக இருந்த திரு.சு.நடேசு அவர்கள் ஏனைய நிர்வாக சபையினரின் உதவியுடன் 1981ஆம் ஆண்டில் காணியுடன் காரியாலயம் வாங்கியது போன்று, 1982 ஆம் ஆண்டு இ.எப்.லொறி ஒன்றையும் கொள்வனவு செய்தார்கள். இவ் வாகனத்தின் உதவியுடன் உள்ளூரிலுள்ள கிளைகளுக்கிடையில் கள் மாற்றத்தை செய்து மேலும் தொழிற்பாட்டை விருத்தி செய்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் இச்சங்கம் 28.07.1986ல் நிற்சாமம் பகுதி மக்கள் கிளை அமைப்பதற்கு ஒரு காணியினையும் 3.11.1986ல் சங்கானை பொல்வத்தையில் காரியாலயத்துக்கு வேறு ஒரு பெரிய கட்டடத்துடனான காணியையும் கொள்வனவு செய்தது. மேலும் 01.10.1987ல் சுழிபுரம், குடாக்கனையில் ஒரு காணியையும், 26.02.1988ல் வட்டு கிழக்குப் பகுதியில் ஒரு காணியையும், 16.01.1089ல் அராலி வடக்கில் ஒரு காணியையும், 02.12.1989ல் சங்கானையில் ஒரு காணியையும், 05.11.1989ல் வட்டு மேற்கில் ஒரு காணியையும், 18.04.1992ல் சங்கானை காரியாலயத்துடன் காணியும், 13.12.1992ல் காரைநகரில் ஒரு கிளைக்கான காணியையும் கொள்வனவு செய்தது.

1992ம் ஆண்டில் இருந்து அங்கத்தவர்களுக்கும், பொதுமக்களுக்கும் கதிரை வாடகைக்கு வழங்கும் சேவையையும் செய்து வருகிறது. சங்கத் தொழிற்பரப்பில் இருக்கும் சனசமூக நிலையங்கள், பாலர் பாடசாலைகள் ஆகியவற்றிற்கு நிகழ்வுகளுக்கு அன்பளிப்பாக நிதியுதவி செய்து வருகிறது. 91/92, 92/93 காலப் பகுதியில் அங்கத்துவ மகளிர்களுக்கு பனை ஓலைப் பன்னப் பயிற்சி கொடுத்து அதன்மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சங்கானையில் உள்ள பனம் பொருள் உற்பத்தி நிலையத்தில் விற்பனை செய்து வந்துள்ளது. மேலும் அராலியில் உள்ள கயிறு திரிக்கும் தொழிற்சாலையில் கயிறு உற்பத்தி செய்தும் மகளிர் குழுவினரால் தயாரிக்கப்பட்ட பிஸ்கற், ஜீவாகாரம், மிக்சர், பருப்பு ஆகிய பொருட்களை விற்பனை செய்தும் வந்துள்ளதால் இலாபத்தை ஈட்டியதுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

இக்காலத்தில் சங்கம் கள் கொள்வனவு விற்பனை, வெல்ல உற்பத்தி விற்பனை, போத்தற் கள் உற்பத்தி, லோவைன் உற்பத்தி, பனம் பொருள் உற்பத்தி, ஜீவாகார உற்பத்தி, தென்னந்தும்பு உற்பத்தி, பனம் பொருள் உற்பத்தி நிலையம் நடத்துதல் போன்று பாரிய நிறுவனமாக இந் நிறுவனம் திகழ்ந்தது.

கடந்த காலத்தில் சங்கத்தின் செயற்பாடுகளுக்கும் காலக் கிரமத்தில் ஏற்படுத்தப்பட்ட செயற்பாடுகளுக்கும் இடையில் காணப்பட்ட முன்னேற்றம் காரணமாக அடைந்த பயனை உணர்ந்த அங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தவர்கள் தமது முன்னேற்றமான கல்வி, சுகாதாரம், கலாச்சாரம் போன்றவற்றின் வளர்ச்சி சங்கத்தின் ஊடாகவே அடையமுடியும் என்பதில் நம்பிக்கை கொள்ள ஆரம்பித்தனர். இதன் காரணமாக தமது உற்பத்திகளை முழுமையாக சங்கத்திற்கு வழங்கி தங்களது எதிர்காலத்தை நிச்சயித்துக் கொண்டனர். இதன் விளைவாக அங்கத்தவர்களின் கட்டாய சேமம் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இவற்றை உணர்ந்த அங்கத்தவர்கள் மேலும் சங்கத்துடன் இணைந்து ஆக்கபூர்வமாக செயற்பட்டு வருகின்றனர்.

மேலும் இச்சங்கத்தின் பெயர் 1992ம் ஆண்டு **பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்** என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

மேலும் 1997ஆம் ஆண்டில் எமது சங்கத்தின் கீழ் 02 முன்பள்ளிகள் முதன்முதலாக இணைக்கப்பட்டது. இம் முன்பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் எமது சங்கத்தினால் வேதனமும் வழங்கப்பட்டு வந்தது. மேலும் 2002ம் ஆண்டில் மேலும் 08 முன்பள்ளிகள் எமது சங்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டு, மொத்தமாக 10 முன்பள்ளிகள் இயங்கி வந்தன.

அங்கத்தவர்களின் கொடுப்பனவுகளை இலகுபடுத்தும் நோக்கத்துடனும் அங்கத்தவர்களிடையே சேமிப்பு பழக்கத்தினை மேலும் ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் 2004ம் ஆண்டில் எமது சங்கத்தில் கூட்டுறவு கிராமிய வங்கி ஒன்று உருவாக்கப்பட்டது. கடந்த காலத்தில் மது விற்பனை நிலையமாக இருந்த கட்டடம் மீள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு, அக் கட்டடத்திலேயே கூட்டுறவு கிராமிய வங்கி நடாத்தி வருகின்றோம். இக்கிராமிய வங்கி ஆரம்பித்ததன் விளைவாக அங்கத்தவர்கள் தமது கொள்வனவுப் பணம் முழுவதையும் எடுத்து செலவளிக்காது, குறிப்பிட்ட தொகையை சேமித்து சேமிப்பு பழக்கத்தினை தம்மிடையே வளர்த்துக் கொண்டார்கள். இக்கிராமிய வங்கி ஊடாகவே அங்கத்தவர், பணியாளர்கள் கொடுப்பனவுகள், கடன் வழங்கல், பண்டிகைக்கால கொடுப்பனவு வழங்கல் போன்றவை இடம்பெற்று வருகின்றன.

2005ம் ஆண்டில் மேலும் 08 முன்பள்ளிகள் எமது சங்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டு, மொத்தமாக 18 முன்பள்ளிகள் இயங்கி வருகின்றன. இம் முன்பள்ளிகளில் மொத்தமாக 22 ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருவதோடு சுமார் 435 சிறார்கள் கல்வி கற்று வந்தனர். இங்கு முதன்மை ஆசிரியருக்கு 1000/-வும் இணை ஆசிரியருக்கு ரூபா 750/- என வேதனம் வழங்கப்பட்டு வந்தது. மேலும் கொத்தணியின் அனுசரணையுடன் முன்பள்ளி சிறார்களுக்கு இலவசமாக சத்துணவு, சீருடைத் துணிகள் என்பனவும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சீருடை சேலையும் வழங்கப்பட்டு வந்தன. எமது சங்கத்தின் கிளைகள் நவீனமாக கட்டப்பட வேண்டும் என்ற சிந்தனைக்கு அமைய கிளை இல. 55, காளுவன் கிளையும், கிளை இல. 59, வட்டு மேற்கு மில்லடி என்ற கிளையும் 2006ம் ஆண்டு 03ம் மாதத்தில் நவீன கட்டடங்களாக அமைக்கப்பட்டு அதில் கிளை இல. 59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் தற்போது விற்பனை நிலையமாக இயங்கி வருகின்றது.



எமது சங்கத்தின் பொதுமுகாமையாளராக இருந்த திரு.த.செல்வராசா அவர்கள் 2006/05/31ம் திகதியுடன் ஓய்வு பெற்றுக் கொண்டார். இவர் தனது சேவைக் காலத்தில் எமது சங்கத்தை யாழ். மாவட்டத்தில் உள்ள ஏனைய சங்கங்களைவிட மிகவும் திறமையாக இலாபத்தில் நடாத்திச் சென்றுள்ளார். இவரது சேவையை பாராட்டி சங்க நிர்வாகமும் பணியாளர்களும் இணைந்து இவருக்கு சேவைநலன் பாராட்டு விழா நடாத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எமது சங்கத்திற்கு புதிய பொதுமுகாமையாளராக, இச் சங்கத்தில் கணக்கு பதிவாளராக கடமையாற்றி வந்த திரு.சி.தயாபரன் அவர்கள் நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றுக்கு அமைய 2006.06.01ம் திகதி பதவியைப் பொறுப்பேற்று இச்சங்கத்தை வழிநடத்தி வருகின்றார்.

2006.08.11ம் திகதி யாழ்-கண்டி வீதி (A9) மூடப்பட்டதன் காரணமாக கொழும்பில் இருந்து மதுபானங்கள் எவையும் யாழ் மாவட்டத்திற்கு இறக்குமதி செய்யப்படவில்லை. இதன் காரணமாக உள்ளூர் உற்பத்திகளை பெருமளவில் சந்தைப்படுத்தும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. இதனால் இக்காலப் பகுதியில் எம்மிடம் இருந்த போத்தற்கள், சாராயம் என்பன கூடிய பெறுமதியில் விற்பனை செய்யப்பட்டன. இதனால்தான் சுமார் ரூபா 3,900,000.00 கிடைக்கப்பெற்றது. இக் காலகட்டத்தில் நிர்வாகத்தில் தலைவராக இருந்த திரு.வ.முத்துராசா அவர்களும், ஏனைய நிர்வாக உறுப்பினர்களும் இணைந்து எமது சங்க அங்கத்தவர்களுக்கு மாதாந்தம் ஓய்வூதியம் வழங்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற தீர்மானத்தினை எடுத்து 2010ம் ஆண்டு தொடக்கம் 60 வயதை பூர்த்தி செய்கின்ற அங்கத்தவர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்குவதற்கான முன் ஆயத்தமாக இந்நிதியாண்டில் கிடைக்கப்பெற்ற இலாபத்தில் இருந்து ரூபா 2,500,000/= இவ் ஓய்வூதியத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும் 2007/08ம் மாதத்தில் இருந்து ஒவ்வொரு அங்கத்தவர்களிடம் இருந்தும் ஒரு போத்தலுக்கு 50 சதப்படி அறவிடப்பட்டு இந்நிதியத்தில் சேர்க்கப்பட்டு வருகின்றது. அத்துடன் பண்டிகைகால கொடுப்பனவுகளை வழங்கும் முகமாக அங்கத்தவர்களிடம் இருந்து ஒரு போத்தலுக்கு ரூபா1/- வீதம் விசேட சேமமாக அறவிடப்பட்டு வருடத்தில் வருகின்ற பண்டிகை தினங்களில் வழங்கப்பட்டு வருகின்றது.



பாராளுமன்ற உறுப்பினராக இருந்து அமரத்துவமடைந்துள்ள எமது பெருமைக்குரிய சிவனேசன் அவர்கள் தனது நிதி ஒதுக்கீட்டில் கணினி ஒன்றை 2007/09ம் மாதம் எமக்கு அன்பளிப்பாக தந்துள்ளார். இதனால் எமது சங்க செயற்பாடுகள் இலகுபடுத்தக் கூடியதாக காணப்படுகின்றது. மேலும் ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதம் 06ம் திகதி முன்பள்ளி ஆசிரியர்களை எமது சங்கம் கௌரவித்துக் கொண்டு வருகின்றது. அத்துடன் முன்பள்ளி விளையாட்டு விழாவுக்கு அன்பளிப்பையும் வழங்கி வருகின்றது.

எமது கிராமிய வங்கியில் சேமிப்பினை வைத்திருக்கும் அங்கத்தவர்களில் குறிப்பிட்ட சில அங்கத்தவர்களது உச்ச சேமிப்புத் தொகை சுமார் ரூபா 350,000.00திற்கு மேல் காணப்படுகிறது. இச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமிப்புத் தொகையை அவதானித்த ஏனைய அங்கத்தவர்களும் தங்களது சேமிப்புத் தொகையை இன்னும் கூடுதலாக அதிகரிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் தொழிற்பட்டு வருகின்றனர். இவர் களது சேமிப்புத் தொகையின் மீதி ரூபா 100,000.00 ற்கு மேற்படும் சமயங்களில் இவர்களது கணக்கில் நிலையான வைப்பில் இடப்படு கின்றமை அங்கத்தவர்களுக்கு மிகவும் பயனுள்ள ஒரு செயற் பாடாக அமைகின்றது.

மேலும் ஒவ்வொரு வருடமும் சராசரியாக சுமார் 500ற்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் தொழிற்பட்டு வருகின்றனர். மேலும் இன் றைய காலகட்டத்தில் எமது சங்க அங்கத்தவர்கள் அரசாங்க ஓய்வூ தியர்கள்போல் வருமானம் பெற்று வருகின்றனர். அதாவது சமாசம், கொத்தணி என்பவற்றிலிருந்து ஓய்வூதியக் கொடுப்பனவைப் பெற் றுக்கொள்வதோடு, கமநல காப்புறுதியிலிருந்தும் சங்கத்திலிருந்தும் ஓய்வூதிய கொடுப்பனவினையும் பெற்றுக்கொள்கின்றனர்.




மேலும் எமது சங்க அங்கத்தவர்கள், பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியோர் பல துறைகள் தொடர்பான பயிற்சியைப் பெற்றுக்கொள்ளும்பொருட்டு வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங் கங்களின் சமாசமும், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையும் வருடாந் தம் பயிற்சிகளை வழங்கி வருகின்றன. அதன் காரணமாக சங்க செயற்பாடுகள் மிகவும் திறமையாக நடாத்தப்பட்டு வருகின்றன.

எது எவ்வாறாயினும் எமது சங்கமானது இத்தொழில் சார்ந்த மக்களின் வாழ்வில் ஒளிகாட்டி நிற்கின்ற நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகின்றது என்பதில் யாரும் மாறுபட்ட கருத்துகள் கூறமுடி யாது. அங்கத்தவர்கள், பணியாளர்கள் ஒத்துழைப்பினால் சங்கம் வளரவேண்டும். சங்கத்தின் வளர்ச்சிமூலம் அங்கத்தவர்கள், பணியா ளர்கள் நன்மைபெற வேண்டும்.

நன்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



இயக்குனர் சபை



பணியாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45வது ஆண்டு சிறப்பு மலரான "கற்பக ஒளி"
பிரகாசிக்க வாழ்த்துகின்றோம்!



## பிரதான செயற்பாடுகள்

- கிளை நிலையங்களை நவீனமயப்படுத்தி விற்பனையினை அதிகரித்தல்.
- பாரிய தொழிற்சாலை அமைப்பில் போத்தற் கள் உற்பத்தி செய்தல்.
- மீதமான சாற்று உற்பத்திகளை வடிசாலைக்கு வழங்குதல்.
- கிளை ரீதியாக சுவையுணவு விற்பனை செய்தல்.
- நிழற்படப் பிரதிச் சேவை.

## கிராமிய வங்கிச் சேவை

- ✧ அங்கத்தவர் சேமிப்பை அதிகரித்தல்.
- ✧ அங்கத்தவர் அல்லாதோரின் நடைமுறைக் கணக்கை பேணுதல்.
- ✧ அங்கத்தவர் நிலையான வைப்பிற்கு எதிரான கடன் வழங்கல்.
- ✧ அங்கத்தவர் அல்லாதோருக்கு கடன் வழங்கல்.



## அங்கத்தவர் நலத்திட்டம்

- ✧ அங்கத்தவர் வாழ்வாதாரக் கொடுப்பனவு
- ✧ விபத்து மரணக்கொடை வழங்கல்
- ✧ சிறந்த அங்கத்தவர் கௌரவிப்பு
- ✧ கல்விப் பயிற்சியளிப்பு

## கல்விசார் சேவைகள்

- ✧ முன்பள்ளிகளின் விளையாட்டு நிகழ்வுக்கு அன்பளிப்பும், ஆசிரியர்களுக்கு வேதனமும் வழங்குதல்.
- ✧ அங்கத்தவர், பணியாளர், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி.
- ✧ தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளுக்கு ஊக்குவிப்பு வழங்கல்.
- ✧ அங்கத்தவர், பணியாளர் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணம் வழங்குதல்.

## வாடகை வாகன சேவை



## நிழற்படப் பிரதி சேவை



**சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

பிரதான வீதி,
சங்கானை

தொ.பே:
021 373 5403


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

# 1972ம்

ஆண்டில் யாழ். மாவட்டத்திலும் ஏனைய இடங்களிலும் அமைப்பு ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஓர் மாற்றம் நிகழ்ந்தமை வரலாறாகிவிட்டது. சீவல் தொழிலாளர் சமூகம் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் தம்மை நிறுவனமயப்படுத்திய ஆண்டு அதுவாகும்.

அந்த வரலாற்றோடு எமது சங்க வரலறும் ஆரம்பமாகியது. யாழ். மாவட்டத்திலுள்ள எமது பகுதியில் பொதுவாக அமைக்கப்பட்ட கூட்டுறவுத் தவறணை முறையில் எமது பகுதி அங்கத்தவர்களும் இணைந்து **மாதகல் கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், விளான் கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்** என இரு சங்கங்களை அமைத்தனர். இச்சங்கங்கள் பண்டத்தரிப்பு, இளவாலை, சில்லாலை, மாதகல், சகாயபுரம், விளான் ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதாக அமைந்தன. கூட்டுறவு அமைப்புமுறை ஆரம்பமான காலம் என்பதாலும், பல சங்கங்கள் சிறிது சிறிதாக அமைக்கப்பட்டதாலும் சங்கங்கள் பல பிரச்சினைகளை எதிர் நோக்கி, பலமிழந்து இயங்கமுடியாத நிலை ஏற்பட்ட இக்காலகட்டத்தில், இவற்றினை இணைத்து இயக்க கூட்டுறவுத் திணைக்களத்தால் எடுக்கப்பட்ட முடிவின்படி, இச்சங்கங்கள் மானிப்பாய் பகுதியில் இயங்கிய சங்கங்களோடு, 1973ம் ஆண்டு காலப்பகுதியில் இணைக்கப்பட்டு, **வலி தென்மேற்கு கள்ளு உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்** எனப் பெயரிடப்பட்டு இயங்கியது. இக்காலகட்டத்திலிருந்து சங்கம் சண்டிலிப்பாய் சங்கத்திலிருந்து 1985ம் ஆண்டு பிரிக்கப்பட்டு, புதிய சங்கமாகப் பதிவுபெறும் வரை சண்டிலிப்பாய் சங்கத்தின் செயற்பாடுகளோடு இணைந்து எமது அங்கத்தவர்கள், பணியாளர்கள் செயற்பட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய கட்டமைப்பு உதயம்

1973ம் ஆண்டுக்கும் 1985ம் ஆண்டுக்குமிடைப்பட்ட காலத்தில் இச்சங்கத்தின் நடவடிக்கையில் அங்கத்தவர்கள் திருப்தியுறாமையும், தாம் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்படுகின்றோம் என்பதனை உணர்ந்தமையாலும் இச்சங்கத்தில் இருந்து தாம் விடுபட்டு தமது பகுதிக்கென ஓர் சங்கத்தினை அமைக்க முன்வந்தமை இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும். இக்காலத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக இருந்த திரு ச.வேலாயுதம்பிள்ளை அவர்களிடம் பிரச்சினைகளை எடுத்து விளக்கி, தமது கோரிக்கையை அங்கத்தவர்கள் முன்வைத்தமையை அடுத்து, அவரது ஒத்துழைப்போடும், அப்போதைய மூத்த பணியாளர்களாக இருந்த பணியாளர்களின் ஒத்துழைப்போடும், ஏனையோரின் ஒத்துழைப்போடும் 01.12.1985இல் இருந்து சங்கம் பிரிந்து **பண்டத்தரிப்பு பரிஷ் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்** என்ற பெயருடன் இயங்கியது. இது கூட்டுறவுச் சட்டத்தின் பிரகாரம் புதிய உபவிதியினை தயாரித்து 23.12.1985இல் சட்டபூர்வமாக பதிவுசெய்யப்பட்டு. ஜே/1762 என்ற இலக்கம் இச்சங்கத்துக்கு வழங்கப்பட்டது.

## எழுச்சியும் வளர்ச்சியும்

09.12.1985இல் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு ச.வேலாயுதபிள்ளை அவர்களின் சமுகத்துடன் கூட்டப்பட்ட ஆரம்பப் பொதுக்கூட்டத்தில் இச்சங்கத்தின் ஆரம்பத்துக்காகப் பாடுபட்ட திரு யோ.செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் தலைமையில் புதிய நிர்வாக சபை அமைக்கப்பட்டது. 23.04.1989 வரை இவரது தலை மையிலான நிர்வாக சபை செயற்பட்டது. இந்நிர்வாக காலத்தின்போது, 1986 முதல் ஆறு மாதத்தில் சங்கம் இலாபகரமாக இயங்கி வங்கியில் கணிசமான தொகையை நிலையான வைப்பிலிட்டதுடன், 2ஆம் தடவைக் கொள்வனவாக அங்கத்தவர்களுக்குக் கொடுப்பனவு செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

## சூழ்நிலையை ஒட்டிய தளர்வு

1987ம் ஆண்டு நாட்டில் அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டு, சங்கத்தின் தொழிற்பாடுகள் பாதிக்கப்பட்டபோதிலும், அவ்வாண்டும் சங்கம் இலாபத்தில் இயங்கியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ்வாண்டிலும் 2ம் தவணைக் கொடுப்பனவு சங்கத்தால் மேற்கொள் ளப்பட்டது. 1988ம் ஆண்டில் சங்கம் நட்டத்தில் இயங்கியது.

## நிர்வாக மாற்றமும் வளர் நிலையும்

22.04.1989ல் கூடிய வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் புதிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டது. இந்நிர்வாக சபையின் சார்பாக புதிய தலைவராக திரு ஞா.சூசைப்பிள்ளை அவர்கள் தெரிவுசெய் யப்பட்டார். 19-06-1991 வரை இவரது தலைமையிலேயே சங்கம் தனது பணிகளை ஆற்றிவந்தது.

1989ம் ஆண்டில் புதிய நிர்வகிப்பில் ஏற்பட்ட மாற்றம் சங்கம் இலாபகரமாக இயங்கியமையிலிருந்து தெரியவருகிறது. இவ்வாண் டில் சங்கம் இலாபகரமாக இயங்கியதுடன், அங்கத்தவர்களுக்கு 2ம் தடவைக் கொடுப்பனவும் வழங்கியுள்ளது. இவ்வாண்டின் இலாபத் துக்கு காரணமானவற்றில், விற்பனைக்கு பின் எஞ்சும் கள்ளிலிரு ந்து பாணி வடித்து, அதன்மூலம் அதிக இலாபம் உழைத்தமையும் ஒன்று என்பது இங்கு குறிப்பிடவேண்டியதாகும்.

1990ம் ஆண்டிலும் சங்கம் இலாபகரமாக இயங்கியது. போத் தலில் கள் அடைத்து விற்கும் புதிய முயற்சியும் இவ்வாண்டில் மேற் கொள்ளப்பட்டது. 2ம் தடவைக் கொடுப்பனவு இவ்வாண்டில் அங்கத் தவர்களுக்கு ஒதுக்கப்பட்டது. இவ்வாண்டில் சங்கம் சங்கானை வடி சாலைச் சமாசத்தில் ரூபா 120,000ஐ செலுத்தி பங்குதாரராக இணை ந்ததுடன், சுமார் ரூபா 372,000 பெறுமதியான காணி ஒன்றினைக் கொள்வனவு செய்ததும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## புதிய உற்பத்தி முதலீடுகள்

1991ம் ஆண்டு முதல் ஆறு மாதத்தில் சங்கம் பெரும் நிதி நெருக்கடியில் சிக்கியதுடன், கள்ளிலிருந்து பாணி உற்பத்தி செய் யப்பட்டதில் பெரும் நட்டமும், பனை வெல்ல உற்பத்தியில் ஏற்பட்ட நட்டமும் 19.06.1991இல் கூட்டப்பட்ட பொதுக்கூட்டத்தில் பிரதிபலித் தது. அதன் காரணமாக 19.06.1991ல் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. அதன் தலைவராக திரு இ.இராசநாயகம் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். இவ்வாண்டில் சங்கம் நட்டத்தில் இயங்கி யது. இந்நட்டத்துக்கு பாணி உற்பத்தியில் ஏற்பட்ட நட்டமும், பனை வெல்ல உற்பத்தியில் ஏற்பட்ட நட்டமும் பிரதான காரணங்களாக அமைந்தன. இருப்பினும் சங்கம் ரூபா 89,000 பெறுமதியான உற்பத்தி நிலையக் கட்டடத்தை அமைத்ததுடன், ரூபா 65,000 பெறு மதிக்கு பனை வெல்ல உபகரணங்களையும் கொள்வனவு செய்த மையும் குறிப்பிடத்தக்கவையாகும்.

## இடப்பெயர்வும் புனர்வாழ்வும்

19.06.1991ல் தெரிவு செய்யப்பட்ட தலைவர், 16.02.1996 வரை இச்சங்கத்தின் தலைவராகச் செயற்பட்டுள்ளார். 1992ல் சங் கத்தின் முதலாவது இடப்பெயர்வு ஏற்பட்டது. இடப்பெயர்வு காரண மாகவும், நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாகவும் சங்கம் 8 மாதங்கள் மட்டுமே முழுமையாக இயங்கியது. இவ்வாண்டு பிற்பகுதியில் ஒரு கிளையை மட்டுமே இயக்கக்கூடியதாக இருந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. இருப்பினும் சங்கம் இலாபகரமாக இயங்கியதுடன், அங்கத்தவர் மீள்குடியமர்வு, புனர்வாழ்வுக்கென ரூபா 300,000 ஒதுக்கப்பட்டது. அங்கத்தவர்களுக்கு 2ம் தடவைக் கொடுப்பனவு, பணியாளர்களுக்கு ஊக்குவிப்புப் படி, அபாயப்படி என்பனவும் வழங்கப்பட்டன. அங்கத்தவர் சமூகப் பாதுகாப்பு கருதி கணிசமான அங்கத்தவர்கள் கமக்காரர் ஓய்வூதிய சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தில் இணைக்கப்பட்டார்கள். அங்கத்தவர் சேமம் இவ்வாண்டில் அதிகரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கவையாகும். வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளுக்கும் இடம்பெயர்ந்த நிகழ்வும் இவ்வாண்டிலேயே இடம்பெற்றது.

1993ம் ஆண்டு சங்கத் தொழிற்பாடுகள், இடப்பெயர்வாலும், கொட்டடியில் இருந்த கிளையை மட்டுமே இயக்கக்கூடிய நிலை இருந்தமையாலும் பெரிய அளவில் இயக்கி அதிக இலாபத்தை ஈட்டமுடியவில்லை. இருப்பினும் அங்கத்தவர்களுக்கு 2ம் தடவைக் கொடுப்பனவு, பணியாளர்களுக்கு ஊக்குவிப்புப் படி, ஆபத்துப்படி என்பனவும் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

1994ம் ஆண்டிலும் தொழிற்பாடு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இருந்தபோதிலும், சங்கம் இலாபத்தில் இயங்கி, 2ம் தடவைக் கொடுப்பனவு, பணியாளர் ஆபத்துப்படி, ஊக்குவிப்புப்படி என்பன வழங்கப்பட்டமை முக்கிய அம்சம் என்பதுடன், அங்கத்தவர்கள் சேமங்களுக்கு எதிராக நிலையான வைப்பு, சாதாரண சேமிப்பு என்பவற்றில் கணிசமான தொகைகளை வைப்பிலிட்டமை குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டில் ரூபா 200,000 க்கு இரு சில்லு உழவு இயந்திரம் ஒன்றினைக் கொள்வனவு செய்ததுடன், சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கத்தில் ரூபா 55,000 செலுத்தி தன்னையும் ஓர் பங்குதாரராக இணைத்தது. மேலும் இவ்வாண்டில் ரூபா 200,000ஐ அங்கத்தவர் மீள்குடியமர்வு, புனர்வாழ்வுக்கென ஒதுக்கியுள்ளமை கவனிக்கத்தக்கவை. அங்கத்தவர் சமூக மேம்பாட்டுத் திட்டத்துக்கென ஒரு நிதியை ஆரம்பித்ததும் இவ்வாண்டின் முக்கிய நிகழ்வாகும்.

1995ம் ஆண்டில் சங்கம் முழுமையான இடப்பெயர்வினைச் சந்தித்து, தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்தது. ஐப்பசி மாதம் வரை சங்கம் இயங்கி இலாபத்தை ஈட்டி, அங்கத்தவர்கள் 2ம் தடவைக் கொடுப்பனவுப் பணம் வழங்கியதுடன், பணியாளர் ஊக்குவிப்பு, விசேட படி, நட்டத்துக்கு எதிரான ஏற்பாடுகள் என்பவற்றை சங்கம் மேற்கொண்டுள்ளது. சுமார் 115,000 பெறுமதியான போத்தல்களை கொள்வனவு செய்ததுடன், கள் பரிசோதனைக் கருவி ஒன்றினை ரூபா 41,000க்குக் கொள்வனவு செய்தது. இக்காலத்தில் ரூபா 345,000 அளவில் அங்கத்தவர் இடர் உதவிப்பணம் வழங்கியமையும் குறப்பிடத்தக்க அம்சமாகும். இடப்பெயர்வினால் சங்கச் சொத்துக்கள், இருப்புப் பொருட்களை இழந்து நட்டமடைந்துள்ளதும் இவ்வாண்டின் முக்கிய அம்சமாகும். மேலும் மரணமடைந்த மற்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தரப் பாதிப்புக்குட்பட்ட அங்கத்தவர்களின் குடும்பப் பிள்ளை களின் கல்வி மேம்பாட்டுக்காக கல்வி உதவியாக பாடசாலை உப கரணங்கள், எழுதுபொருட்கள், அப்பியாசப் புத்தகங்கள் என்பவற்றை வழங்கியமை ஒரு சமூக மேம்பாட்டு நிகழ்ச்சியாக இவ்வாண்டில் கருதவேண்டியது.

1996ம் ஆண்டு மாசி மாதம் 16ல் சங்கத் தலைவராக திரு மா.மகேந்திரம் தெரிவுசெய்யப்பட்டார். மாசி மாதம் வரை தென்மராட்சியில் இயங்க முடியாதிருந்த போதிலும், அப்பகுதிச் சங்கங்களின் ஒத்துழைப்புடனும், இடம்பெயர்ந்து இப்பகுதியில் வாழ்ந்த அங்கத்தவர்களை ஒருங்கிணைத்து கைதடியிலும், கச்சாயிலும் கொள்வனவுக் கிளையினை பங்குனி மாதத்தில் இருந்து நடாத்த முடிந்தது. பங்குனி, சித்திரை ஆகிய இரு மாதங்களிலும் வடிசாலைக்கு கள் வழங்கியதன்மூலம் அதிக இலாபத்தினை சங்கம் அடைந்த நிலையில், தென்மராட்சியில் இடம்பெற்ற நடவடிக்கை காரணமாக எமது அங்கத்தவர்கள் வலிகாமத்துக்கு திரும்பியதும், வன்னிக்கு இடம் பெயர்ந்ததும் இடம்பெற்றது. சங்கம் இவ் இடப்பெயர்வின்போது பாரிய நட்டங்களைச் சந்தித்தது. உரொக்கம், தளபாட உபகரணம், இருப்புப் பொருட்கள் என்பவற்றை இழந்தது. சங்கத்தின் வரலாற்றில் இது பாரிய இழப்பாகும். சங்கம் வலிகாமத்துக்குத் திரும்பி பண்டத்தரிப்பு, சில்லாலை, விளான் கிளைகளை குறுகிய காலம் மட்டுமே இயக்கியது. இக்காலத்தில் சங்கம் பெரிதாக இயங்க முடியாதிருந்த போதிலும், தென்மராட்சியில் உழைத்த இலாபம் இவ்வாண்டில் நட்டத்தைக் குறைக்கக் கூடியதாக இருந்தது. சங்கம் குறுகிய நட்டத்தில் இக்காலத்தில் இயங்கியது.

1997ம் ஆண்டு சங்கம் தனது தொழிற்பரப்பு முழுவதிலும் கிளைகளைத் திறந்து இயங்கியபோதிலும், முழுமையாகத் தொழிற்படமுடியாத நிலையே இருந்து வந்தது. நாட்டு நிலைமை காரணமாகப் பாவனையாளர்கள் போதிய வருவாயற்று இருப்பதால் கூடிய அளவில் தொழிற்பட்டு அங்கத்தவர்களின் வருவாயை மேம்படுத்த முடியாத நிலை இருந்தது. இருப்பினும் வடிசாலைக்கு கள் வழங்குவதன்மூலம் கூடிய இலாபத்தைச் சங்கம் அடைந்து வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். இக்காலத்தில் இதுவரை அங்கத்தவர் சேமத்துக்கு எதிராக வைப்புக்கள் இடப்பட்டதுடன், முன்னர் மேற்கொண்ட சமூக முன்னேற்ற முயற்சிகளிலும் சங்கம் ஈடுபட்டு வந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1998ம் ஆண்டு மாசி மாதம் 2ம் திகதியன்று சங்கத் தலைவராக திரு அ.பெனடிற் தெரிவுசெய்யப்பட்டார்.

தலைமைக் காரியாலயம் பண்டத்தரிப்பு பட்டணத்தில் ஓர் கட்டடத்தில் செயற்பட்டு வந்தது. இக்காலத்தில் ஓரளவு சீரான நிலையில் கிளைகள், மதுபான நிலையம். வடிசாலை என்பன இயங்கி வந்தது. இதன்மூலம் கள், போத்தற் கள், மதுபானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனை செய்து நட்டம் இல்லாமல் சங்கம் இயங்குவதற்கு வழி வகுத்தது.

1999ம் ஆண்டிலும் 1998ல் இயங்கிய நெறியாளர்குழு உறுப்பினர்களே செயற்பட்டுள்ளனர். சங்கத்தின் தலைவராக திரு அ.பெனடிற் அவர்களே செயற்பட்டார். இவ்வாண்டில் சங்கத்தின் செயற்பாட்டில் முன்னேற்றம் காணப்பட்டது. இடப்பெயர்வும் அதன் தாக்கமும் குறைந்து, சங்கச் செயற்பாடுகள் ஓரளவு சீராக காணப் பட்டது. 1998ம் ஆண்டைவிடவும் அதிகரித்த இலாபத்தை சங்கம் ஈட்டியுள்ளது. கள் கொள்வனவு விற்பனவும், போத்தற் கள் உற் பத்தி, விற்பனவும் அதிகரித்து, அப்பகுதி இலாபத்துக்கான மூல மாக இருந்தது. அங்கத்தவர் சேமத்துக்கு எதிராக வைப்புக்கள், பணிக்கொடைக்கான வைப்புக்கள் இக்காலத்தில் வைப்புச் செய்யப் பட்டன. அங்கத்தவர், பணியாளர்களுக்கான கடன் வழங்கியமை என்பன இக்காலத்தில் முன்னேற்றகரமான செயற்பாடுகளாக அமை ந்துள்ளன.

2000ம் ஆண்டிலும் 1999ம் ஆண்டில் இயங்கிய நெறியாளர் குழு உறுப்பினர்கள் நிர்வகிப்பில் பங்குகொண்டதுடன், திரு பென டிற்றே தொடர்ந்தும் தலைவராக செயற்பட்டார். முன்னைய ஆண்டை ப்போலவே இவ்வாண்டும் செயற்பாடுகள் இடம்பெற்றன. சங்கம் இலாபத்தில் இயங்கியது. அங்கத்தவர்கள் சேமிப்புக்கு எதிராக கணிசமான தொகை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டமையும், ஏனைய நலத்திட்டங்களை தொடர்ந்து செயற்படுத்தியமையும் இவ் வாண்டில் முக்கியமான விடயங்களாகும்.

07.06.2001ல் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் தெரிவுசெய்யப் பட்ட நெறியாளர்குழுவின் தலைவராக திரு அ.அமலோற்பவநாயகம் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். இவ்வாண்டிலும் சங்கம் இலாபத் தில் இயங்கியபோதிலும், பணியாளர்களுக்குரிய புதிய சம்பளத் திட்டம் வழங்கப்பட்டமையால் ஏற்பட்ட நிர்வாகச் செலவு அதிகரிப்பு காரணமாக கூடிய இலாபத்தை ஈட்டமுடியவில்லை. போத்தற் கள் உற்பத்தி அதிகரித்திருந்தபோதிலும், விற்பனை குறைவாக இருந்த மையால், இப்பகுதி இலாபத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இலாபக் குறை வுக்கு ஒரு காரணமாகும். அக்காலத்தில் கட்டாய சேமம், பணியாளர் பிணை, பணிக்கொடை, கல்வி, சுகாதார நிதி என்பவற்றுக்கு எதிராக கணிசமான தொகைகள் வங்கியில் வைப்பிலிடப்பட்டு, நிதியங் களின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டமை சிறப்பு அம்சங்களாகும்.

2002ம் ஆண்டிலும் தொடர்ந்து அ.அமலோற்பவநாயகம் அவர்களே சங்கத்தின் தலைவராக செயற்பட்டார். 03.10.2002ல் கூடிய பொதுச்சபையில் நெறியாளர் குழு வெற்றிடத்துக்கு புதிய வர்கள் தெரிவுசெய்யப்பட்டமையால், செயலாளர், உபதலைவர் களது பதவியில் மாற்றங்கள் ஏற்பட்டது. சங்கத்தின் செயற்பாடுகள் இவ்வாண்டிலும் அதிகரித்தமையால் சங்கம் கூடிய இலாபத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தது. குறிப்பாக போத்தற் கள் உற்பத்திப் பகுதி கூடிய இலா பத்தையும், மதுபானப் பகுதி கூடிய இலாபத்தையும் பெற்றமையால் சங்கம் கூடுதலான இலாபத்தை அடைந்தது. இதன் காரணமாக 2ம் தடவைக் கொடுப்பனவுகளும், கல்வி அபிவிருத்திக்காக நிதி ஏற் பாடுகளும் செய்யப்பட்டன. சங்கத்தால் கட்டாய சேமம், கல்வி, சுகா தாரம் என்பவற்றுக்காக கணிசமான தொகை வைப்புச் செய்யப்பட்ட துடன், பொது வைப்புக் கணக்குக்கு கணிசமான தொகை இவ்வாண் டில் வைப்புச் செய்யப்பட்டமை சிறப்பான அம்சமாகும்.

தொடர்ந்து 2003ம் ஆண்டிலும் திரு அ.அமலோற்பவநாயகம் அவர்களின் தலைமையிலான நெறியாளர்குழுவே செயற்பட்டது. இவ்வாண்டு சங்கம் இலாபத்தில் இயங்கியமையால், 2ம் தடவைக் கொடுப்பனவு, அங்கத்தவர்கள் கல்வி, சமூக மேம்பாட்டு நிதி ஆகிய வற்றுக்கு சுமார் ரூபா 250,000 ஒதுக்கம் செய்யப்பட்டு, இந்நிதியத் தின் செயற்பாடுகள் ஸ்திரமாக்கப்பட்டன. இக்காலத்தில் ஒவ்வொரு துறைக்கும் அதிகமாக வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டமை சிறப்பு அம்சமாகும். சகாயபுரம் -76 கிளைக்கு 5 பரப்புக் காணியை சங்கம் கொள்வனவு செய்துள்ளமை சிறப்பான விடயங்களாகும். இவ்வாண் டில் சங்கச் செயற்பாடுகளில் அதிகரிப்பு ஏற்பட்டமையும் ஓர் முக்கிய மான விடயமாகும்.



தொடர்ந்து 2004ம் ஆண்டில் தை தொடக்கம் ஐப்பசி வரை யான காலப்பகுதியில் திரு அ.அமலோற்பவநாயகம் அவர்களும், ஐப்பசியிலிருந்து திருஅ.பெனடிற் அவர்களும் தலைவர்களாகச் செயற்பட்டனர். அங்கத்தவர்களின் பிள்ளைகளின் எதிர்காலக் கல்வி யைக் கவனத்தில் கொண்டு சங்கம் தமது தொழிற்பரப்புக்குள் பாலர் பாடசாலைகளை நடாத்தி வருகின்றது. அப் பாலர் பாடசாலைகளில் நடைபெறும் விழாக்கள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் சங்கம் பொறுப்புடன் ஏற்று, நடாத்தி வருவதுடன், அயலிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் விருத்தியை கருத் திற்கொண்டு பல கல்விச் சேவைகளையும் சங்கம் ஆற்றி வந்துள் ளமை அளப்பரிய சேவையாகும். மேலும் அங்கத்தவர்களின் சமூக, பொருளாதார மேம்பாடு கருதி பாதிக்கப்பட்ட, மரணமடைந்த அங்க த்தவர்களின் கல்வி பயிலும் மாணவர்களை இனங்கண்டு, பாட சாலை உபகரணங்களை வழங்கி வருகின்றமையும், உயர் கல்வி கற்கும் மாணவர்களின் நலன்கருதி ஒவ்வொரு வருடமும் உதவு தொகையை வழங்கி வருகின்றது.



மேலும் அங்கத்தவர்களின் பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொடு பிள்ளைகளின் கல்வி நடவடிக் கைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் ஒவ்வொரு அங்கத்தவரிடம் இருந்தும் கொள் வனவு செய்யப் படும் உற்பத்தியில் போத்தல் ஒன்றுக்கு 10 சதவீதம் ஒவ்வொரு கல்வி கற்கும் மாணவர்களுக்கும் மாணவர் சேமிப்பாக அறவிடப்பட்டு, பிள்ளைகளின் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டு வருகின்றது. இதனால் பிள்ளைகள் தமது கல் விக்காக பெற்றோரில் தங்கி வாழவேண்டிய அவசியம் ஏற்படாது. தொடர்ந்து உயர் கல்விகளை கற்பதற்கும் இத்திட்டம் ஓர் வரப்பிர சாதமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்து 2005ம் ஆண்டைப் பொறுத்தவரை சங்கமானது தனது உற்பத்திகளான போத்தற் கள், பனை வெல்லம் என்பவற்றை பண்டத்தரிப்பில் உள்ள வாடகை கட்டடத்தில் உற்பத்தி செய்து வந்தது. இவ்வுற்பத்தி நடவடிக்கைகளை வியாபிப்பதற்காக விளா னில் உள்ள தனது சொந்தக் காணியில் உற்பத்தி நிலைய கட்டட வேலையை ஆரம்பித்தது. இதற்கான நிதியின் ஒரு பகுதியாக மாவ ட்ட நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால் ரூபா 500,000 வழங்கப்பட்டது. மேலும் இவ்வாண்டில் அங்கத்தவர்களின் நன்மை யான, தீமையான நிகழ்வுகளுக்கு வழங்குவதற்காக கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டு வாடகைக்கு விடப்பட்டு வருகின்றது. சங்கத்தின் தலைமைக் காரியாலயக் கட்டடத்தின் ஒரு பகுதியில் கிராமிய வங்கிச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் அங்கத்தவர்களின் கொடுப்பனவுகள் யாவும் தலைமைக் காரியாலயத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதன்பின் அவர்களின் நடவடிக்கைகள் யாவும் கிராமிய வங்கிக்கு மாற்றப்பட்டதன் பயனாக அங்கத்தவர்கள், தமக்கு தேவையான பணத்தை விரைவாகப் பெற்றுக்கொள்ளவும், சேமிப்பு பழக்கத்தை வளர்த்துக்கொள்ளவும், வங்கி நடைமுறைகளை அறிந்துகொள்ளவும், தொடர்பாடலை வளர்த்துக்கொள்ளவும் முடிந்துள்ளது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

கெயார் நிறுவனமானது அங்கத்தவர்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டில் அக்கறை கொண்டும், எமது சங்கத்தின் வளர்ச்சி கருதியும் தமது நிதியினை வழங்க முன்வந்த ஆண்டாக 2006ம் ஆண்டு சிறப்பு பெறுகிறது. இதன் பயனாக வலுவூட்டல் நிதியாக ரூபா இரண்டு இலட்சமும், வாழ்வாதார நிதியாக ரூபா 840,000 ஐயும் வழங்கியுள்ளது. இதில் வலுவூட்டல் நிதிமூலம் சங்கமானது கணினி, தளபாடங்களை கொள்வனவு செய்துள்ளது. மனித வளத்தின் மூலம் செய்யப்பட்டு வந்த கணக்கு முறைகள் யாவும் கணினிமூலம் செய்யப்பட்டு. கணக்கு வைப்பு முறைகள் இலகுபடுத்தப்பட்டன. அத்துடன் அங்கத்தவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்கத்துடன், அவர்களது தொழில் வினைத்திறனை அதிகரிக்கும் முகமாக தொழில்முயற்சிக்குத் தேவையான சைக்கிள்கள், கத்திகள் கயிறுகள் என்பன வழங்கப்பட்டன.



2007ம் ஆண்டு மீண்டும் திரு அ.பெனடிற் அவர்கள் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இக்காலத்தில் 5 பணியாளர்களுக்கு ஆளணி அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. கிளைகள்மூலம் வருமானத்தைப் பெற்றுக் கொண்டிருந்த சங்கமானது பனை சார்ந்த உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நோக்கத்துக்காகவும், மகளிருக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்காகவும், பண்டத்தரிப்பு சந்தைக் கட்டடத்தில் கற்பக நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் இவ்வாண்டில் கட்டட நிர்மானத்திற்கென பிரதேச செயலகத்தால் நன்கொடையாக ரூபா 145,000 வழங்கப்பட்டது. அங்கத்தவர்களின் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி, பின் தங்கிய கிராமமாகிய உயரப்புலம் கிராமத்துக்கு பாலர் பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பதற்கென 3 பரப்பு காணியை ரூபா 120,000க்கு கொள் வனவு செய்து வழங்கியது.

2008ம் ஆண்டு காலப்பகுதியில் தேச நிர்மாண புனரமைப்பு அமைச்சின் துரித அபி விருத்தித் திட்டத்தின் கீழ் பிரதேச செயலகத் தினால் வழங்கப்பட்ட ரூபா 20,000,000.00 நிதி யினைக் கொண்டு பனை வெல்ல கட்டடம் அமைக்கப்பட்டது. பனைசார் உற்பத்திக ளான பனை வெல்லம், பனாட்டு, பனங்களி, ஒடி யல், பாணிப் பனாட்டு,



ஒடியல் மா, புழுக்கொடியல் என்பன அதிகளவில் உற்பத்தி செய்து சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. மகளிருக்கும் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுத்துள்ளது. மேலும் எமது தொழிற் பரப்புக்குட்பட்ட சாந்தை கிராமத்துக்கு பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட ரூபா 343,000.00 நிதி மூலம் ஒப்பந்த அடிப்படையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுத்துள்ளது.

2009ம் ஆண்டில் பதநீர் உற்பத்தித் துறையை ஊக்குவிக்கும் முகமாக UNDP நிறுவனத்தினால் ரூபா 849,000.00 அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இதன்மூலம் சுண்ணாம்பு, முட்டி, கத்தி என்பவை அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் பனை வெல்ல உற் பத்தித் துறையை வலுவாக்கி அதிகரித்த உற்பத்தியை மேற் கொள்ள இந்நிதி உதவி வழிவகுக்கும். இவ்வாண்டு கள் உற்பத்தி தவிர்த்து வேறு உற்பத்திகளை அதிகரித்தது சங்க வியாபாரத்தில் கணிசமான பங்கினை வகித்து வந்துள்ளது. தொடர்ந்து இவ்வாண்டி லும் சங்கம் இலாபத்தில் இயங்கி அங்கத்தவர்களுக்கு திருப்தி கரமான சேவையை வழங்கியுள்ளது.

2010ம் ஆண்டிலும் திரு அ.பெனடிற் அவர்களின் தலைமை யிலான நிர்வாகமே நிர்வகிப்பு கடமைகளை செய்து வந்தது. சிறப் பாக இவ்வாண்டில் பனை வெல்ல உற்பத்தி மேம்பாட்டிற்காக வாழ் வாதார முகாமைத்துவ சேவைகளுக்கான மாகாண கூட்டுறவுச் சம்மேளனத்தினால் 1,500,000.00 ரூபா நிதி பெறப்பட்டு வெல்ல உற் பத்தி நிலையத்திற்கு ஒரு கட்டடம் அமைக்கப்பட்டது. இதன்மூலம் இவ்வாண்டில் மேலதிகமான உற்பத்தியை மேற்கொள்ளமுடிந்தது. சுமார் 6,000 கிலோ பனைவெல்லம் இவ்வாண்டில் உற்பத்தி செய்யப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. 77 ஆயிரம் போத்தல் பதநீர் இதன்மூலம் கொள்வனவு செய்யப்பட்டு உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.

கடந்த ஆண்டைவிட மதுசாராத உற்பத்தி அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டமை இவ்வாண்டில் முக்கிய நிகழ்வு ஆகும். இவ்வாண்டு அனைத்துப் பகுதிச் செயற்பாடுகளும் அதிகரித்து அதிக இலாபத்தை சங்கம் ஈட்டியமை குறிப்பிடத்தக்கது.

2011ம் ஆண்டைப் பொறுத்தவரையில், 2010ம் ஆண்டில் இருந்த இயக்குனர் சபை 29-04-2011இல் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் மாற்றியமைக்கப்பட்டு, திரு த.இந்திரசித்து அவர்களின் தலைமையில் புதிய நெறியாளர் குழு இயங்கத் தொடங்கியது.

இக்காலத்தில் ஏனைய தொழிற்பாடுகள் சிறப்பாக இடம்பெற்றதுடன், புதிதாக ஒரு டாட்டா வாகனம் சங்கத்தின் கள் மாற்றம் மற்றும் ஏனைய தேவைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டமையும், ஒரு நிழற்படப் பிரதியாக்கல் இயந்திரமும் கொள்வனவு செய்யப்பட்டதுடன், 89வது சர்வதேச கூட்டுறவுதினத்தை முன்னிட்டு வறுமையிலும் வறுமையான அங்கத்தவர் ஒருவருக்கு சுமார் 450,000.00 ரூபா பெறுமதியில் வீடு ஒன்று அங்கத்தவர் புனர்வாழ்வு நிதியிலிருந்து அமைத்து வழங்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

2012ம் ஆண்டில் தொடர்ந்தும் திரு தி.இந்திரசித்து அவர்களின் தலைமையிலான நெறியாளர் குழுவே இயங்கியது. இக்காலத்தில் வியாபார செயற்பாடுகள் அனைத்தும் முன்னேற்றகரமாக இருந்ததுடன், சிறப்பாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சுமார் 25 மில்லியன் பெறுமதியான பனை வெல்ல உற்பத்தித் திட்டத்திற்குரிய திட்டம் தயாரிக்கப்பட்டு இதற்கான வேலை ஆரம்பிக்கப்பட்டது. ஆசிய பிராந்தியத்திலேயே திருந்திய முறையிலான பொறித் தொகுதியைக் கொண்ட பனை வெல்ல உற்பத்தி நிலையம் அமைப்பதற்கான நிதியை UNDP நிறுவனம் வழங்க ஏற்பாடு செய்து அதற்கான நிதியினை ஒதுக்கியது. அத்துடன் சகாயபுரம் பகுதியில் ஒரு கொள்வனவு நிலையம் அமைப்பதற்காகவும் குளிரூட்டப்பட்ட வாகனம் கொள்வனவு செய்வதற்காகவும் 10 மில்லியன் ரூபாவில் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

2013ம் ஆண்டைப் பொறுத்தவரை, சங்கத்தின் நவீன முறையிலான பனை வெல்லத்தை உற்பத்தி செய்வதற்கான பொறித் தொகுதியுடனான கட்டடம் திறந்து வைக்கப்பட்டு உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டது. இருப்பினும் பொறித் தொகுதியின்மூலம் நாளடைவில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிக்கல் ஏற்பட்டது. இதன் பின் பாரம்பரிய முறையிலான உற்பத்தி முறையே நடைமுறையில் உள்ளது. கடந்த ஆண்டு திட்டமிட்டபடி பனை வெல்ல விநியோகத்திற்காக வாகனம் ஒன்று ரூபா 1,064,936.00 செலவில் கொள்வனவு செய்யப்பட்டது. தேசத்தின் மகுடம் கண்காட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியில் பங்குகொள்ளும் வாய்ப்பு கிடைக்கப்பெற்றது. இதன்மூலம் சங்கத்தின் உற்பத்திகளை விளம்பரம் செய்து சந்தை வாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பமாக இது அமைந்திருந்தது. இக்காலப் பகுதியில் பொதுமுகாமையாளராக கடமையாற்றிய திரு கி.குணரத்தினம் சேவையிலிருந்து ஓய்வுபெறும் வயதெல்லையினை அடைந்திருந்தார். இருப்பினும் சங்கத்தின் நலனுக்காக ஒரு வருட சேவை நீடிப்பு வழங்கப்பட்டது.

2014ம் ஆண்டின் தை தொடக்கம் பங்குனி 14ம்திகதி வரையான காலப் பகுதியில் திரு தி.இந்திரசித்து அவர்களும் பங்குனி 15ம் திகதியிலிருந்து திரு அ.பெனடிற் ஜெகராசா அவர்களும் தலைவர்களாக செயற்பட்டனர். கடந்த ஆண்டு சேவை நீடிப்பு வழங்கப்பட்ட பொதுமுகாமையாளரின் சேவை நீடிப்பு முடிவுறுத்தப்பட்டு, நிர்வாக சபைத் தீர்மானத்துடன் கிராமிய வங்கி முகாமையாளராக கடமையாற்றிய திரு செ.றெஜி அவர்கள் தற்காலிக பொதுமுகாமையாளராக கடமையாற்றினார். சகாயபுரத்தில் அதிகளவான அங்கத்தவர் பதநீர் உற்பத்தியில் ஈடுபடுவதனை கருத்திற்கொண்டு UNDP நிறுவனம் சங்கத்திற்கு சொந்தமான காணியில் பதநீர் சேகரிப்பு நிலையத்தினை ரூபா 11,855,993.25 செலவில் அமைத்துக் கொடுத்துள்ளது. வாகனத்தின்மூலம் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விற்பனை இடம்பெறுவதால் மக்களின் தேவைகளினை நிறைவேற்றி அதிக வரவேற்பினைப் பெற்றுள்ளது. கடந்த ஆண்டுகளைவிட உள்ளூர் விற்பனை பகுதிகள் அதிகளவான இலாபத்தினைப் பெற்றுத்தந்துள்ளன.

2015ம் ஆண்டிலும் திரு அ.பெனடிற் அவர்களின் தலைமையிலான நிர்வாகமே நிர்வகிப்பு கடமைகளை செய்து வந்தது. மேலும் நவீன கிளை அமைப்பினை கருத்திற்கொண்டும், கடற்கரைப் பகுதியினை அண்மித்து சுற்றுலா பயணிகள் வந்து செல்லும் பகுதியாகவும் உள்ள சகாயபுரத்தில் காணி கொள்வனவு செய்யப்பட்டு சாதாரண கிளை அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. தலைமைக் காரியாலயத்தின் ஒரு பகுதியில் கிராமிய வங்கி இயங்கி வருகின்றது. அங்கத்தவர், அங்கத்தவர் அல்லாதோர், பணியாளர்கள் ஆகியோரின் சேமிப்புக்களை மேற்கொள்ளல், தேவைப்படும்போது மீள வழங்குதல். மற்றும் அங்கத்தவர், பணியாளர்களுக்கு கடன் வழங்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இச்செயற்பாடுகளை கணினி மயப்படுத்தும் நோக்குடன் தற்பொழுது கணினி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

நன்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



இயக்குனர் சபை



பணியாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

வடக்கில் அடிமட்ட சமுதாயத்தில் புரட்சிகர மாற்றம் ஒன்றுக்கு வித்திட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் உதயம் பெற்று கடந்த ஆண்டின் வைகாசித் திங்கள் முதலாம் நாளுடன் நாற்பத்தைந்து ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. நீண்ட பாரம்பரியமும் கடின உழைப்பும் கொண்ட தொழில்சார் உற்பத்திச் சமூகம் ஓய்வின்றி உழைத்து முதலாளித்துவ சக்திகளுக்கு ஏணிப்படியாக இருந்த நிலைக்கு முற்றுப்புள்ளியிட்டு நான்கு தசாப்தங்கள் கூட்டுறவுக் கூடாரத்துள் நகர்ந்து வந்துள்ளன. இம்மாபெரும் எழுச்சிக்கு வித்திட்டவர்களை நன்றியோடு நினைத்து தொடர்ந்தும் வீறுநடை போட உறுதிபூணுவோம். அடக்குமுறைக்கும் அறியாமைக்கும் ஆட்பட்டு வெளிச்சத்திற்கு வரத்தயங்கிய சமூகம் இன்று நாடறிந்த கூட்டுறவுச் சங்கமாக எழுச்சி பெற்றுத் திகழ்கின்றது.

சுன்னாகம், மல்லாகம், அளவெட்டி ஆகிய முப்பெரும் பிரதேசங்களை உள்ளடக்கி 1972ம் ஆண்டு பங்குனி மாதம் முதல் நாளில் இக்கூட்டுறவுச் சங்கம் பதிவு பெற்றது. இப்பரந்த பிரதேசத்தின் இயற்கை வளமான பனையையே தம் வாழ்வுக்கும் வளமைக்குமான மூலாதாரமாகக் கொண்டு வாழும் இக்கூட்டுறவாளர்களின் அர்ப்பணிப்புடனான செயல்திறனும் கூட்டுறவுச் சித்தாந்தங்களின் படியான பங்களிப்பும் இந்நாற்பது ஆண்டுகளிலும் படிமுறை வளர்ச்சிக்கு அச்சாரமாக அமைந்துள்ளது. இக்கூட்டுறவாளர்களோடு இணைந்து பணித்தொகுதி ஆற்றிய கண்ணியமான பணிகள் வாயிலாக இக்கூட்டுறவுச் சக்கரம் முன்னோக்கி நகர்ந்து அளப்பெரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனையைப் படைத்துள்ளது. கூட்டுறவு இயக்கத்தின்பால் நம்பிக் கையுடன் ஈர்த்து வலுவூட்டி தளராது பயணிக்க காலத்தின் தேவைக் கேற்ப கரம் கொடுத்து வழிகாட்டிய கூட்டுறவு அபிவிருத்தி சார்ந்த அரச அதிகாரிகள், ஆர்வலர்கள் நகமும் சதையுமாக இணைந்து இன்றுமட்டான அசைவுகளில் ஆக்க பூர்வமாக உழைத்து நிற்கின் றார்கள்.



மாபெரும் விருட்சமாக வளர்ந்து ஆயிரமாயிரம் பேருக்கு நிழல் ஈந்து வியாபித்துள்ள இக் கூட்டுறவு அமைப்பு தன்னகத்தே பல கட்டமைவுகளை இசைவாக்கி வலுப் பெற்றுள்ளது.

சங்கம் கடந்து வந்த பாதையில் இச்சங்கத்தை வழிநடாத்திய தலைவர்கள், அவர்கள் வகித்த பதவிக் காலத்தின்படி இதன்கீழ் காணலாம்.

01. திரு.எச்.பாலசிங்கம் - பிரதமஇலிகிதர், தொழில் திணைக்களம்.
    01.05.1972 - 30.03.1973
02. திரு.பி.என்.பற்றிக் - உதவி அரச அதிபர், வலி.தெற்கு.
    01.04.1973 - 01.12.1975
03. திரு.அ.சிவபாதம் - அதிபர் - 02.12.1975 - 22.12.1977
04. திரு.எஸ்.குமாரசாமி - உதவி அரச அதிபர், வலி.தெற்கு.
    23.12.1977 - 24.04.1978
05. திரு.ச.அண்ணாமலை - சுன்னாகம் சங்க அங்கத்தவர்.
    25.04.1978 - 09.06.1980
06. திரு.பே.செல்லத்துரை - சுன்னாகம் சங்க அங்கத்தவர்.
    10.06.1980 - 12.07.1980
07. திரு.சு.சதாசிவம் - சுன்னாகம் சங்க அங்கத்தவர்.
    13.07.1980 - 12.07.1980
08. திரு.செ.முருகேசு - சுன்னாகம் சங்க அங்கத்தவர்.
    05.10.1984 - 22.02.1986
09. திரு.தே.மதுரநாயகம - சுன்னாகம் சங்க அங்கத்தவர்.
    23.02.1986 - 30.09.1989
10. திரு.க.மெய்யழகன் - சுன்னாகம் சங்க அங்கத்தவர்.
    01.10.1989 - 20.08.1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. திரு.சீ.செல்லத்துரை - சுன்னாகம் சங்க அங்கத்தவர்.
21.08.1991 - 16.03.1993
12. திரு.தே.நாகராசா - சுன்னாகம் சங்க அங்கத்தவர்.
17.03.1993 - 04.01.1995
13. திரு.தே.மதுரநாயகம் - சுன்னாகம் சங்க அங்கத்தவர்.
05.01.1995 - 05.01.1999
14. திரு.க.மெய்யழகன் - சுன்னாகம் சங்க அங்கத்தவர்.
06.01.1999 - 20.05.2001
15. திரு.தே. மதுரநாயகம் - சுன்னாகம் சங்க அங்கத்தவர்.
21.05.2001 - 17.09.2004
16. திரு.சி.பாலையா - சுன்னாகம் சங்க அங்கத்தவர்.
18.09.2004 - 23.09.2007
17. திரு.க.மெய்யழகன் - சுன்னாகம் சங்க அங்கத்தவர்.
24.09.2007 - இன்றுவரை



**கிராமிய வங்கி**

இதில் கிராமிய வங்கி அமைப்பு ஒரு பாரிய கட்டுமானமாகவும், அங்கத்தவர்களின் பொருளாதாரப் பின்னணியில் உந்துசக்தியாகவும் திகழ்கின்றது. அங்கத்தவர்களுக்கான சேமிப்புக்கள், ஓய்வு நலத்திட்டங்கள், கடன் திட்டங்கள் இவ்வங்கியின் வாயிலாக ஒழுங்கமைக்கப்பட்டு வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது. அத்துடன், முதன்முதல் 2000ம் ஆண்டில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க வரலாற்றில் எமது சங்கம் மேற்படி வங்கி அமைப்பை உருவாக்கியதும் வரலாற்றில் மைல்கல் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றவுச் சங்கங்களில் முதன்முறையாக கணினியை எமது சங்கம் 2002ல் கொள்வனவு செய்து கணக்குகளை கணனி மயப்படுத்தி யுள்ளமையும் சிறப்பம்சமாகும்.



## அசையும் அசையாச் சொத்துக்கள்

சங்கத்தின் தலைமை அலுவலகம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் சொந்தக் காணி கட்டடத்தில் இயங்கிவருகின் றது. போத்தலில் கள் அடைப்பு, மற்றும் வெல்ல உற்பத்திக்கான அலகுகளும் தலைமை அலுவலக வளாகத்தினுள் இயங்குகின்றது. சங்கம் இயக்கி வருகின்ற பதினான்கு கிளைகளில் 12 கிளைகள் சொந்த நிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் 08 கிளைகளில் கட்டடங்கள் தகுந்த முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. கன்ரர் வாகனம், முச்சக்கரவண்டி, லான்ட்மாஸ்ரர், துவிச்சக்கரவண்டி என் பன சங்கத்தின் தொழிற்பாட்டின் தேவை கருதி கொள்வனவு செய் யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

## அங்கத்தவர்களுக்கான ஓய்வூதியம்

அங்கத்தவர்களின் ஓய்வுநலத்திட்டம் பதினைந்து வருடங் களாக சிறப்புற தொழிற்படுத்தப்பட்டு வருகின்றது. 60 வயதைப் பூர்த்தி செய்தவர்கள், சுகவீனம் காரணமாக தொழிலை மேற் கொள்ள இயலாதவர்கள் இத்திட்டத்தின்கீழான நடைமுறைப் பிர மாணங்களுக்கமைய நன்மைகளைப் பெற்றுவருகின்றனர். 160 மட் டான அங்கத்தவர்களின் குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழான நன்மைகளை அனுபவிக்கின்றனர். இத்திட்டத்திற்கான வைப்பு நிதி யின் வட்டி வருமானத்திற்கீடாக மாதாந்தம் ரூபா 60,000.00 வரை நிதி பிரயோகிக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலர் பாடசாலை

01.09.1993ல் முதல் 04 பாலர் பாடசாலைகளை ஆரம்பித்த சங்கம், சங்கத்தின் தொழிற்பரப்பில் அங்கத்தவர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இன்று 23 பாலர் பாடசாலைகளை இயங்கி வருகின்றது. பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான படி வழங்கலுக்கென வைப்பிலிடப்பட்ட நிதியில் கிடைக்கும் வட்டி வருமானத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான மாதாந்தப் படி வழங்கப்பட்டு வருகின்றது. வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங். கொத்தணியின் அனுசரணையுடன் பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்குமான சீருடை வழங்கப்பட்டு வருகின்றது. பாலர் பாடசாலைகள் தோறும் நடாத்தப்பட்டுவரும் விளையாட்டு நிகழ்வுகளுக்கு சங்கத்தின் நிதிப் பங்களிப்பும் வலிகாமம் கொத்தணியின் நிதிப் பங்களிப்பும் தொடர்ச்சியாக உதவுவதான ஏற்பாடு இடம்பெறுகின்றது.



## சிறந்த அங்கத்தவர், பணியாளர் கௌரவிப்பு

கிளைகள் மட்டத்தில் தெரிவு செய்யப்படும் தகைமையுடைய அங்கத்தவர்கள் மூவர் வீதமாக அனைத்துக் கிளைகளிலும் தெரிவாகும் அங்கத்தவர்களுக்கும், பணித்தொகுதியில் இருந்து இனங்காணப்படும் பணியாளர்களுக்குமாக வருடாந்தம் சான்றிதழ், மற்றும் அன்பளிப்புப் பொருட்கள் வழங்கி கௌரவிப்பு விழா சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றது. அங்கத்தவர் மத்தியில் இது விழிப்புணர்வூட்டும் ஓர் நிகழ்வாக வரவேற்பைப் பெற்றுள்ளது.

## தேசிய மட்டப் பரிசு

2011ல் தேசிய மட்டத்தில் எமது சங்கத்திற்கு 02வது இடம் கிடைக்கப்பெற்றதும், இதற்கான பரிசு, எமது சங்கத்திற்கு குருநாகலில் நடைபெற்ற கூட்டுறவாளர் விழாவில் கிடைக்கப்பெற்றதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சங்கத்திற்குக் கிடைத்த பெருமையாகும்.

கூட்டுறவு வரலாற்றில் நடப்பாண்டு 45வது அகவைக் காலம். இக்காலமும் எதிர்காலமும் எமது அமைப்புக்கள் செவ்வனே செயலாற்றுவதற்கான காலமாகக் கொள்ளுதல் அவசியமானது. கூட்டுறவின்பால் ஒன்றிணைந்து அனைவரையும் கரமிணைத்து செயற்படுவோம் என்பதே எமது எண்ணமும் அபிலாசையுமாகும்.



## அங்கத்தவர், பணியாளர்களுக்கான சமூக நலத்திட்டம்

அங்கத்தவர், பணியாளர்களுக்கான சமூக நலத்திட்டங்களை உருவாக்கி வருடாந்தம் தைப் பொங்கலுக்கான பொருட்கள் வழங்கல், இச்சங்கத்தோடு இணைந்துள்ளவர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு பாடசாலை உபகரணம் வருடாந்தம் வழங்கல், மற்றும் அங்கத்தவர், பணியாளர்களின் பிள்ளைகளின் திருமண நிகழ்வு மற்றும் புதுமனைப் புகுவிழாவிற்கு இத்திட்டத்தின் ஊடாக ரூபா 7,500.00 பெறுமதியான அன்பளிப்புப் பொருள் வழங்குதல் போன்ற செயல்திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்தி வருகின்றது.

## கற்பக விற்பனை நிலையம்

கடந்த 2016ம் ஆண்டு சங்கத்தால் கற்பக விற்பனை நிலையம் ஒன்று நிறுவப்பட்டு அங்கத்தவர்கள், பணியாளர்களுக்கு சேவை அடிப்படையிலும், குறைந்த விலையிலும், கடன் அடிப்படையிலும் நுகர்ச்சிப் பொருட்களை விநியோகித்து வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**எமது சங்கத்தின் தற்போதைய இயக்குனர் சபை**

- ☞ தலைவர் - திரு ச.நந்தகுமார்
- ☞ உபதலைவர் - திரு நா.பொன்னுத்துரை
- ☞ செயலாளர் - திரு சி.விஜயகுமார்
- ☞ நிர்வாக உறுப்பினர்கள்:-
  - திரு உ.பகீதரன்
  - திரு வே.அருளானந்தம்
  - திரு ப.வவீஸ்குமார்
  - திரு ர.ரவீந்திரகுமார்
  - திரு மு.நாகேஸ்

**தற்போதைய எமது பணித்தொகுதி**

- ☞ பொதுமுகாமையாளர் - திரு தி.சுரேஷ்
- ☞ கணக்காளர் - திரு தி.ஞானசீலன்
- ☞ அங்.பயி.பொ.தொ.உத் - திரு க.உதயகுமார்
- ☞ களஞ்சியப் பொறுப்பாளர் - திரு க.கோகிலராசசிங்கம்
- ☞ கிராமிய வங்கி முகாமை. - திரு ஆ.அருள்நேசராசா
- ☞ கிளை மேற்பார்வையாளர் - திரு ந.தர்மராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ☞ | எழுதுநர்கள் | - செல்வி செ.மாலினி<br>- திருமதி மு.சிவநிதி<br>- திருமதி அ.கேமதர்சினி |
| ☞ | காசாளர் | - திரு செ.ஜெயச்சந்திரன் |
| ☞ | எழுதுநர்/தட்டெழுத்தாளர் | - திருமதி பா.பிரதீபா |
| ☞ | கிளை முகாமையாளர்கள் | - திரு பொ.ஜோதீந்திரராசா<br>- திரு ம.அருட்குமார்<br>- திரு இ.தயாளன்<br>- திரு செ.பாபு<br>- திரு ச.அ.சென்ஜோசப்<br>- திரு ஆ.கிரிசங்கர்<br>- திரு சு.அருட்செல்வன்<br>- திரு சி.குணராசா<br>- திரு சோ.வேல்நிருபராஜ் |
| ☞ | விற்பனை உதவியாளர்கள் | - திரு த.நாகராசா<br>- திரு சி.இரத்தினசிங்கம்<br>- திரு மா.இராகவா<br>- திரு அ.இதயராஜ்<br>- திரு தி.செல்வறொபின்சன்<br>- திரு பூ.பாஸ்கரன்<br>- திரு ஜெ.காண்டீபன்<br>- திரு ந.சசிகரன் |
| ☞ | காரியாலய உதவி | - திரு சி.தவராசா |
| ☞ | காவலாளி | - ஆ.காந்தலிங்கம் |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



இயக்குனர் சபை



பணியாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் எழுச்சிக்கும் வாழ்வுக்குமாக உதயமாகிய இக்கூட்டுறவு அமைப்பானது, 45 ஆண்டுகளில் படைத்த பல சாதனைகளை காட்டும் "கற்பக ஒளி" மலரானது சிறப்புற வாழ்த்துகின்றோம்!

✧ பனை வெல்லம் உற்பத்தி



கிராமிய வங்கிச் சேவை



கல்விச் சேவை



✧ பதநீர் உற்பத்தி



அங்கத்தவர் மாதாந்த ஓய்வூதியம் வழங்கல்

அங்கத்தவர், பணியாளர் மரண நிதி வழங்கல்

பொங்கல் பொதி வழங்கல்

✧ முன்பள்ளிகளை நிர்வகித்தல்

✧ அங்கத்தவர், பணியாளர், மகளிர்க்கான கல்விப் பயிற்சி

வாடகை வாகன சேவை



மகளிர் சுயதொழில் பயிற்சி



அங்கத்தவர், பணியாளர் சமூகநலத் திட்டத்தின் கீழ் மங்கல நிகழ்வுக்கு பரிசுப் பொருள் வழங்கல்

**சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**

மின்சார நிலைய வீதி, சுன்னாகம்

தொ.பே: 021 224 0022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பரம்பரை

பரம்பரையாக முதலாளி வர்க்கத்தினாலும் உயர் சமூகத்தினாலும் அடக்கி ஒடுக்கப்பட்டு சுரண்டப்பட்டு மிகவும் வறிய வாழ்க்கை வாழ்ந்து வந்த சீவல் தொழிலாளர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர் வடையச் செய்யவேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் கொண்ட அப் போதைய அரசாங்கத்தின் நிதி அமைச்சராக இருந்த டாக்டர் என்.எம்.பெரேரா அவர்களும் அவரது கட்சியைச் சேர்ந்த திருவா ளர்கள் தோழர் அ.விசுவநாதன் செனற்றர் நல்லையா எம்.சி. சுப்பிரமணியம் போன்றோர் இணைந்து சீவல் தொழிலாளர்களை கூட்டுறவு இயக்கத்தில் இணைப்பதற்கான திட்டத்தை வகுத்து 1972ம் ஆண்டு வைகாசி மாதம் மானிப்பாயில் மானிப்பாய் நவாலி கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் ஆரம் பிக்கப்பட்டது. இதே காலப்பகுதியில் இளவாலை கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு, மாதகல் கள் உற் பத்தி விற்பனவுச் சங்கம், சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி கள் உற் பத்தி விற்பனவுச் சங்கம் என நான்கு சிறிய சங்கங்கள் ஆரம்பிக்கப் பட்டன. இச்சங்கங்களுக்கு சிறுபான்மைத் தமிழர்களின் பிள்ளைக ளுக்கே வேலை வாய்ப்பும் வழங்கப்பட்டது.

ஆரம்பத்தில் இச்சங்கங்கள் தனித்தனியாக இயங்கியபோது பல சிரமங்களின் மத்தியில் அங்கத்தவர்களின் கள்ளைக் கொள் வனவு செய்து விற்பனவு செய்தும், விற்கப்படாத கள்ளை அகற் றியும் வந்தது. பின்னர் 1973ம் ஆண்டு மேற்குறிப்பிட்ட நான்கு சங்கங்களும் ஒன்றிணைக்கப்பட்டு வலி. தென்மேற்கு கள் உற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனவுச் சங்கம் என்ற பெயரில் செயற்பட்டது. இச்சங்கம் மாதகலிலிருந்து ஆனைக்கோட்டை வரையிலான பரப்பளவைக் கொண்டதாக அமைந்திருந்தது. இச்சங்கங்களுக்கு ஆரம்பகாலத்தில் நியமனத் தலைவர்களே நியமிக்கப்பட்டு சங்கங்களை வழிநடத்தி வந்தனர். இச்சங்கத்தின் பரப்பளவு அதிகமாக இருந்தால், அங்கத்தவரிடமிருந்து கூடுதலாக கள்ளைக் கொள்வனவு செய்து விற்கமுடியாத நிலை ஏற்பட்டது. அத்துடன் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய வரியும் கட்டமுடியாத நிலை ஏற்பட்டது. அங்கத்தவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் உலக சந்தையில் சீனியின் விலை அதிகரிப்பை கவனத்தில் கொண்டும் 1975ம் ஆண்டு நியமனத் தலைவராக நிமிக்கப்பட்ட தலைவர் திரு.சு.இராசரத்தினம் அவர்களினதும், அப்போதிருந்த நிர்வாக சபையின் அயராத உழைப்பினாலும், சண்டிலிப்பாய், மாதகல், நவாலி, சுதுமலை ஆகிய இடங்களில் பனங்கட்டித் தொழிற்சாலை அமைத்து பனங்கட்டி உற்பத்தி செய்தும், சண்டிலிப்பாயில் போத்தலில் கள் அடைத்தல், சீனி உற்பத்தி செய்தல் போன்ற தொழிற்பாடுகளைச் செய்தும் அங்கத்தவர்களை ஊக்குவித்து. அத்துடன் திட்டமிடல் பகுதியில் கடன் பெற்று சங்கத்திற்கான போத்தல் கள் அடைக்கும் தொழிற்சாலை பனங்கட்டி உற்பத்தி நிலையம் போன்ற இரண்டு கட்டடங்கள் சொந்தமாக கட்டப்பட்டன. அத்துடன் 15 கிளைகளும் நடாத்தப்பட்டன.



சங்கம் ஆரம்பிக்கப்பட்டபோது திரு.க.சண்முகலிங்கம் அவர்களும், 1974ம் ஆண்டு தொடக்கம் 1987 ஐப்பசி மாதம் வரை திரு.ச.வேலாயுதபிள்ளை அவர்களும் கூ.அ.உ.ஆணையாளராக கடமையாற்றினார். திரு.ச.வேலாயுதபிள்ளை அவர்கள் சங்கத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவராவார். 1978, 1979ம் ஆண்டு காலப் பகுதியில் வழி நடாத்துவதற்கு ஒரு நிரந்தர பொதுமுகாமையாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாதிருந்தபோது 1980ம் ஆண்டு தை மாதம் சங்கப் பணியாள ராக கடமையாற்றிய அமரர் திரு.க.சந்திரராசா அவர்கள் பொதுமுகா மையாளராக நியமிக்கப்பட்டார். இவர் பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டபோது சங்கம் நட்டத்தில் இயங்கி வந்தது. இவர் தனது விடாமுயற்சியின் பயனாகவும், சக பணியாளர்களின் ஒத்து ழைப்புடனும் சங்கத்தின் வளர்ச்சிக்காக தனது முழு நேரத்தையும் செலவழித்தார். இதன் பயனாக சங்கம் தனது பத்தாவது (10வது) ஆண்டு விழாவை வெகுவிமரிசையாக சண்டிலிப்பாய் சீரணிச் சந்தி யில் அமைந்துள்ள தலைமைக்காரியாலய வளவில் கொண்டாடி யது. 1980 ஆண்டு அங்கத்தவர்களுக்கான கட்டாய சேமம் ஒதுக் கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு அத்தொகையை வங்கியில் வைப்புச் செய்து அங்கத்தவர் இறக்கும்பொழுது அல்லது ஓய்வு பெறும்போது வட்டியுடன் வழங்கப்பட்டு வந்தது. இவ்வாறு சங்கம் வளர்ந்துவரும் காலத்தில் 1981ம் ஆண்டு பகுதியில் வியாபார மொத்த விற்பனை வரி 10% மாகக் குறைக்கப்பட்டது. இதன் விளைவாக சங்கம் இலா பம் அடையும் காலத்தில் அங்கத்தவர்களுக்கும் சங்கம் 5% கட் டாய சேமமாக ஒதுக்கி வந்துள்ளது. இது இப்படி செயற்பட்டுவரும் காலத்தில் 1983ம் ஆண்டு மீண்டும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் சங்கம் நடாத்த முடியாத சூழ்நிலை உருவாகியது. இருந்தும் கூ.அ.உ.ஆணையாளர் திரு ச.வேலாயுதபிள்ளை அவர் களின் ஆலோசனையின் பேரிலும் பொதுமுகாமையாளர் அவர்களி னதும் விடாமுயற்சியின் பயனாகவும் நலன்விரும்பிகளின் ஒத் துழைப்பைப் பெற்றும் சங்கம் தொடர்ந்தும் செயற்பட்டு வந்தது. இவ ருடைய கடமைக் காலத்தில் இரண்டு மதுபான விற்பனை நிலை யங்களும் நடாத்தப்பட்டன.

மேலும் சங்கத்தின் பரப்பளவு கூடுதலாக இருந்தபோதும் சங்கம் தொழிலாளர்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு செறிவு குறைந்த மதுசார உற்பத்தி செய்தல், போத்தலில் கள் அடைத்தல், போத்தலில் கருப்பநீர் அடைத்தல், பனங்கட்டி உற் பத்தி செய்து யாழ் மாவட்டத்திற்கு வெளியே கொண்டு சென்று விற் றல் போன்ற செயற்பாடுகளைச் செய்து இலாபம் அடைந்து வந்தது. சங்கத்தின் பரப்பளவு கூடுதலாக இருந்தமையால் சங்கத்தைக் கட்டுப்பாடாக நடாத்த முடியாத நிலையையும் அவதானித்த கூ.அ. உ.ஆணையாளர் அவர்கள், பண்டத்தரிப்புப் பகுதி அங்கத்த வர்களின் வேண்டுகோளுக்கிணங்க 01.12.1985ம் மானிப்பாய் பரிஸ் தெ.ப.பொ.உ.வி.கூ.சங்கம், பண்டத்தரிப்பு பரிஸ் தெ.ப.பொ. உ.வி. கூ.சங்கம் என இரண்டு சங்கங்களாகப் பிரித்தார். சங்கம் பிரிக்கும் போது சொத்துக்கள், பணியாளர்கள் எல்லாம் சங்கத்தின் அங்கத் தவர்களின் தொகைக்கேற்ப பிரிக்கப்பட்டன. சங்கம் பிரிக்கப்பட்ட பின்னர் மானிப்பாய் தெ.ப.பொ.உ.வி.கூ.சங்கம் மிக இலாபகரமாக இயங்கியது. மீண்டும் 1987ம் ஆண்டு ஐப்பசி மாதம் நாட்டில் நடை பெற்ற அசாதாரண சூழ்நிலையால் சங்கம் ஒன்பது இலட்சம் பெறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியான சொத்து இழப்பைச் சந்தித்தது. 1988ம் ஆண்டு கூ.அ.உ. ஆணையாளராக நியமனம்பெற்ற திரு. சபாரத்தினம் அவர்களின் ஆலோசனையின் பயனாக மீண்டும் சங்கம் புத்துயிர் பெற்றது. 1980ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் 1990 புரட்டாதி மாதம் வரை சங்கம் பலவிதமான சோதனைகளைச் சந்தித்தபோதும் அமரர் திரு.க.சந்திரராசா அவர்களின் செயற்திறமையினால் சங்கம் நிலை கொண்டு தலை நிமிர்ந்து நின்றது. இவர் 05.10.1990 தொடக்கம் கோண்டாவில் தெ.ப.பொ.உ.வி.கூ.சங்கத்திற்கு மாற்றலான பின் திரு ஜே.பி.குணரத்தினம் அவர்கள் சங்கத்தின் பொதுமுகாமையா ராக நியமிக்கப்பட்டார். இவர் பொதுமுகாமையாளராகக் கடமை யாற்றிய காலத்தில் சங்கத்தில் நடைமுறையில் இருந்துவந்த கட் டாயசேமத் திட்டத்துடன் அங்கத்தவர் சாதாரணசேமம், அங்கத்தவர் குடும்பப் பராமரிப்பு நிதி போன்ற திட்டங்களையும் உருவாக்கினார். அங்கத்தவர்களின் உழைப்பில் ஒரு பகுதியை சேமிக்கும் பழக்க மாக சாதாரணசேமம் என்ற பெயரில் கழிக்கப்பட்டு அவர்களது தனியான பெயரில் கணக்கு வைக்கப்பட்டு வந்தது. இதிலிருந்து ஒரு தொகைப் பணத்தை அங்கத்தவர்களின் தேவைக்கேற்ப கடன் வழங்கி, அதன் வட்டி சங்கத்திற்கு இலாபமாகக் காட்டப்பட்டது. இச் சாதாரண சேமத்திற்கு அங்கத்தவர்களுக்கு வட்டியை சங்கம் வழ ங்கிவந்தது. இதேபோன்று குடும்ப பராமரிப்பு நிதி அங்கத்தவர்களின் கொள்வனவுப் பணத்தில் 05 சதம் கழித்து சங்கம் மாத இலாபத்தில் 5 சதம் ஒதுக்கி வங்கியில் வைப்புச செய்து இத்தொகையின் வட்டி யில் அங்கத்தவர்களின் தேவைக்கேற்ப கடன் வழங்கி உதவி செய் தமையும், அங்கத்தவர் ஓய்வுபெறும்போது இந்நிதியிலிருந்து ஓய்வூ தியம் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



1994ம் ஆண்டு மகளிர்களையும் இச்சங்கத்தில் அங்கத்தவர் களாகச் சேர்த்து கிராமம்தோறும் மகளிர் குழுக்களை அமைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையல் பயிற்சி, பன்னவேலைப் பயிற்சி, பாலர் பாடசாலைகள் நடாத்துதல், சில்லறைப்பொருள் விற்பனை நிலையங்களைத் திறந்து மகளிர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் போன்ற சேவைகளையும் ஆற்றி வந்துள்ளது. 1994ம் ஆண்டு தையல் பயிற்சி நிலையம் மூலம் கண்காட்சி நடாத்தி சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவித்தது. பாலர் பாடசாலையில் கல்வி கற்கும் சிறார்களுக்கு இலவச சீருடை, சத்துணவு வழங்கியும் வருடாவருடம் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தியும் பரிசில்கள் வழங்கியும் ஊக்குவித்து வருகின்றது. அங்கத்தவர், பணியாளர்களின் பிள்ளைகள் பரீட்சையில் விசேட சித்தி பெற்றால் அதற்கு ஊக்குவிப்பாக ஒரு தொகைப் பணத்தை சங்கம் வழங்கி வருகின்றது. நிர்வாக சபை உறுப்பினர், பணியாளர், மகளிர் குழு, பாலர் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருக்கு சமாசம், யாழ். மாவட்ட கூ.சபை ஆகியவற்றின் உதவிமூலம் கல்வி பயிற்சி அளிக்கப்படுகின்றது. தொடர்ந்து சங்கத்தின் விற்பனைக்கு மிஞ்சும் கள்ளை வலிகாமம் கொத்தணி வடிசாலைக்கும், திக்கம் வடிசாலைக்கும் அனுப்பி அதன்மூலம் பெறப்படும் வருமானம் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுகிறது.

சங்கம் கள்ளு மட்டுமன்றி, சாராயம், போத்தல் கள் போன்றவற்றையும் விற்பனை செய்து வருமானத்தைப் பெறுவதுடன் சில்லறைப் பொருள் விற்பனை நிலையத்தின் மூலம் குறைந்த விலையில் பொருள்களை அங்கத்தவர்களுக்கு வழங்கி சேவை நோக்கத்தோடு செயற்பட்டு வருகின்றது.


மேலும் 1993 - 1994 சித்திரை மாதத்திற்கிடையில் சங்கத்திற்கென சொந்தமாக ஆறு பரப்புக் காணியுடன் காரியாலயக் கட்டடமும், சுதுமலை, நவாலி, மாகியப்பிட்டி ஆகிய இடங்களில் கிளைகள் அமைப்பதற்காக சொந்தமான காணிகளையும் கொள்வனவு செய்துள்ளது. இன்னும் தொழிலாளர்களின் வாழ்வை வளமாக்க அவர்களிடத்தில் ஒரு சேமிப்பை உருவாக்கும் பழக்கத்தை உண்டாக்க வேண்டுமென்று அமரர் க.சந்திரராசா அன்று எடுத்த முயற்சி 2000ம் ஆண்டு 02ம் மாதம் 17ம் நாள் மானிப்பாய் பனை தெ.வ.அ.கூ. சங்கத்தில் பல பிரமுகர்களின் மத்தியில் கூட்டுறவு கிரா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிய வங்கி திருமதி கோமளா திருநாவுக்கரசு அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது. இந்த நாள் அங்கத்தவர்களின் வாழ்வில் ஒரு மறக்கமுடியாத பொன்னாளாக அமைந்துள்ளது. அங்கத்தவர்கள் தனது உழைப்பிலே ஒரு பகுதியை சேமிக்கவும், ஓய்வூதியம் பெறுவோர் அதன் ஒரு பகுதியை சேமிக்கவும் பழகியுள்ளனர். இக் கிராமிய வங்கிமூலம் குறைந்த வீத வட்டிக்கு அங்கத்தவர்கள் தமது தேவைக்கேற்றவாறு கடனைப் பெறக்கூடியதாக அமைந்துள்ளது. அத்துடன் சங்கம் பனை அபிவிருத்திச் சபையின் ஒத்துழைப்புடன் பழுதடைந்த கள்ளை வினாகிரி உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக வினாகிரி கட்டடம் ஒன்று சொந்தமாகக் கட்டியுள்ளது.



1972ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் பல இன்னல்கள் மத்தியிலும் பொதுமுகாமையாளர்கள், நெறியாளர் குழு, பணியாளர்களின் சிறந்த செயற்பாட்டினால் சங்கம் சிறந்த ஒரு நிதியுடைய சங்கமாக சிறந்து விளங்கியது. அத்துடன் 25வது ஆண்டு நிறைவை ஒட்டிய வெள்ளி விழாவையும் கொண்டாடி அங்கத்தவர்கள், பணியாளர்களைக் கௌரவித்து பரிசில்களையும் வழங்கியது. வலிகாமம் பனை தெ.வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணி ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அனேகமான நன்மைகள் அங்கத்துவ சங்கங்களுக்குக் கிடைத்துள்ளன. விற்பனைக்கு மிஞ்சிய ஏராளமான கள்ளை வடிசாலைக்கு அனுப்பி அதன்மூலம் கிடைக்கும் வருமானத்தின்மூலம் அங்கத்தவர்களின் கொள்வனவுப்பணம் சிரமமின்றி வழங்கப்பட்டு வருகின்றது. அத்துடன் சங்கத்தால் உற்பத்தி செய்யப்படும் செறிவு குறைந்த மதுசாரம், பாணி, போன்றவற்றையும் வலிகாமம் கொத்தணிக்கு விற்பனை செய்து வருமானம் பெறப்பட்டு சங்கத்தை இலாபகரமாக இயக்க வழிவகுத்துள்ளது.

அத்துடன் வலிகாமம் கொத்தணியானது பொதுச்சபை உறுப்பினர், இயக்குநர் சபை உறுப்பினர், பணியாளர், மகளிர்குழு உறுப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பினர், பாலர் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருக்குக் காலத்திற்குக் காலம் பயனுள்ள பயிற்சிகளை அளித்து சங்கத்தை வழிநடாத்துவதற்கு உதவிபுரிகிறது. அத்துடன் கொத்தணி அடையும் இலாபத்தில் அங்கத்தவர்களுக்கு இரண்டாம் தடவைக் கொடுப்பனவு, அங்கத்தவர் விபத்து, ஓய்வூதியம் பாலர் பாடசாலை சிறார்களுக்கு சத்துணவு வழங்குதல் போன்ற செயற்பாடுகளையும் செய்து ஊக்குவித்து வருகின்றது. பணியாளர்கள் சங்கத்திற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர். அங்கத்தவர்களின் ஒத்துழைப்பினால் சங்கம் மேன்மேலும் வளரவேண்டும். சங்கத்தின் வளர்ச்சிமூலம் அங்கத்துவ சமூகம் எல்லா வளமும் பெறவேண்டுமென எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இந்நிலையில் எமது சங்கத்தின் பல்வேறு நலத்திட்டங்கள் பற்றி நோக்குவோம்.



## சமூக நல வேலைத்திட்டம்

1991 -1994 வரை கருப்பநீர், பாணி, வெல்ல உற்பத்தியில் ஈடுபட்டதுடன் படிப்படியாக வளர்ச்சி அடைந்து மேற்படி உற்பத்தி தொழில் திட்டம் 1995க்கு பிற்பகுதியில் இராவணுவ நடவடிக்கை இடப்பெயர்வுகளால் பாதிப்படைந்து மீண்டும் 1998இல் இருந்து இற்றைவரை கருப்பநீர், பாணி, வெல்ல உற்பத்தி திட்டம் செய்யப்படுகின்றது. 1993ல் அங்கத்துவ ஓய்வூதிய திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு தற்சமயம் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் ஓய்வுபெற்று வயது முதிர்ந்த அங்கத்தவர், விதவைகள் என்ற ரீதியில் ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது.


1993இல் முன்பள்ளி அமைப்புகள்மூலம் அங்கத்தவர்களின் பிள்ளைகளில் பாலர் கல்வி விருத்திக்கு ஊக்குவிப்பு வழங்கப்பட்டதுடன் தொடர்ச்சியாக இற்றைவரை சங்க எல்லைப்பரப்பினுள் 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பள்ளிகள் நிறுவப்பட்டு நடாத்தப்பட்டு வருவதுடன், வருடாவருடம் விளையாட்டு விழாக்கள் நடாத்தப்பட்டு பரிசில்கள் வழங்கி சிறார்களை ஊக்குவித்து வருகின்றது.

28.02.2002 இல் இருந்து திரு.க.சற்குணலிங்கம் அவர்கள் பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டு இருந்தார். இவரது காலத்தில் சங்கம் தொடர்ந்தும் இலாபத்தில் செயற்பட்டு வந்துள்ளது. 2004ம் ஆண்டு நிக்கொட் நிறுவனத்திடம் இருந்து ரூபா இரண்டு இலட்சம் (200,000.00) கிராமிய வங்கி நிதி ஆவணங்கள் பாதுகாப்பாக வைப்பதற்கு அலுமாரி, காசுப்பெட்டி (அயன் சேவ்) ஆகியன அன்பளிப்பாக பெறப்பட்டது. 2005ம் ஆண்டு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சிவனேசன் அவர்களுடன் தொடர்பு கொண்டு பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ரூபா ஒரு இலட்சம் (100,000.00) பெறுமதியான கணனி ஒன்று சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஊடாக அன்பளிப்பாக பெறப்பட்டது.



2007ம் ஆண்டு G.T.Z நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு வெல்ல உற்பத்தி நிலையத்திற்கான உபகரணங்கள் ரூபா பத்து லட்சம் (1,000,000.00) சொந்தமான கிளை இல -72 அமைந்துள்ள காணியில் நிரந்தமான கள் விற்பனை நிலையம் ரூபா நான்கு இலட்சம் (400,000.00) செலவிலும் அமைத்து வியாபார நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் சங்க நிதியில் இருந்து 2007ம் ஆண்டு ரூபா ஒரு இலட்சத்து எண்பத்தேழாயிரம் (187,000.00) பெறுமதி உள்ள நிழற்பட பிரதி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

2012ம் ஆண்டு சங்கத்தின் கிளை நிலையமான ஆனைக்கோட்டைப் பகுதியில் அமைந்திருந்த கிளை நிலையம் மூடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



இயக்குனர் சபை



பணியாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்பக ஒளி" திக்கெட்டும் சுடர்விட்டு பிரகாசிக்க

எமது நல்வாழ்த்துக்கள்!



நாம் 45 வருடங்களாக அங்கத்தவர்களுக்கும் பணியாளர்களுக்கும் மற்றும் அவர்சார்ந்தோருக்கும் பல்வேறு சேவைகளை ஆற்றி வருகின்றோம். இச்சேவைகளை முன்னெடுப்பதற்காக பல்வேறு உற்பத்தி செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில்............




**மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

(வ-து)

பிரதான வீதி,
மானிப்பாய்.

தொலைபேசி:
021 225 5109

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14-05-2014ல் இருந்து திருமதி கி.தவம் அவர்கள் பொதுமுகாமையாளராக நியமிக்கப்பட்டு தனது கடமைகளை செவ்வனே ஆற்றி வருகின்றார்.

இந்நிலையில் 2015ம் ஆண்டு வெல்ல உற்பத்தி நிலையத்திற்கு கருப்பநீர் தயாரிப்பதற்காக முப்பத்தைந்து இலட்சம் ரூபா (3,500,000.00) பெறுமதியான இயந்திரம் பனை அபிவிருத்திச் சபையினால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அதனை பாதுகாப்பதற்காக சங்கம் குளிர்சாதனப் பெட்டியினை கொள்வனவு செய்துள்ளது. அத்துடன் இக்காலத்தில் கூழாவடிப் பிரதேசத்தில் இயங்கி வந்த சங்கத்திற்கு சொந்தமான கிளைநிலையம் அரசியல் அழுத்தம் காரணமாகவும், பொதுமக்களின் எதிர்ப்பு காரணமாகவும் மூடப்பட்டது.

2016ம் ஆண்டு சங்கத்தின் கிளை நிலையமான பிப்பிலி கிளை நிலையம் அமைந்துள்ள ஐந்து பரப்பு விஸ்தீரணமுள்ள காணியினை ரூபா முப்பத்தைந்து இலட்சத்திற்கு (3,500,000.00) சங்கம் கொள்வனவு செய்துள்ளது. அங்கத்தவர்களின் உற்பத்திப் பொருளான கள்ளினை பிற மாவட்டங்கள், வடிசாலை, கொத்தணியின், அடைப்பு நிலையம் என்பவற்றிற்கு கொண்டு செல்வதற்காக டாட்டா வகை வாகனம் ஒன்று பதினேழு இலட்சத்திற்கு (1,700,000.00) கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், சங்கத்தின் காரியாலய கணக்குப் பகுதி கணனி மயப்படுத்தப்பட்டு வருகின்றது.

2017ம் ஆண்டு சித்திரை மாதம் சங்கத்தின் கிளை நிலையமான மில்லடி கிளை நிலையம் பிரதேச செயலரின் அறிவுறுத்தலால் மூடப்பட்டது. அத்துடன் காக்கைதீவுப் பகுதியில் அரசினால் நான்கு பரப்பு காணி ஒப்பந்தம்மூலம் வழங்கப்பட்டது. இக்காணியில் கிளை நிலையம் அமைப்பதற்கான வேலைகள் இடம்பெற்றுக் கொண்டு வருகின்றன.

வாழ்விலும் தாழ்விலும் கைகொடுக்கும் இந்நிறுவனம் மென் மேலும் வளர்ச்சிபெற்று நீடூழிவாழ அனைவரது ஆசீர்வாதமும் கிடைக்க வேண்டுகின்றோம்.

-நன்றி-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

ஆரம்பத்தில் காரைநகர் பிரேதசமானது சங்கானை பனை தென்னை வள அபி விருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு பகுதியாக இயங்கி வந்தது. துறைமுகம், ஊரி, மதவடி, வேரப்பிட்டி, விக்காவில், வலந்தலை போன்ற இடங்களில் கிளைகளை அமைத்து சுமார் 300 அங்கத் தவர்கள் வரையில் தொழில்புரிந்து வந்தனர்.

25.04.1991ல் ஏறப்பட்ட இராவணுவ நடவடிக்கை காரணமாக காரைநகர் கடற்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட் டது. இதனால் சீவல் தொழிலை மேற்கொண்டு வந்த அங்கத்த வர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வந்தனர். அங்கத்தவர்கள் உற்பத்தி செய்யும் கள் முழுவதையும் விற்பனை செய்யமுடியாத நிலை ஏற் பட்டதுடன் வீட்டில் விற்பனை செய்வதால் பல சிக்கல்களும் ஏற் பட்டன. அத்துடன் சேமிப்புத் திட்டங்கள், விபத்து நிதி போன்ற சலுகைகளையும் அங்கத்தவர்கள் இழந்து வருவதை கவனத்தில் கொண்டனர்.

1997இன் நடுப்பகுதியில் காரைநகருக்கான தரைவழிப் பாதை திறக்கப்பட்டு காரைநகர் மக்கள் யாழ்நகர் சென்றுவர அனு மதிக்கப்பட்டனர். ஆயினும் போக்குவரத்து கட்டுப்பாடுகள் காரண மாக சங்கானை பனை தென்னை வள சங்கமானது தன் சேவையை காரைநகருக்கு விஸ்தரிக்க முடியாத நிலை காணப்பட்டது.

இதனால் இப்பகுதிக்கென தனியான ஒரு சங்கம் உருவாக் கப்படவேண்டும் என்ற எண்ணம் அங்கத்தவர்கள் மத்தியில் உருவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியது. இதற்கு முன்னோடியாக திரு.மு.கணேஸ் அவர்கள் தனது அர்ப்பணிப்பான சேவையை வழங்கி இருந்தார். இதனடிப்படையில் மே 5, 1997ல் ஊர்காவற்துறை அரசாங்க அதிபர் திரு.J.செல்வநாயகம் தலைமையில் அங்குரார்ப்பண கூட்டத்தை கூட்டி திரு.மு.கணேஸ் அவர்களை தலைவராகக் கொண்டு 7பேர் கொண்ட நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.



இவர் சுமார் 40 அங்கத்தவர்களை பதிவுசெய்து கொண்டதுடன் இரண்டு கிளைகளையும் திறந்து இரண்டு பணியாளர்களை நாளாந்த சம்பளத்தில் நியமித்து உற்பத்திகளை கொள்வனவு செய்து விற்பனை மேற்கொண்டு வந்தார். இவர்கள் கொள்வனவுப் பெறுமதியில் இரண்டு ரூபாவினை சங்கச் செலவாக அறவிட்டு செலவினங்களை மேற்கொண்டு வந்தனர்.

சங்கமானது தொடர்ந்து செயற்பட்டு வருகையில், கூட்டுறவு திணைக்களத்தின் சட்ட நிர்வாக ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக செயற்படும் பொருட்டு கூட்டுறவு திணைக்கள அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு இணங்க 15.09.1999 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இக்காலத்தில் சங்கமானது மேலும் இரண்டு கிளைகளை திறந்ததுடன் 06 பணியாளர்களையும் நியமித்தது. இதில் சங்கத்தின் முதலாவது தற்காலிக பொதுமுகாமையாளராக திரு சி.கிருஸ்ணர் அவர்கள் நியமிக்கப்பட்டார்.



அங்கத்தவர்கள் பணியாளர்கள் சங்கத்தை வளர்க்கவேண்டும் என்ற ஆவலுடனும் விசுவாசத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துடனும் செயற்பட்ட காரணத்தினால் குறுகிய காலத்துக்குள்ளேயே குறிப்பிடத்தக்க இலாபங்களை அடைந்தது. இதனைக் கொண்டு சங்கத்திற்கென 125,0000.00 ரூபா பெறுமதியில் காரியாலயம் ஒன்றை கொள்வனவு செய்தது. மேலும் கிளை நிலையங்கள் இயங்கிய வாடகை காணிகளையும் சொந்தமாகக் கொள்வனவு செய்தது.

சங்கத்தின் தொடர்ந்து வந்த தலைவர்கள் நித்தியானந்தம், பரமேஸ்வரன் போன்றவர்களும் தொடர்ந்து வந்த முகாமையாளர்களான கோபாலகிருஸ்ணன, ஜெகநாதன் போன்றவர்களும் இக்காலங்களில் பணியாற்றிய பணியாளர்களும் கூட்டிணைக்கப்பட்ட கட்டமைப்புக்குள் மிகவும் ஒற்றுமையாக நின்று செயற்பட்டு சங்க வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டனர்.

சங்கம் தற்போது 116 அங்கத்தவர்களைக் கொண்டு செயற்படுகிறது. கடைசியாக உருவாகிய சிறிய சங்கமாயினும் போதிய நிதி வளம் காணப்படாதபோதும் இவ் அங்கத்தவர்களும் விபத்து நிதி திட்டம், மரணக்கொடைத் திட்டம், கல்வித்திட்டம் போன்றவற்றைப் பெறவேண்டும் என்ற நோக்குடன் அப்போதைய தலைவர் மு.பரமேஸ்வரன் திட்டம் ஒன்றை முன்மொழிந்து 2013ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். மேலும் கிராமிய வங்கி வழிமுறைகளும், ஏற்படுத்தப்பட்டுள்ளது. பனை வெல்லம் உற்பத்தி செய்வதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது மதுவரிச் சட்டங்களுக்கு ஏற்ப கிளைகள் அனைத்தும் நவீன முறையிலும், பாதுகாப்பானதாகவும் தலைவர் பரமேஸ்வரன் அவர்கள் தலைமையிலான நெறியாளர்குழுவால் முற்போக்கான சிந்தனையின் பிரகாரமும், பொதுமுகாமையாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்



இயக்குனர் சபை



பணியாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமலநாதனினதும் சக பணியாளர்களான அற்புதமலர், கோபால கிருஸ்ணன், பாலசிங்கம், சந்திரமோகன், அம்பிகைபாகன், சுதா கரன், தேவபாலன், கிருபாஜினி, மதினா, துரைசிங்கம் ஆகியோர் களின் அர்ப்பணிப்பான ஒத்துழைப்புடனும் சிறப்பாக அமைக்கப் பட்டுள்ளது.

தற்போது பனை அபிவிருத்திச் சபை ஒத்துழைப்புடன் பனங் களி உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளதுடன், போத்தற்கள் உற்பத்தியும் சிறப்பாக மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

அங்கத்தவர்களுக்கு அதிகளவான வருமானங்களை பெற் றுக்கொடுப்பதே சங்கத்தின் முதன்மை இலக்காக காணப்படுகின் றது.

தற்பொழுது 25-04-2017ம் திகதி சங்கத்தை சிறப்பாக கொண்டு நடாத்துவதற்கு பொ.தர்மலிங்கம் அவர்களை தலைவரா கக் கொண்டு புதிய இயக்குனர்சபை தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

அங்கத்தவர்கள் பணியாளர்கள் விசுவாசமாக செயற்படும் போது சங்கம் வளரும். இதன் மூலம் அங்கத்தவர்கள் பணியாளரின் பொருளாதாரம் உயரும்.

உயர்த்துவோம்! உயருவோம்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை தென்னை வள சங்கங்களும் அதன் உற்பத்திகளின் தரத்தினை பேணுதலும்






கி.பன்னீர்செல்வம்.
முன்னாள் ஆய்வுகூட உதவியாளர்.
பனை அபிவிருத்திச் சபை.





மரவரி முறைமூலம் கள் விற்பனையை மட்டும் மேற்கொண்டு வந்த தொழிலாளர்கள், தவறான முதலாளிகளினால் உழைப்புச் சுரண்டப்பட்டுத் தம் வாழ்வைக் கொண்டு நடத்தமுடியாமல், தமது பிள்ளைகளின் கல்வி, போஷாக்கு என்பன கேள்விக்குறியாக வாழ்ந்த காலத்தில், 1972ம் ஆண்டு இத்தொழிலாளர்களின் வாழ்வின் பொற்காலம் எனலாம். 1972ம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் கள் விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. காலப்போக்கில் அது பரிணாம வளர்ச்சியடைந்து 1975ம் ஆண்டு பனையிலிருந்து பதநீர் பெறப்பட்டு, பனைவெல்லம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உற்பத்திசெய்து விற்பனை செய்யும் சங்கங்களாகப் பரிணமித்தன. அக்காலத்தில் பல பனை வெல்லத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு பனை வெல்லம் அமோகமாக உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. அவ்வேளை சங்கங்களின் பெயர் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் எனும் பெயருடன் சிறப்புற இயங்கிவரும் வேளை பனையிலிருந்து பெறக்கூடிய உச்ச பயன்களைப் பெறும்பொருட்டு பனந்தும்பு, புழுக்கொடியல், ஒடியல் உற்பத்திகளை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது. இக்காலப் பகுதியில் சங்கங்களிற்கு நியமனத் தலைவர்கள் நியமிக்கப்பட்ட நிலைமாறி, தொழிலாளர் தலைவர்களைத் தெரிவு செய்யும் நிலை ஏற்பட்டது. ஒவ்வொரு சங்கத்திற்கும் தெரிவுசெய்யப்பட்ட தொழிலாளர் தலைவர்கள் இருந்தனர்.



இவர்களுடைய பிள்ளைகளின் கல்வி மேம்பட்டு, இவர்களின் பிள்ளைகளும் சங்கச் செயற்பாடு, மற்றும் நிர்வாக ரீதியான, அலுவலக ரீதியான செயற்பாடுகளில் அங்கம் வகிக்கும் நிலையும் ஏற்பட்டது. இதன் பயனாக தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயர்கொண்ட சங்கம், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (Palm Development Co-operative Society Ltd) எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டு இற்றைவரை இயங்கிவருவது மிகவும் வரவேற்கத் தக்கது.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கூட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுறவு ஆணையாளரின் கீழ் கூட்டுறவுச் சட்ட, திட்டங்களுக்கமைய செயற்பட்டு, உழைக்கும் தொழிலாளர்களின்மூலம் வருமானம் ஈட்டும் ஒரு கூட்டுறவு அமைப்பாக இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தில் தற்போது பத்தொன்பது (19) பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் நான்கு (4) கொத்தணிகளும் இயங்கி வருவதுடன், தமக்கான ஒரு சமாசத்தினையும் ஏற்படுத்தி பெரியதொரு நிறுவனமாக இயங்கி வருவது தெரிந்ததே.

## யாழ். மாவட்டத்தில் இயங்கும் ப.தெ.வ.அ.கூ.சங்கங்கள்

01) யாழ்ப்பாணம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்
02) அரியாலை ப.தெ.வ.அ.கூ.சங்கம்
03) ஊர்காவற்றுறை ப.தெ.வ.அ.கூ.சங்கம்
04) வேலணை ப.தெ.வ.அ.கூ.சங்கம்
05) அனலைதீவு ப.தெ.வ.அ.கூ.சங்கம்
06) கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்
07) கோண்டாவில் ப.தெ.வ.அ.கூ.சங்கம்
08) மானிப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்
09) சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்
10) தெல்லிப்பளை ப.தெ.வ.அ.கூ.சங்கம்
11) சங்கானை ப.தெ.வ.அ.கூ.சங்கம்
12) பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்
13) காரைநகர் ப.தெ.வ.அ.கூ.சங்கம்
14) பருத்தித்துறை ப.தெ.வ.அ.கூ.சங்கம்
15) கரவெட்டி ப.தெ.வ.அ.கூ.சங்கம்
16) அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ.சங்கம்
17) சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கம்
18) கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்
19) மருதங்கேணி ப.தெ.வ.அ.கூ.சங்கம்

நெடுந்தீவு இங்கு சங்கம் அமைக்கப்பட்டாலும் அது முழுமையாகச் செயற்படவில்லை என அறியப்படுகிறது. இவை தவிர, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிகளாவன,

01) வலிகாமம் கொத்தணி
02) தென்மராட்சி கொத்தணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03) வடமராட்சி கொத்தணி

04) யாழ்ப்பாணம் கொத்தணி

வலிகாமம் கொத்தணியில் அங்கம் வகிக்கும் சங்கங்களாவன,

01) கோண்டாவில் 02) மானிப்பாய்

03) சுன்னாகம் 04) தெல்லிப்பளை

05) சங்கானை 06) பண்டத்தரிப்பு

07) காரைநகர்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் எனப் பெயர் பெற்றிருந்தாலும் இச்சங்கங்களின் எல்லைப் பரப்பில் கூடுதலாகப் பனை வளம் நிறைந்தும், தென்னை வளம் சுமாராகவும் காணப்படுகின்றன. யாழ். மாவட்டத்தில் 350,000 பனை மரங்கள் உள்ளதாக பனை அபிவிருத்திச் சபை தகவல்களும், பனையியல், பனைச்செல்வம் போன்ற நூல்களின் வாயிலாகவும் நாம் அறிகிறோம். ஆயினும் இந்நூல்களின் கணிப்பின்படி வலிகாமத்தில் 1,557,500 பனைகள் உள்ளதாக அறியமுடிகிறது. இதை கீழ்வரும் அட்டவணைமூலம் அறியலாம்.



**யாழ். மாவட்டத்தில் பனைப் பரம்பல்**

| பிரிவு | | தொகை |
|---|---|---|
| **தீவகம்** | | |
| நெடுந்தீவு, வேலணை | | 824,100 |
| ஊர்காவற்றுறை | | 256,200 |
| **வலிகாமம் வடக்கு** | | |
| தெல்லிப்பளை | * | 705,000 |
| உடுவில் | * | 102,200 |
| **வலிகாமம் மேற்கு** | | |
| சங்கானை | * | 310,600 |
| சண்டிலிப்பாய் | * | 239,900 |
| கோப்பாய் | | 180,700 |
| யாழ்ப்பாணம் | | 3,900 |
| நல்லூர் | | 51,600 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **தென்மராட்சி** | | |
| | சாவகச்சேரி | 321,500 |
| **வடமராட்சி** | | |
| | கரவெட்டி | 246,800 |
| | பருத்தித்துறை | 167,500 |
| | மருதங்கேணி | 90,000 |
| **மொத்தம்** | | **3,500,000** |

நன்றி: பனைச்செல்வம். *குறியீடு- வலிகாமம் கொத்தணி பிரிவுக்குட்பட்டதைக் குறிக்கின்றது.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று சங்கங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் எட்டு சங்கங்களும், வவுனியா மாவட் டத்தில் இரண்டு சங்கங்களும், மன்னார் மாவட்டத்தில் நான்கு சங்கங்களும், பேரிணையம் ஒன்றும் இயங்கி வருகின்றன. மேற் குறிப்பிட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க ங்கள் முழுமையாக இயங்கி தொழிலாளர்களில் அக்கறையுடன் செயற்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

பனை மரம் பற்றிப் பார்க்கையில், நாருரு வேர்த் தொகுதி யுடன் மண்ணை இறுகப் பற்றிப் பிடித்து , நீண்டு, உயர்ந்து வளரும் கருமை நிறத் தண்டைக் கொண்ட கிளைகளற்ற ஒரு தாவரம். மண் ணரிப்பைத் தடுப்பதுடன், காற்றின் வேகத்தையும் தடுக்கும் ஆற்றல் கொண்ட, உறுதியான மரம். நீண்டு உயர்ந்து வளர்வதனால் மழை பெய்வதற்கும் ஒரு காரணியாக அமைகிறது.

இலங்கையில் பெரும்பாலும் பொறாசஸ்பில பெலிவ் (Borasusfla fellife) என்ற தாவரவியற் பெயர் கொண்டவை பெரு மளவில் காணப்படுவதாக கூறப்படுகிறது.

பனை மரத்திற்கு எவ்விதமான உள்ளீடுகளை இட்டோ, நீர் பாய்ச்சியோ வளர்ப்பதில்லை. அது தானே முளைத்து பயன்தரு வதற்கு 10 ஆண்டுகள் வரை ஆகும். ஆயினும் நீண்டகாலம் நிலை த்து நின்று நின்று பயன்தரும் மரம் என்பதில் ஐயமில்லை.

ஆண், பெண் என்று வேறு வேறு தாவரங்களாகக் காணப்படு கின்றன. இவற்றின் பருவ காலங்கள் பின்வருமாறு,

தை மாதம் - பங்குனி மாத நடுப்பகுதிவரை
ஆண்பனை பூந்துணர்கள் - சாற்று உற்பத்தி
பங்குனி மாத நடுப்பகுதி - ஆடி வரை
பெண்பனை பூந்துணர்கள் - சாற்று உற்பத்தி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆவணி மாதம் - ஐப்பசி வரை

பெண்பனையிலிருந்து பழ உற்பத்தி



பழத்திலிருந்து சாறு எடுத்துவிட்டு விதைகளைப் பத்திரப் படுத்தி பாத்தியமைத்தால், தை, மாசி, பங்குனி மாதங்களில் கிழங்கு களைப் பெறலாம். கிழங்கை அவி த்து காயவிட்டு பெறப்படுவது புழுக் கொடியல் எனவும், அவிக்காது நேரடி யாக காயவிட்டுப் பெறப்ப டுவது ஒடியல் எனவும் அழைக்கின் றோம். இவற்றிலிருந்து பல்வேறு வகையான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யமுடியும் என அறிகிறோம்.



**ஓலை- முற்றிய ஓலை** : மாட்டுத் தீவனமாகவும், வேலி அடைக்கவும், வீடு வேயவும் உதவும்.



**குருத்தோலை:**


நாம் அன்றாடம் வீட்டில் பாவிக்கும் பெட்டி, கடகம், பாய், நீற்றுப் பெட்டி, இடியப்பத் தட்டு, அலங்காரப் பொருட்கள், கூடை போன்ற கவர்ச்சியான பூக் கள், பூக்கூடை கள், மாலைகள், கேட்டின் போன்ற பொருட்கள் வெளி நாட்டிலிருந்து வருகைதரும் சுற்றுலாப் பயணிகளைக் கவருவ தாகவும், நல்ல வருமாணம் ஈட்டும் உற்பத்திகளாகவும் அமைகின் றன.

இவை தவிர, சாற்று உற்பத்தியிலிருந்து மதுசாரம் பெறப் படுகிறது. நொதிப்படைந்த சாற்றிலிருந்து பனை வெல்லம், பனஞ் சீனி, பனம் கற்கண்டு என்பனவும், பனம் பழத்திலிருந்து பனங்களி, பனாட்டு, பனம்பானம் என்பனவும் பெறப்படுவது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனம் உற்பத்திகள் ஒரே பார்வையில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



05-10 வயது வரையான பனை மரத்திலிருந்து கங்குமட்டடைகள் பெறப் படுகின்றன. இக் கங்குமட்டைகளை இயந் திர சாதனம்மூலம் வேறாக்கி, தூய்மை ப்படுத்தி, தரம்பிரித்து, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு நல்ல வரு மானம் ஈட்டப்படுகின்றது.

மரத்தின் மட்டையிலிருந்து நார் உரித்து இடியப்பத் தட்டு, கதிரைகள் பின்னலாம். மரத்தண்டிலிருந்து மரம், சிலாகை, அலங்காரப் பொருட்கள் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன.

இவ்வாறு பனையிலிருந்து ஆயிரக்கணக் கான உண்ணக்கூடிய உற்பத்திகளையும் உண்ணமுடியாத உற் பத்திகளையும் பெறக்கூடியதாக உள்ளன. இவை இலவசமாக ஆண்டவன் எமக்களித்த கொடை. இதை நாம் நல்லமுறையில் ஆய்வுக்குட்படுத்தி மேலும் தரமுள்ள உற்பத்திகளாகச் செய்வோ மாயின் வருமானம் மேலும் பெருக வாய்ப்புண்டு.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இவ் உற்பத்திகளில், பனங்கள்ளு போத்தலில் அடைத்தல், நேரடி யாக விற்பனை செய்தல், பதநீரிலிருந்து பனை வெல்லம், பனங்கற் கண்டு என்பன போன்ற உற்பத்திகளை மட்டும் அநேகமான சங்க ங்கள் பிரதானமாக உற்பத்தி செய்கின்றன. ஒருசில சங்கங்கள் இவை தவிர ஏனைய உற்பத்திகளையும் கற்பகம் என்று பெயர் பொறிக்கப்பட்ட விற்பனை நிலையங்கள்மூலம் விற்பனை செய்வத னையும் கண்கூடாகப் பார்க்கமுடிகிறது.

பனை உற்பத்திகள் உடலிற்கு தீங்கற்றவை. கிளைசிமிக் சுட்டி (Clucemic Index), இன்சுலின் சுட்டி (Insulin Index) என்பன எவ்வாறு உடலில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன என்ற ஆய்வினை மேற்கொள்ள பனை ஆராய்ச்சி நிறுவனம் முனைந்தது. இதற்கு பனங்கட்டி, பனாட்டு, ஒடியல் பிட்டு, புழுக்கொடியல் மா (சீனி, தேங்காய் துருவல், புழுக்கொடியல் மா) என்பன பெறப்பட்டன.

இவ் உணவுகளை தனித்தனியாக பத்துப் பத்துப் பேர் கொண்ட நான்கு குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு உண வாக உண்ணக்கொடுத்து அவர்களின் இரத்த மாதிரிகள் பரிசோ திக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரம் கிளைசிமிக் சுட்டி, இன்சுலின் சுட்டி பெறுமானங்கள் என்பன கீழ் உள்ள அட்டவணையின்படி பனா ட்டு மிகவும் குறைவான இன்சுலின் பாவிக்கப்படுவதோடு, புழுக் கொடியல் மா, பனங்கட்டி, ஒட்டியல் பிட்டு என்பன குறைவான இன்சுலின் பாவிக்கப்படுவதை அறியக்கூடியதாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Nutrient, Phytochemical Contents and GI and IS of Test

| Nutrient/ Phytochemicals | | Jaggery | Pinattu | Odiyal Pittu | Pullukodiyal Flour snak |
|---|---|---|---|---|---|
| Nutrient (g /serving weight) | Moisture | 5.71($\pm$0.01)[d] | 12.86($\pm$0.79)[c] | 56.86($\pm$0.01)[a] | 35.02($\pm$0.53)[b] |
| | Carbohydrate | 57.75($\pm$ 6.8)[a] | 45.82($\pm$ 1.5)[b] | 38.66($\pm$ 8.4)[c] | 41.68($\pm$ 8.2)[c] |
| | Protein | 0.91 ($\pm$ 0.0)[c] | 1.80 ($\pm$ 0.2)[b] | 3.25 ($\pm$ 0.2)[b] | 3.90 ($\pm$ 0.2)[a] |
| | Fat | 0.03 ($\pm$ 0.0)[b] | 0.05 ($\pm$ 0.0)[b] | 5.94 ($\pm$ 1.4)[a] | 4.11 ($\pm$ 1.3)[a] |
| | Total Dietary Fiber | 2.15 ($\pm$ 2.0)[c] | 11.98 ($\pm$ 1.9)[a] | 10.12 ($\pm$ 1.5)[b] | 7.87 ($\pm$2.7)[b] |
| | Ash | 2.05 ($\pm$ 0.0)[b] | 3.15 ($\pm$ 0.1)[a] | 0.46 ($\pm$ 0.0)[d] | 1.24 ($\pm$ 0.0)[c] |
| Phyto Chemicals (mg /serving weight) | Total Phenol Content | 176.5 ($\pm$0.03)[b] | 315.6 ($\pm$0.02)[a] | 43.7 ($\pm$ 0.01)[d] | 126.0 ($\pm$0.01)[c] |
| | Total Flavoniod Content | 28.7 ($\pm$ 0.06)[c] | 188.1 ($\pm$0.06)[a] | 0.0 | 66.6 ($\pm$ 0.02)[b] |
| CI (%) | | 53.77 | 52.90 | 52.27 | 60.33 |
| IS (%) | | 62.50 | 36.47 | 68.90 | 40.17 |

Each value in the table is represented as mean SD(n=3). Value in the same rows followed with a different letter (a-d) are significantly different ($p<0.05$)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவற்றைக் கருத்திற் கொண்டு பனை உற்பத்திகளில், உணவு உற்பத்தியில் பனை வெல்லம், பனம் சீனி, பனங்கற் கண்டு, புழுக் கொடியல், பனங்களி என்பவற்றிற்கு சந்தையில் கிராக்கி அதிகம். இதே போல் ஏனைய உற்பத்திகளுக்கும் சந்தைவாய்ப்பு அதிகமாகவுள்ளன.

பனங்கள்ளு, பனஞ்சாராயம் என்பவற்றிற்குக்கூட சந்தைவாய்ப்பு அதிகம். அயினும் ஏற்றுமதித் தரத்திற்கு இன்னமும் பனை உற்பத்திகள் யாவும் வரவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஒரு உற்பத்தியின் தரம், உள்ளீடுகள், பொதியிடல் நேர்த்தியானதா? உற்பத்தியின் பெயர் போன்றன மிகவும் உன்னிப்பாக அவதானித்தே நுகர்வோர்கள் எல்லா உற்பத்திகளையும் கொள்வனவு செய்கின்றனர்.

இவ்வாறான காலகட்டத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். பனை உணவு உற்பத்திகளில் அதன் தரத்தினை நாமும் பேணுவது அவசியம். இதற்கு உற்பத்திகளின் தரம் அறிவதற்கு வசதிகள் பொருந்திய ஆய்வுகூடம் அவசியம். உற்பத்திகள் யாவும் தொகுதிக்குத் தொகுதி ஆய்வுசெய்வது அவசியம்.

பனைவளம் வடக்கு, கிழக்கில் அதிகம் காணப்படுகின்றன. பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனைவள உற்பத்தியுடன் தென்னை வள உற்பத்திகளையும் செய்கின்றனர். தென்னையும் சங்கங்களுக்கு கணிசமான பங்களிப்பைச் செய்வது என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்தியாவில் கேளர மாநிலத்தில் தென்னை வளம் அதிகமாக உள்ளது. இதைக் கருத்தில்கொண்டு தென்னையின் பூந்துணரைப் பதப்படுத்தி அதிலிருந்து பெறப்படும் சாறு சுண்ணாம்பு சேர்க்காமல் நொதித்தலை தடைசெய்ய ஆய்வு செய்து அதிலிருந்து சீனி உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன்மூலம் இதனை நம்பி வாழும் தொழிலாளர்களின் வாழ்வை மேம்படுத்தி வருகின்றனர். அதற்கான ஆராய்ச்சி நிலையம் CPCRI (Central Plantation Crops Research Institute) எனப் பெயரிட்டு திறம்பட ஆய்வினை மேற்கொண்டு உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்தி வருகின்றனர் என்பது வெள்ளிடைமலை.

வடக்கு, கிழக்கில் அதகிமாகப் பனை உள்ளது. அதுவும் யாழ். மாவட்டத்தில் மட்டும் 35 இலட்சம் பனைகள் உள்ளன. இவற்றினைக் கருத்திற்கொண்டு இங்கேயும் பனை அபிவிருத்திச் சபை உள்ளது. இது மத்திய அரசின் நிதியுதவியுடன் ஏற்படுத்தப்பட்ட சபையாகும். இதன்மூலம் கைதடியிலும் பனை ஆராய்ச்சி நிறுவனம் (Palmyrah Research Institute (PRI)) நிறுவப்பட்டு 2012ம் ஆண்டு தொடக்கம் இயங்கி வருவது யாவரும் அறிந்ததே. பனை உணவு உற்பத்திகளில் ஆய்வுசெய்து ஆராய்ச்சி முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

உற்பத்திகளை மேற்கொள்ள பனை, தென்னை ஆகியவற்றின் மரத்தின் வட்டுப் பகுதியென்னும் ஓலைப் பகுதிக்கு காலை, மாலை இரு வேளையும் ஏறியிறங்க வேண்டும். இதனால் மிகவும் கஷ்டமென இத்தொழிலை விட்டு விலகிச் செல்பவர்களும் உள்ளனர். இதைத் தடுக்க வேண்டுமாயின் பனை தென்னைகளில் ஏறியிறங்கக்கூடிய இலகுபொறி ஒன்று அவசியம் கண்டுபிடித்து அறிமுகப்படுத்தப்படவேண்டும்.

யப்பான் போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் காட்டு மரங்களில் ஏறி கிளைகள் வெட்டுவதற்கு இலகுபொறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் ஒரு பல்கலைக்கழகம் தென்னை மரத்தில் தேங்காய் பிடுங்குவதற்கு இலகுபொறி ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இணையத்தில் இதனைப் பார்வையிடலாம். எமது பகுதியில் பனைவளம் அதிகம். இத்தொழில் அழிவடைவதிலிருந்து தடுக்க வேண்டுமாயின், பனை மரத்தில் ஏறியிறங்குவதற்கான இலகுபொறிகளை உற்பத்தி செய்வது அவசியம். தொழிலாளர்கள் விரும்பிக் கையாளக்கூடியதாகவும் இது அமைந்தால் இத்தொழில் அழிவடைவதைத் தடுக்கலாம்.

இச்சங்கங்கள், அதை நம்பி வாழும் தொழிலாளர்களின் வாழ்வு முன்னேற்றமடைய வேண்டுமாயின், பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளல் அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01) உற்பத்தியின் தரம் பேணப்படல் வேண்டும்.

02) உற்பத்தியின் உள்ளீடுகளை அறியும் ஆய்வுகூட செயற்பாடு அவசியம்.

03) பதநீர் உற்பத்தியில் முன்னேற்றம் தேவை. அதாவது சுண்ணாம்பு இன்றி பதநீர் உற்பத்திகளை மேற்கொண்டு தரமான பனைவெல்லம், பனஞ்சீனி, பனம்பாணி என்பன உற்பத்தி செய்தல்.

04) ஓலை உற்பத்தியில் பூஞ்சணம் பிடிப்பதை தவிர்த்து பாதுகாப்பான களஞ்சியப்படுத்தலைக் கண்டுபிடித்தல்.

05) பனை மரத்தில் ஏறியிறங்குவதற்கான இலகுபொறி ஒன்றைக் கண்டுபிடித்தல்.

பனை வளத்தை விருத்தி செய்வதற்காக,

01) பனை அபிவிருத்திச் சபை.

02) பனை தென்னை வள அபி. கூட்டுறவு நிறுவனங்கள்.

03) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் - (விவசாய பொறியியல் பீடம், பனைசார் விஞ்ஞான பொறியியல் பீடம்)


ஆகிய மூன்றும் முக்கிய பங்களிப்பு வழங்கும் நிறுவனங்களாகும். இம்மூன்று நிறுவனங்களும் இணைந்து செயற்பட்டால் எமக்கு இயற்கையாகக் கிடைத்த பனை வளத்தினை எல்லோரும் வியக்கும் வண்ணம் அபிவிருத்தி செய்யலாம். உற்பத்தியின் தரத்தையும் அதிகரிக்கச் செய்யலாம். இதன்மூலம் இத்தொழிலை நம்பி வாழும் மக்களின் வாழ்வாதாரம் மேலும் வளர்ச்சியடையும் என்பது திண்ணம்.

**பனை வளம் பெருக்கி, வளமுடன் வாழ்வோம்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சியில்



## சமாசத்தின் வகிபாகம்

பொ.செல்வராசா, பொதுமுகாமையாளர்
வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்.

1972ம் ஆண்டு பனை வளம்சார் சமூகத்தின் உயர்வுக்காக பாடுபட்ட சமூக முன்னோடிகளின் அயராத முயற்சியினால் தோற்றம் பெற்றதே பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் ஆகும். இவ் அமைப்புக்களை உருவாக்கப் பாடுபட்டவர்களான திரு.ஜி.நல்லையா, திரு.சு.நடேசு, திரு.க.நடராசா (ஆசிரியர்) அவர்களுடன் இன்னும் பலர் உள்ளனர். அவர்கள் என்றும் நன்றியுடன் நினைவு கூரப்படவேண்டியவர்கள்.

ஆரம்பத்தில் வடமாகாணத்தில் 18 பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு இயங்கி வந்தன. இவ்வாறு தனித்தனியாக இயங்கிய சங்கங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து அங்கத்தவர்களின் அனைத்து தேவைகளையும் நிறைவுசெய்யும் நோக்கிலும், சங்கங்களின் கோரிக்கைகளை ஒரே குரலில் திணைக்களங்கள் மட்டத்திற்கு எடுத்துச் செல்லும் நோக்கிலும் ஒருங்கிணைந்த திட்டங்களை தீட்டி சங்கங்களை வழி நடத்தவும், உயர்மட்ட நிறுவனம் ஒன்றின் அவசியம் இத்துறைசார்ந்த முன்னோடிகளால் உணரப்பட்டதன் விளைவாக 1979ம் ஆண்டு வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசம் தோற்றம் பெற்றது.

இன்று இச் சமாசமானது 18 சங்கங்கள், 03 கொத்தணிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு(01) சித்தவைத்திய கூட்டுறவுச் சங்கம் ஆகிய 23 அமைப்புக்களை அங்கத்துவமாகக் கொண்டு, யாழ்ப்பாணம் சுண்டுக்குழியில் தனக்கென நிரந்தர காணி, கட்டட வசதிகளுடன், பாரிய நிதிச்செலவில் கூட்டுறவாளர் மண்டபம் என்னும் கூட்ட மண்டபத்தினையும் அமைத்து, அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்கள் அவர்களது பிள்ளைகளிற்கான அரிய பல செயற்திட்டங்களைத் தீட்டி வெற்றிகரமாக தனது சேவைகளை ஆற்றி வருகின்றது. சமாசம் தனது செயற்பாடுகளை மிகவும் நேர்த்தியான முறையில் கொண்டு செல்வதற்கு இதனை நிர்வகித்த தலைவர்களின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளே காரணமாக அமைந்தன. சமாசத்தில் இதுவரை 15ற்கு மேற்பட்ட தலைவர்களும், 10ற்கும் மேற்பட்ட பொதுமுகாமையாளர்களும் சிறந்த பணிகளை முன்னெடுத்துள்ளனர்.

## அங்கத்துவ சங்கங்களிற்கான சமாசத்தின் சேவைகள்

### காகிதாதி உபகரணம் விநியோக சேவை

அங்கத்துவ சங்கங்களிற்கு தேவையான படிவங்கள் மற்றும் காகிதாதிகள், எழுதுகருவிகள், போத்தற் கள்ளிற்கான லேபல்கள், சாராய லேபல்கள், சித்த வைத்திய கூட்டுறவு சங்கத்திற்கான மருந்துப் பொருட்களிற்கான லேபல்கள், சங்கங்களின் பெயர் பொறித்த பஞ்சாங்க கலண்டர்கள், டயறிகள் என்பன சமாசத்தின் ஒவ்செற் அச்சியந்திரத்தின் மூலம் அச்சிடப்பட்டு சிறந்த முறையில் காகிதாதி வழங்கல் சேவையை சமாசம் செய்து வருகின்றது. அத்துடன் அங்கத்துவ சங்கங்களின் கள் போத்தலடைப்புத் தேவைகளிற்கான சோடா மூடிகளையும் சமாசம் கொழும்பில் இருந்து தருவித்து நியாய விலையில் வழங்கி வருகின்றது. இச் செயற்பாடுகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் அனைத்துச் சங்கங்களும் ஒரே விலையில் இவற்றினை கொள்வனவு செய்து கணக்கு வைப்பினை சிறந்த முறையில் பேணு வதன் ஊடாக சங்க வளர்ச்சிக்கு சமாசம் துணை நிற்கின்றது.




## விபத்து ஓய்வூதிய நலத்திட்ட சேவை

சமாசத்தினால் அங்கத்தவர்களின் தொழிலின் அபாயத்தி னையும் அதனால் அவர்களிற்கு ஏற்படும் விபத்துப் பாதிப்புகளிற் கான நிதி வழங்கலின் அவசியத்தன்மை பற்றியும் உணரப்பட்டு 1980ம் ஆண்டு உருவாக்கப்பட்ட விபத்து நலத்திட்ட சேவை காலத் திற்குக் காலம் வரிவுபடுத்தப்பட்டு தற்போது விபத்துப் பாதிப்பு மற்றும் விபத்து மரணத்திற்கான கொடுப்பனவுடன், 60 வயதின் பின் ஓய்வுபெறும் அங்கத்தவர்களிற்கான மாதாந்த ஓய்வூதியம் வழங் கும் திட்டமும் 2006ல் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத் திட்டத்தில் அங்கத்தவரின் மரணத்தின் பின்னர் அவரது மனைவி இதனைப் பெற்றுக்கொள்ள வழிசெய்யப்பட்டுள்ளதால் இத்தொழி லை நம்பிவாழும் தொழிலாளர்களின் குடும்பங்களிற்கு வாழ்வாதார உதவியாகவும் இந் நிறுவனங்களின்பால் நம்பிக்கையையும், பற் றுறிதியையும் வளர்த்து அங்கத்தவர்கள் தாம் சார்ந்த சங்கங்களில் விசுவாசமாக தொழிற்பட உறுதுணையாக அமைகின்றது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அங்கத்தவர்கள், பணியாளர்களிற்கான கூட்டுறவு கல்விப் பயிற்சியளிப்பு சேவை

சமாசத்தின் முக்கிய தொழிற்பாடாக அங்கத்துவ சங்கங்களின் உறுப்பினர்கள், பணியாளர்கள், மகளிர்குழு உறுப்பினர்கள், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டுறவுக் கல்விப் பயிற்சியளிப்புக்கள் அமைகின்றன. இதற்கென சமாசத்தில் கல்வி பயிற்சியளிப்பு உத்தியோகத்தருக்கான ஆளணி அங்கீகாரம் பெறப்பட்டு நிரந்தர கல்வி உத்தியோகத்தர் நியமனம் செய்யப்பட்டு பயிற்சியளிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

கூட்டுறவு என்றால் என்ன?, ஒரு கூட்டுறவு நிறுவனத்தை வழி நடாத்துவதற்கு இருக்க வேண்டிய கூட்டுறவு பண்புகள் என்ன? என்பதைத் தெரிந்துள்ள கிளைக்குழு, நிர்வாகசபை, பொதுச்சபை உறுப்பினர்களால் மட்டுமே ஒரு கூட்டுறவுச் சங்கத்தை வெற்றிகரமாக வளர்ச்சிப் பாதையில் கொண்டு நடாத்த முடியும் என்பதாலும், கூட்டுறவு கல்வியறிவு பெற்றுள்ள ஒரு பணியாளரிடமிருந்தே சங்கங்கள் வினைத்திறனுடனான பணியாற்றலை பெற்றுக்கொள்ள முடியும் என்பதாலும் சமாசம் யாழ். மாவட்ட கூட்டுறவு சபையுடன் இணைந்தும், கூட்டுறவுத் திணைக்களத்துடன் இணைந்தும் சங்க மட்ட சமாசமட்டக் கல்விப் பயிற்சிகளை நடாத்தியும், கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியினால் நடாத்தப்படும் கல்விப் பயிற்சிகளில் பணி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளர்கள், அங்கத்தவர்கள் பங்குபற்றி பயன்பெற உதவியும் கல்விக்கான தனது சேவையை செய்து வருகின்றது. இதன்மூலம் சங்கங்கள் சிறந்த பணித்தொகுதியுடன் சிறப்பாக செயலாற்ற சமாசம் தனது அங்கத்துவ சங்கங்களிற்கு துணை நிற்கின்றது. இச் சேவைக்காக அங்கத்துவ சங்கங்கள் ஒவ்வொன்றும் மாதாந்தம் கல்வி நிதியாக ரூபா 500/= வழங்கி உதவி வருகின்றமை குறிப் பிடத்தக்கது.



## கற்பகம் பத்திரிகை சேவை

அங்கத்துவ சங்கங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் அங் கத்தவர்களிற்கான சேவைகள் மற்றும் உற்பத்தி, விற்பனவு தொடர் பாக எழுகின்ற பிரச்சினைகள், சங்கங்களிற்கான தேவைப்பாடுகள் போன்றவற்றை தொழிலாளர்களின் குரலாக வெளிக்கொணரும் முக மாக ஆரம்பிக்கப்பட்டதே கற்பகம் பத்திரிகை சேவை.

இது ஆரம்ப காலங்களில் சஞ்சிகை வடிவில் மாதாந்தம் வெளிவந்தது. தற்போது பத்திரிகை வடிவில் சமாசத்தின் அச்சகத் தில் ஒவ்செற் அச்சியந்திரம் மூலம் அழகுற அச்சிடப்பட்டு பலவித மான ஆக்கங்களை தாங்கி வெளிவருகின்றது. அங்கத்தவர்கள், பணியாளர்கள், துறைசார்ந்தோருக்கு இப்பத்திரிகை விநியோகிக் கப்பட்டு வருகின்றது. இச்சேவை மூலம் சங்கங்களின் தொழிற்பாடு கள் மற்றும் தேவைகள் வெளிக்கொணரப்படுவதுடன் கூட்டுறவு திணைக்களம் மற்றும் கலால் திணைக்களம் என்ற எமது நிறுவனங் களுடன் தொடர்புபட்ட அதிகாரிகள் மட்டத்திற்கும் பொதுமக்களிற் கும் எமது நிறுவனங்களின் தேவைப்பாடுகளையும், பனை வளம்சார் உற்பத்திப் பொருட்கள் பற்றிய விபரத்தினையும் சேவைகளையும் தெரியப்படுத்தி இந்நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், வியாபார நடவ டிக்கைக்கும் சமாசம் துணை நிற்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சகாய நிதியத்திட்டம்

சமாசத்தினால் 2015ம் ஆண்டு அங்கத்துவ நிறுவனங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளிர்குழு உறுப்பினர்கள், முன் பள்ளி ஆசிரியர்கள், அங்கத்தவர், பணியாளர்களின் குடும்ப உறுப் பினர்களை இணைத்து சகாய நிதியத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள் ளது. இதில் இணைந்துள்ள உறுப்பினர்கள் ஒவ்வொரு வருட ஆரம் பத்திலும் ரூபா 1000/= மட்டும் செலுத்தி தமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்தி வருதல் வேண்டும்.

இத்திட்டத்தில் இணைந்துள்ள உறுப்பினர் ஒருவர் பின்வரும் வகையில் மரணமடையும் சந்தர்ப்பத்தில் சமாசத்தினால் ரூபா 200,000/= (இரண்டு இலட்சம் ரூபா) மரண சகாய நிதி வழங்கப்பட்டு வருகின்றது.

1. விபத்து மரணம்.
2. தொழிற்படும்போது மரத்தில் இருந்து தவறிவிழுந்து மரணம்.
3. நீரில் மூழ்கி மரணம்.
4. தீயினால் ஏற்படும் மரணம்.
5. விஷத்தினால் ஏற்படும் மரணம்.
6. மின்சாரம் தாக்கி ஏற்படும் மரணம்.
7. மாரடைப்பினால் ஏற்படும் மரணத்திற்கு ரூபா 50,000/= மரண சகாயநிதி வழங்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் இத்திட்டத்தில் இணைந்துகொண்ட உறுப்பினர் ஒருவர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறும் சந்தர்ப்பத்தில் மருத்துவ சான்றிதழிற்கமைய ஒரு நாளிற்கு 1,000/= ரூபா என்ற வீதப்படி சிகிச்சைபெற்ற மொத்த நாட்களுக்கும் வைத்திய நிதி வழங்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தினை செயற்படுத்துவதன்மூலம் இந்நிறுவனங்களை சார்ந்தவர்களின் எதிர்காலத்தின் மீதான அச்சத்தை நீக்கி, தாம் சார்ந்த நிறுவனம் மீதான நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு சமாசம் துணை நிற்கின்றது. பாரிய நிதி நிறுவனங்களின் காப்புறுதி திட்டத்திற்கு ஈடாக சமாசம் தனது அங்கத்துவ நிறுவனங்கள், அவர்கள் சார்ந்த சமூகமட்டத்தில் ஏற்படுத்திய இவ் சகாயநிதியத் திட்டம் அங்கத்துவ சேவையில் ஒரு மைல்கல்.



## சமூக அபிவிருத்தி திட்டம்

இத்திட்டத்தினை சமாசம் 2007ம் ஆண்டில் இருந்து செயற்படுத்தி வருகின்றது. இதன்மூலம் அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியாளர்கள், அவர்களை சார்ந்தோர் பல இலட்சக் கணக்கான நிதி உதவிகளைப் பெற்றுவருகின்றனர்.

### ✧ பாரிய சத்திரசிகிச்சைக்கான வைத்திய நிதி உதவி.

இவ் உதவித்திட்டத்தின்கீழ் சமாசத்தின் அங்கத்துவ நிறுவனங்ஷகளின் உறுப்பினரோ அல்லது பணியாளரோ நோய்ப்பாதிப்பிற்குட்பட்டு சத்திரசிகிச்சைகள் செய்யப்படும் சந்தர்ப்பத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திய நிதியுதவி வழங்கப்படுகின்றது. அத்துடன் உறுப்பினரின் மனைவி மற்றும் பணியாளரின் கணவன்/மனைவி சத்திரசிகிச்சைக் குட்படும் சந்தர்ப்பத்திலும் இந்நிதி உதவியைப் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

## ✧ கல்விக்கான நிதி உதவிகள்



### 5ம் ஆண்டு புலமைப் பரிசில் நிதி

இவ் உதவித்திட்டத்தின்கீழ் சமாசத்தின் அங்கத்துவ நிறுவனங்களின் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள், முன்பள்ளி ஆசிரியர்களின் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்தினைக் கருத்திற் கொண்டு வருடாந்தம் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர்களுக்கு தலா ரூபா 5,000/= வைப்பு நிதியாக வைப்புச் செய்து அவர்களிற்கு 18 வயது பூர்த்தியடைந்ததும் கல்விச் செலவுகளிற்காக வைப்புநிதியும் அதனுடன் சேர்ந்த வட்டியுமாக மீள வழங்கி வருகின்றது.

### உயர்கல்விக்கான நிதி உதவி

ஆண்டு தோறும் பல்கலைக்கழக உயர்கல்வி மற்றும் உயர் தொழில்நுட்ப கல்லூாயில் பட்டப்படிப்பினை மேற்கொள்ளும், அங்கத்தவர்கள், பணியாளர்களின் பிள்ளைகளிற்கு தலா ரூபா 10000/= வீதம் கல்வி நிதியினை சமாசம் வழங்கி அவர்களின் கல்விக்கு ஊக்குவிப்பு செய்து வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடசாலை உபகரணம் வழங்கல்**

இத்திட்டத்தின்கீழ் வருடாவருடம் தொழிற்படும் அங்கத்தவர்கள், பணியாளர்களின் பிள்ளைகளிற்கு பாடசாலை உபகரணங்களை சமாசம் வழங்கிவருகின்றது. ஒரு பிள்ளைக்கு ரூபா 350/= பெறுமதியான பயிற்சிக் கொப்பிகள், எழுதுகருவிகள் வழங்குவது குறிப்பிடத்தக்கது.

## ✧ பனை வெல்ல மானிய நிதி உதவி

இத்திட்டத்தின்கீழ் பனைவெல்ல உற்பத்தியை மேற்கொள்ளும் சங்கங்களிற்கு இவ் உற்பத்திக்கு அவர்கள் செலவிடும் தொகையில் ஒரு பகுதியை சமாசம் மானியமாக வழங்கி பனை வெல்ல உற்பத்தியை ஊக்குவித்துவருகின்றது.

## ✧ சித்தவைத்திய நடமாடும் சேவைக்கான நிதி உதவி

எமது அங்கத்துவ சங்கமான சித்தவைத்திய உற்பத்தி விற்பனை வைத்திய சேவைகள் கூட்டுறவுச் சங்கத்தின் நடமாடும் மருத்துவ சேவையை எமது அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர் சமூகம் பெற்றுக்கொள்ளும் முகமாக அவ்வப் பிரதேச சங்கங்களினால் நடமாடும் மருத்துவசேவை நடத்தப்படும் சந்தர்ப்பங்களில் அச்சங்கங்களிற்கு ஏற்படும் செலவிற்கான சமாச உதவு தொகையாக ரூபா 5,000/= வழங்கப்படுகின்றது.

மேற்படி நிதி வழங்கல் நடவடிக்கைமூலம் சமாசம் அங்கத்துவ நிறுவனங்களின் உறுப்பினர்கள், பணியாளர்கள், அவர்கள் சார்ந்த சமூகத்தின் கல்வி மற்றும் மருத்துவ தேவைகளிற்கு கைகொடுத்து உதவுவதுடன் அவர்களுக்கு சங்கங்கள் மீதான நன்மதிப்பை ஏற்படுத்த துணை நிற்கின்றது.

## ✧ சர்வதேச கூட்டுறவு தின விழா

சமூக அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சமாசத்தினால் வருடாந்தம் சர்வதேச கூட்டுறவுதின விழா மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்விழாவினை முன்னிட்டு அங்கத்துவ நிறுவனங்களின் உறுப்பினர்கள், பணியாளர்கள், மகளிர்குழு உறுப்பினர்கள், முன்பள்ளி மாணவர்கள், முன்பள்ளி ஆசிரியர்களிடையே பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகள் மற்றும் கயிறிழுத்தல், துடுப்பாட்டப் போட்டிகள் என்பன நடாத்தப்பட்டு போட்டிகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெற்றிபெற்றவர்களிற்கான பரிசுப்பொருட்கள் சர்வதேச கூட்டுறவு தின விழாவில் வழங்கிக் கௌரவிக்கப்படுவதோடு, அன்றையதினம் சிறந்த அங்கத்தவர்கள், சிறந்த பணியாளர்கள் பரிசுப்பொருட்கள் வழங்கி கௌரவிக்கப்படுகின்றார்கள். இந்நிகழ்விற்கான பரிசுப் பொருட்கள் மற்றும் கேடயங்கள் கொள்வனவின்பொருட்டு பல இலட்சம் ரூபா செலவிடப்படுகின்றது.

## ✧ கல்விச்சுற்றுலா

சமாசத்தினால் சமூக அபிவிருத்தி திட்டத்தின்கீழ் அங்கத் துவ நிறுவனங்களின் உறுப்பினர்கள், பணியாளர்கள் வருடாவருடம் பகுதி பகுதியாக கல்விச்சுற்றுலாவிற்கு தென்பகுதிக்கு அழைத்துச் செல்லப்படுகின்றார்கள். இச்சுற்றுலாவிற்கான வாகன செலவினை சமாசமே பொறுப்பேற்றுக்கொள்கின்றது. இச்சுற்றுலாவில் வெற்றிகர மாக இயங்கும் கூட்டுறவு நிறுவனங்களின் செயற்பாடுகளை நேரடி யாக கண்டறியக் கூடியதாகவுள்ளதால் அவர்களின் மனதில் புத் தூக்கம் ஏற்படுகின்றது.

இவற்றுடன் சமாசத்தினால் அங்கத்துவ சங்கங்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டு மரம் வளர்ப்பின் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான சிறு பங்களிப்பை சமாசம் செய்துள்ளது.

மேலும் சமாசத்தினால் கூட்டுறவு சார்பான நூல்கள் வெளி யீடு செய்யப்பட்டுள்ளன. ஓய்வுபெற்ற கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி அதிபர் இ.சுப்பிரமணியம் அவர்கள் எழுதிய **சமூக அறிவியலும் இயற்கை விஞ்ஞானமும் கூட்டுறவும்** என்ற நூல் வெளியீடு பயனுள்ள வெளியீடு என பலராலும் பாராட்டப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அத்துடன் யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தின் ஓய்வூதியத் திட்டத்திற்கும் சமாசம் 2010ல் நிதிப்பங்களிப்பினை வழங்கி பணியாளர்களின் எதிர்கால நலனில் தனது கரிசனையை வெளிப்படுத்தியுள்ளது

மேற்படி போட்டிகள் மற்றும் கௌரவிப்பு, கல்விச்சுற்றுலா, மரநடுகை போன்ற செயற்பாடுகளால் அங்கத்தவர்கள், பணியாளர்கள், இத்துறைசார்ந்தோரின் உடல் மற்றும் உளநல விருத்திக்கு உதவுவதோடு, அங்கத்துவ சங்கங்களுடனான அவர்களின் பற்றுறுதியை வளர்க்கவும் சமாசம் வகை செய்கின்றது.

## ✧ ஆண்டு மலர்கள் வெளியீடு

பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு நிறுவனங்களின் தோற்றம், வளர்ச்சி, அவை எதிர்கொண்ட சோதனைகள், நிகழ்த்திய சாதனைகள் யாவற்றையும் வரலாற்று ஆவணமாக பாதுகாக்கும் விதமாக காலத்திற்குக்காலம் சமாசத்தினால் 10வது ஆண்டு மலர், 25வது ஆண்டு மலர், 40வது ஆண்டு மலர் வெளியீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்படி சமாசத்தின் செயற்பாடுகள் யாவும் எமது அங்கத்துவ நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் எதிர்கால நிலைத்திருப்பிற்குமான சமாசத்தின் வகிபாகமேயாகும்.

நன்றி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாசப் பதிப்பகம், கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.